
பக்கங்கள்: 12


Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஸூ சித்திரை மீ 26 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 15 (09—06—1990) SANJEAVY REGENERATIVE T MIL WEEKLY சிகரம்: 18

# தமிழ்க் குழுக்களுடன் பேச குஜ்ரால் கொழும்பு செல்வார்

## அடுத்த மாதம் சந்திப்பு



குஜ்ரால்

புதுடில்லி, ஜூன் 9

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் அடுத்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்வார். அப்போது ஈழத் தமிழ்க் குழுக்களின் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசுவார்.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவின் அனுமதியுடன் இப்பேச்சுக்கள் கொழும்பில் நடைபெறும்.

அமைச்சர் குஜ்ராலின் பயண விவரங்களை இந்திய வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளுடன் பேச்சுக்களை நடத்த இந்திய அரசு விரும்புகிறது என்று தெரிவதாக புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

இலங்கை-இந்திய கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக் கூட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் இந்திய அரசுக் குழுவிற்கு வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தலைமை வகிக்கிறார்.

இந்தக் கூட்டத்தில், வடக்கு - கிழக்கு மாகாண பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் பசுவர்.

இந்தக் கூட்டத்திற்கு தூதரக அளவில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

ஜூலை 3ஆவது வாரத்தில் கொழும்பில் இந்தக்கூட்டம் நடைபெறும்.

ஆனால் திகதி மட்டும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண பிரச்சினை, இந்தியப்படைகள் வாபஸான பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலை பற்றியும் திரு. குஜ்ரால் இலங்கை வெளியுறவு அமைச்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர் சம்பளத் திட்டம் தயாரிக்க இருவர் குழு

### சபாநாயகம் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஆசிரியர்கள் சம்பள முரண்பாடுகள் குறித்து ஆராய்ந்து சம்பளத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருவர் கொண்ட குழு ஒன்றைக்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நியமித்துள்ளார்.

இத்தகவலை கல்வி துணை அமைச்சின் இணைச்செயலாளர் திரு. வெ. சபாநாயகம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவு எழுச்சி மாநாடு நேற்றுக்காலை யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற சமயம் அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் பேசினார். அப்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், கொழும்பு உட்பட வட மாகாணத்தில் பல பகுதிகளிலும் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரிய பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் மறைந்த தலைவர் வணசிங்க, மற்றும் தமிழ்

(3ஆம் பக்கம் பார்க்க]

## பிரான்ஸில் நாடு கடத்தப்பட்ட ஈழத்தமிழர்கள் 18 பேரும் தமிழ்நாடு அகதி முகாமில்!

சென்னை, ஜூன் 9

பிரான்ஸில் இருந்து நாடு கடத்தப்பட்டு, கல்கத்தா விமான நிலையத்தில் தங்கி இருந்த 18 இலங்கைத் தமிழர்களும் நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அரச செலவில் தங்களை தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம் ஒன்றுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கோரி இவர்கள் சென்ற மாதம் 31ஆம் திகதியில் இருந்து கல்கத்தா விமான நிலைய வெளியில் முகாமிட்டிருந்தனர்.

இவர்களை அகதிகளாக ஏற்க தமிழ்நாடு சம்மதம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வெங்காய லொறி மீது சூடு! சாரதி அந்த இடத்திலேயேபலி!

### வவுனியாவில் நள்ளிரவில் நடந்தது

வவுனியா, ஜூன் 9

யாழ்ப்பாணத்தில் இருந்து வெங்காயம் ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்ற லொறி ஒன்றை மறித்து, இனந்தெரியாதவர்கள் நள்ளிரவில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் சாரதி மரணமானார்.

வவுனியாவுக்கு அப்பால் சுமார் நாலுமைல் தூரத்தில் உள்ள பூவோயப் பாலத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இறந்தவர் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த எஸ். மருதநாயகம் (36 வயது) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதே லொறியில் சென்ற கிளீனரான எம். ரட்ணம் (கோண்டாவில் தெற்கைச் சேர்ந்தவர்) வவுனியா பொலீஸில் செய்துள்ள

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆர்ஜென்ரீனா தோல்வி!

நேப்பிள்ஸ், ஜூன் 9

நேற்று ஆரம்பமான உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவதுஆட்டத்தில் தற்போதைய உலக கிண்ண சாம்பியன்களான ஆர்ஜென்ரீனா அணி கமரூண்நாட்டு அணியிடம்1-0 கோல் கணக்கில் தோற்றது.




நேற்றிரவு நேப்பிள்ஸில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தை பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் பார்த்து மகிழ்ந்தனர். [உ]

## நெதர்லாந்து தூதுவர் நேற்று கோட்டை தேவாலயத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் திரு. ஹேர்மன் புறோஜர் தமது பாரியாருடன் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

தமது நாட்டின் பாரம்பரிய சின்னமாக யாழ். கோட்டையில் அமைந்துள் டச்சுக்காரர் தேவாலயத்தை அவர் நேற்றுப் பார்வையிட்டார்.

யாழ்- ஆயர் வண. தியோகுப்பிள்ளையைச் சந்தித்த அவர்யாழ்-செயலகத்துக்கும், யாழ்-பல்கலைக்கழகத்துக்கும் விஜயம் செய்தார். (ஒ-3)

## இலங்கைக்கு அமெரிக்கா ரூ. 50 கோடி!

கொழும்பு, ஜூன் 9

இலங்கைக்கு 50 கோடிரூபா நிதி உதவி வழங்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளது.

இது சம்பந்தமான உடன்பாடு கொழும்பில் நேற்று கைச்சாத்தானது.

நான்கு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இந்த நிதி உதவி பயன்படுத்தப்படும் என்று தெரியவருகிறது. (ஒ-எ)

## புறோஜர் - பாலா சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

நெதர்லாந்துதூதுவர் திரு. ஹேர்மன் புறோஜர், விடுதலைப்புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்தை நேற்று கோண்டாவிலில் உள்ள பிராந்தியத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

வடக்கு - கிழக்கு புனரமைப்பு மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து அவர்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலம் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. புறோஜர் இன்று கொழும்பு திரும்புகிறார். (ஒ)

### சுப நேரம்

09 - 6 - 90

சனிக்கிழமை வைகாசி 26

சுபநேரம்!

02.52 - 04 22

இராகுகாலம்

08.52 -10.22

## கருத்தோவியமும் கவிதையும்




மேசையின் ஒரு சட்டம் கொத்தி அதைவீசி
மேம்படுத்த விளைந்தனன் அந்நம்பி
நாசமே நினைந்திட்ட நச்சுநாகங்கள் அவனை
நண்ணவிடாமல் சுற்றிச் சீறுதே!

## தமிழ் மாவட்டங்களுக்கிடையில் 117 ஆசிரியர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு- கிழக்கு மாவட்டங்களுக்குள் இடம் மாற்றம் பெற்ற 117 ஆசிரியர்களின் பட்டியலை வடக்கு- கிழக்கு மாகாணசபையின் கல்வி கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலின் படி 112 ஆசிரியர்கள் பிற மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றிருக்கின்றனர்.

இந்த இடமாற்றங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

யாழ், மாவட்டத்திலிருந்து திருமதி பிரேமலதா சிவபாலராஜா [வயாவிளான்ம.ம.வி] அகிலாண்டேஸ்வரி கந்தையா [வட்டு. திருஞான சம்பந்தர் வித்தி.], செ.வினாயகமூர்த்தி [கரந்தன் இராசப்பிள்ளை வித்தி.], ரேணுகா புண்ணியமூர்த்தி ஆகிய நால்வரும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்-

வயாவிளான் மத்தியமகா வித்தியாலயத்திலிருந்து திருமதி மாலினி இராஜேஸ்வரன் மட்டகளப்புக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ற ஏனையோர் விவரம் வருமாறு:-

முல்லைத்தீவிலிருந்து

இ. பரமசகாயம் (தென்னி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஈ.பி.ஆர்.எல்.எவ். மனு தாக்கல் செய்யும்?

கொழும்பு, ஜூன் 9

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்காக அரசாங்கம் அவசர சட்டம் கொண்டுவந்தால் அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வது சம்பந்தமாக ஈ. பி. ஆர். எல். எவ். சட்ட ஆலோசனை செய்து வருகிறது.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஈ. பி. ஆர். எல். எவ். செயலதிபர் பத்மநாபா செயலிழந்த மாகாணசபையின் நிதி அமைச்சர் கிருபாசரனைப் பணித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-2]

## கிளிநொச்சி முல்லைத்தீவில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 9

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆனையிறவு, பரந்தன், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய் உட்பட்ட பகுதிகளிலும் மின்தடை ஏற்படும்.

கிளிநொச்சி உபமின்நிலையத்தில் பாரிய திருத்த வேலைகள்இடம்பெற இருப்ப

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மந்திரியின் மாமனார் தீவிரவாதிகளால் கொலை!

ஸ்ரீநகர், ஜூன் 9

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் முப்தி செய்பத் முகமதுவின் மாமனாரான ஜனாப் குலாம் ஷா என்பவரை காஷ்மீர் தீவிரவாதிகள் அவரின் வீட்டுக்குள் புகுந்து சுட்டுக்கொன்றனர்.

அமைச்சரின் சொந்தக் கிராமத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது.

அமைச்சர் முப்தியின் மகளை தீவிரவாதிகள் கடந்த டிசம்பரில் கடத்திச் சென்று, பின்னர் விடுவித்தது தெரிந்ததே. (அ-எ)

## ஆசிரியர்கள் வெள்ளியன்று வேட்டியுடன் வருவார்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 9

மாணவர்களுக்கு தமிழ்க் கலாச்சரத்தை விளக்கும் வகையில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் வேட்டி அணிந்து தேசிய உடையில் வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலைகளுக்கு சமுகம் அளிப்பார்கள்.

நேற்று நடைபெற்ற தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இதுகுறித்து இணக்கம் ஏற்பட்டது.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் விடுத்த ஓர் ஆலோசனையை அடுத்தே மேற்கண்ட இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் -

" ஆசிரியர், அதிபர்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றினால் நானும் தேசிய உடையில் வருவேன்" என்றார்.

இதை ஆதரித்து சங்கச் செயலாளர் திரு. மகாசிவம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

சீருடை அலவன்ஸ் ஒன்று வழங்கப்பட வேண்டும், அல்லது புடவை மலிவு விலையில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது. (ஒ 3-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

காங்கேசன் துறை, இலங்கை வங்கிக்கு அருகாமையில் கடற் கரைக்குச் செல்லும் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு ஒன்று முடிவுறாத நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. விஜயபால சிங்கம், காட்டடைப்பு வீதி, காங்கேசன் துறை. (3771)

வெள்ளை நிற பொமரேனியன் பூச்சி நீக்கிய நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு 51, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். [3776]

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறாம் டின் ரூ 150. 00 தேவைக்கு: பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

### உடன் விற்பனைக்கு

நீண்ட காலமாக ஒருவரின் தனிப் பாவிப்பில் இருந்த 3 ஸ்ரீ நாலாயிரம் தொடர் இலக்கம் கொண்ட மொறிஸ் ஒக்ஸ்போட் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தை முன்பாக மானிப்பாய். (3770)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு V. K. M. FARM

தரமான புறொயிலர்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை 65/- No:- 12, கனகசபை லேன், (யாழ் இந்துக்கல்லூரி பின் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (13346)

### தேவை

ஒஸ்ரின் 7 மோட்டார் கார்– [வின்ரேச்] எந்த நிலையிலும் உடன் தேவை. தொடர்பு: திரு. பொன் சேகா, வை. எம் பி. எ. கட்டடம், கொழும்பு – 1.

தேனீர் சாலையில் றொட்டி அப்பம், தோசை போடவும் சமையல்கள் செய்யவும் தேனீர் போடவும் ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: புதிய நம்–130 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (13348)

அனுபவமுள்ள பைண்டர்கள் தேவை. உடன் நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/4728)

முன்னணி ஸ்தாபனத்தில் கணக்கு எழுதுவதற்கு A/L வரை படித்தவர்களிடம் (கணக்கியல் உட்பட) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நற்சான்றிதழ் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o No. 140 உதயன். (13409)

### மணமகன் தேவை

வடமராட்சி இந்து பள்ளர் குலப் பெற்றோர் தமது 28 வயது நிரம்பிய 1 இல் செவ்வாய் தோஷமுள்ள B A பட்டதாரி ஆசிரியை மகளுக்கு மணமகனை தேடுகிறார்கள். ஆசிரியர், வங்கி, அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத் தக்கது. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். சகல விபரங்களுடன் தொடர்பு. இல. 714 C/O உதயன். (3749)

### மணமகள் தேவை

யாழ்/ இந்து உயர் குல 5' 8'' உயரமுடைய 35 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற அரசாங்கத்தில் நிரந்தர பணி புரியும் மணமகனுக்கு சிவந்த அழகுடைய (சைவ போஷனமுள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்) மணமகள் தேவை. உடன் சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: C/o உதயன், 722. [3767]

### ஒலிப்பதிவுகள்

யாழ் நகரில் முதன் முதலாக ''அப்சராஸ்'' இசைக் குழு, இசை நிகழ்ச்சி ஒலிப் பதிவு நாடாக்கள் அத்துடன் இன்னும் அரிய பல இசைத் தட்டு ஒலிப்பதிவுகட்கு யாழ் நகரில் ஒரே இடம். ஆனந்தா றெக்கோட் பார் (றொட்டியாலடி சேவிஸ் நிலையம் எதிரில்) மருதனாமடம், சுன்னாகம். [3777]

### மணமகன் தேவை

யாழ், வேளாள, 36 வயது தாரமிழந்த பிள்ளைகளில்லாத கிறிஸ்ரியன் பெண்ணுக்கு அதே மத அரசாங்கத்தில் அல்லது கூட்டுஸ்தாபனத்தில் அல்லது தனியார் ஸ்தாபனத்தில் வேலைபுரியும் அல்லது சுய தொழில் புரியும் மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள் தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தனி வீடும் சனிசமான சீதனமும் வழங்கப்படும். இல 718 C/o உதயன். (3758)

### திருமண அழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிஸைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்- புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய Gas குக்கரில் பிழையா? இல்லையெனில் புதிய உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத் திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D. முஸ்தபா, யுப்ளிபஸார், 2 ஆம் மாடி, யாழ்ப்பாணம். [3765]

### வகுப்புக்கள்

Radio - T. V & Deck, Air Conditioning & Refrigaration வயறிங், வெல்டிங், வைண்டிங், மோட்டமெக்கானிசம், பிளம்பிங், Spoken English Typing புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. குறுகிய காலத்தில் சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட சன்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, 419, Stanly Road, Jaffna. (பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.) (13418)

6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டு (O/L), கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், சமூகக்கல்வி வகுப்புக்கள் புதிதாக ஆரம்பமாக உள்ளது. அனுபவமுள்ள ஆசிரியர்களால் சற்பிக்கப்படும். மீட்டல் வகுப்புக்களும் நடைபெறும். Vispa Engineering Aid Hall' 419, Stanly Road, Jaffna. (பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக. (13419)

### இலவச வகுப்பு

5 ஆம் ஆண்டு ''ஸ்கொலசிப்'' மாணவர்களுக்கான முன்மாதிரி வினா விடை இலவச வகுப்புக்கள் சனி, ஞாயிறு காலை 8 00 மணிக்கு நடைபெறுகின்றன. தொடர்பு. ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, 3-ஆம்கட்டை, சுல்லியன்காடு. (3740)

### ஆண்டு 4 பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 4ற்கு அரையாண்டு பாடத்திட்டத்திற்குள் 10 - 06 - 90 ஞாயிறு மு. ப. 10 30 — பி ப 1 00 நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும் ஆண்டு 4 இற்கு கணிதம் / தமிழ் / ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம். (3775]

### இடமாற்றம்

328, நாவலர் றோட்டில் நடைபெற்ற Vispa Engineering Aid Hall 419, ஸ்ரான்லி றோட்டில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். (13417)

### காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கில் இறால் மடத்திற்கு அண்மையில் 32 பரப்புக் காணி பகுதியாக அல்லது முழுதுமாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பொ. அருணாசலம் மாஸ்டர், தஞ்சிட்டி, அளவெட்டி, அல்லது ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (3769)

### வெளிவந்து விட்டது

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly? By Nagaratnam B. Sc. (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு எந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாகக் கணிப்பீடு செய்ய உதவும் நூல். [சி-4722]

### புறொயிலர் குஞ்சுகள்

Christombu Farm, Three-acre Farm, Bairaha Farm, புறொயிலர் குஞ்சுகளை முன் கூட்டியேபதிவுசெய்து பெற்று கொள்ளலாம். Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் மட்டும் July 15 வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். July 15 இன் பின் தேவையான அளவு Bairaha Farm புறொயிலர் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3774)

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் நாடுங்கள் FUDO 39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி 4727)

### CHICKEN MEAT

For All Kinds of Chicken meat Clean, Quick & Courtious Service Nallur Farm Centre, 19. Murugesar Lane, Muthiraisanthai, Nallur. (13358)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils Cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி 4726)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 5ற்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சைகள்ஒவ்வொருஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 – 5 வரைநடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை 3, 10-6-90 நடைபெறும் முன்னோடிப் பரீட்சை2ற்கான விளக்கங்கள் 10-6-90இல் 1.00 - 2. 45 வரை நடைபெறும். விபரங்கட்கு செல்வி எஸ்.எஸ் ஐயர் 12(36) வைமன் வீதி, நல்லூர். (13415)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [Shabra – Samy & Co அருகாமையில்] (C/4644)

### முதலாம் பிள்ளை

150 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு நாடகநூல்கள் கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- தொகையாக வாங்கினால்20 % கழிவு 30, கடைச்சாமிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (13345)

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்
**சண்முகலிங்கம் கோபி**

ஜேர்மனி சண்முகலிங்கம் – லோகா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் கோபி தனது முதலாவது பிறந்தநாளை 09 – 06 – 1990 இன்று ஜேர்மனியில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, சித்தப்பா, மாமா, அத்தைமார், அம்மப்பா, அம்மம்மா, பிரான்ஸ் சித்தப்பா குடும்பத்தினர், ஜேர்மனி மாமா, அத்தை, சவுதி சித்தப்பா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் இவரைப் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள். (13351)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி – யாழ்ப்பாணம்

**A/L 90**

**தமிழ் - குழந்தை**

**வினா-விடை வகுப்பு**

ஆரம்பம்: 09 - 6 - 1990 3. 00 மணி

(சி/4679)

**மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்**

## பதவி வெற்றிடம்

சங்க அச்சகத்தில் பைண்டிங் (Binding), இயந்திரம் இயக்குதல் ஆகிய இரு வேலைகளிலும் ஆற்றல் உள்ள ஒருவரை நாளாந்த சம்பள அடிப்படையில் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் 22 6-90 வெள்ளிக்கிழமை வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரத்தையும், தகமை பற்றிய விபரங்களையும் ரூ. 5/- செலுத்தி சங்க காசாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
(C/4725)

**யாழ்ப்பாணக் குடா நாட்டு**

## உவர்நீர் தடுப்பு

யாழ்ப்பாணக் குடா நாட்டில் பல இடங்களிலும் கிணறுகளில் உவர்நீர் கூடிக்கொண்டே வருகின்றது. இதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு புது அணுகு முறையை எங்கள் அமைச்சு தயாரிக்கின்றது. இதற்கு உதவியாக இவ்விளம்பரத்தை வாசிக்கும் அன்பர்கள் நிலத்திற்கடியில் உள்ள நன்னீர், உவர்நீர் ஆகியவற்றை சுதேச முறைப்படி (Water devine) கண்டு பிடிக்கக் கூடியவர்கள் இருந்தால் அவர்களின் பெயரையும், விலாசத்தையும் எங்கள் அமைச்சில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் இவ்விடயம் தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு அறிவித்து பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுங்கள். பதிவு செய்யும் முடிவுத் திகதி 31-07-1990 ஆகும்.

தங்களுக்குத் தெரிந்த உவர்நீர் உள்ள கிணறுகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதையும், தக்க விலாசத்துடன் அல்லது குறிப்புக்களுடன் எங்களுக்கு 31-07-1990ற்கு முன்பு தயவு செய்து விளம்பரத்தை வாசிக்கும் அன்பர்கள் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எந்திரி. செ. பரமானந்தன்,
பதில் செயலாளர்.

நீர்ப்பாசன வீ மைப்பு அமைச்சு,
உள்துறைமுக வீதி,
திருகோணமலை. (4682)

இப்போது கிடைக்கக் கூடிய மிகச்சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி

## Varathar Student's Dictionary

வரதர் மாணவர் அகராதி [ஆங்கிலம் – தமிழ்]

ஆக்கியோன்: கொக்குவில்கிழான் கா. வை. இரத்தினசிங்கம்

18400 சொற்கள் — 600 பக்கம், அறிமுக விலை ரூ 95/-

ஆங்கிலம் பயில்வோருக்கு அரிய துணை நூல்
தொகையாகப்பெறுவதற்கு,

**ஆனந்தா புத்தகசாலை**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(சி/4628)

## STRUCTURED BASIC COMPUTER PROGRAMMING

கொம்பியூட்டர் கலையை பயிலும் மாணவர்கள் தகுந்த கைநூல்கள் தமிழில் இல்லையே? என்ற கவலையை மாற்றும் நோக்குடனும், கொம்பியூட்டர் என்றால் என்ன? எவ்வாறான தொழில்பாடுகளை மேற்கொள்கிறது. எந்தெந்த வகையில் மனிதனுக்கு உதவி அளிக்கின்றது என்பவற்றுடன்.........

BASIC மொழியின் பூரண விளக்கங்களும் பயிற்சித் திட்டங்களும் அடங்கியதான தமிழ் மூலம் பயிற்சித் திட்டம். நீங்கள் எங்கு கொம்பியூட்டர் கல்வியை பயின்றாலும் எமது பாடத்திட்டம் உங்களுக்கு பயிற்சிக்கான முழு விளக்கங்களையும் தமிழில் தருவதால் நீங்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வல்லமை அளிக்கின்றது,

எமது பாடத்திட்டத்திற்கான காலம் மூன்று மாதமேயாகும். மூன்று மாதங்களுக்கும் தபால் மூலம் போதனைகள் வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூபா 150/- மாத்திரமேயாகும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு:-
S. B. C. P.

**Bright Training Centre**

**P. O. Box 162, Colombo.**

[சி-4572]

## EFFECTIVE ENGLISH WITH GRAMMAR

அனைவருக்கும் எளிதாக விளங்கக் கூடிய முறையில் ஆங்கில இலக்கணத்துடன் கூடிய **Effective English with Grammar** - 6 மாத கால பயிற்சி **G.C.E O/L** மாணவர் நலன் கருதி தபால் மூலம் நடத்தப்படுகிறது.

எமது பயிற்சியினை திறம்பட செய்யும் மாணவர்கள் **British Council** உடன் இணைந்து **University of Cambridge** நடத்தும் **First in English Certificate (London) or Proficiency in English Certificate (London)** எனும் பரீட்சைக்கு தயாரிக்கும் பயிற்சிகளையும் உள்ளடக்கிய தமிழ் விளக்கங்களுடன் கூடிய பாடத்திட்டமாகும்.

**G. C. E. (O/L)** மாணவர்கள் திறமை சித்தி பெற இப்பாடத்திட்டம் மிக மிக உறுதுணையானதாகும். ஆறுமாத கால மொத்தக் கட்டணம் ரூபா 450/- ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன், இடதுபக்க மூலையில் **Effective English** என எழுதி தொடர்பு கொள்க.

***Bright Training Centre***

**P. O. Box 162, Colombo.**

[சி-4578]

## ஓராண்டு நினைவாஞ்சலி



**அமரர் ஆ. செ. குலியேல் [நவம்]**

இம்மை: 25 – 06 – 1950
மறுமை: 09 – 06 – 1989

பாலுடன் தேனும் சங்கச் செந்தமிழ் தானும் நல்ல
யாழுடன் குழலும் கசந்து போய்விடும் நின்குரல் கேட்கின்
தீமையில் விளைந்த மாந்தர் நீழலும் தீமையென்றோ
சேய்மையில் வாழச் சென்றாய் செம்மனச் செல்வா சாந்தி

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக
இறைவனை வேண்டும் வண்ணம்
அன்புடன் வேண்டுகின்றோம்,

பிரிவாற்றுயருறும்
குடும்பத்தினர்

107/3, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (3828)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு;
வடக்குக் கிழக்கு மாகாண அரசு

## ஆலோசகர்கள் கோரப்படுகிறார்கள்

பின்வரும் விடயங்கள் சாத்தியமானவைதைப் பற்றி ஆராய்ந்து பின் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும், அவற்றிற்கான கேள்வி கூறுவதற்கும் வேண்டப்படுகின்றார்கள்.

1. மட்டக்களப்பு, யாழ்ப்பாண மாவட்டங்களில் உள்ள கடலுக்கும், கடல் கொண்ட உள் நாட்டு நிலங்களுக்கும் அணித்தாயுள்ள தாழ்ந்த நிலங்களை மீட்டெடுப்பதற்கும், நில விளிம்புகளைப் பெரிப்பிப்பதற்கும்.
2. யாழ்ப்பாணக் குடா நாட்டின் கடல் கொண்டுள்ள நிலங்களில் உவர் தடுப்புச் செய்வதற்கும், வெள்ளத் தடுப்புச் செய்வதற்கும்.
3. யாழ்ப்பாணக் குடா நாட்டில் நிலத்தின் கீழ் உள்ள நீர் வளங்களில் உவர் நீர் தடுத்தல்.

ஆலோசகர்கள் மேற்படி விடயங்களில் அனுபவம் உடையவராய் இருப்பதுடன் தங்கள் ஆராய்ச்சியைப் பழமை வாய்ந்த கருத்துக்கள் அடிப்படையில் அல்லாமல் நிச்சயமான, விஞ்ஞான பூர்வமான வழிகளில் செய்யக் கூடியவராய் இருத்தல் வேண்டும்.

இந்த ஆராய்ச்சி முடிந்த பின், அவ்விடயங்களின் தற்போதைய பௌதீக நிலைமையையும், நிவாரண விடயங்களை இலகுவாகவும், சிக்கனமாகவும் உள்ள வழிகளை நடைமுறைப்படுத்துவதற்கும், அவற்றை நடாத்தி பராமரிப்பதற்கும், இவற்றிற்கான பராமரிப்பு ஸ்தாபித, நடத்துதல் சம்பந்தமான செலவு மதிப்பீட்டுடனும் ஓர் பூரண அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்நிவாரண வேலைகள் நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வை செய்வதற்கு, தேவைப்படும்போது, தேர்ச்சி பெற்ற ஆலோசகரே நியமிக்படுவார்.

இக்கேள்விப் பத்திரங்கள் தகுதி காண் விபரங்கள் சமர்ப்பித்த பின்பேஎம் அலுவலகத்திலிருந்து காலை 8.00 மணி தொடங்கி 10.30 மணிவரை 25-06-1990 தொடங்கி 09-07-1990 வரை பெற்றுக் கொள்ளலம். இக் கேள்வி கோரல் 31-08-1990 இல் 10மணிக்கு முடிவடையும். இக்கேள்விகள் சீல் வைத்த உறையில் வைத்துபிரபல்யமாக எழுதப்பட்டு ''கேள்வி கோரல் 31-08-1990'' என்றசொற்கள் எழுதப்பட்டும் எனக்குத் தனிப்பட்ட முறையில் விலாசம் இடப்பட்டும்அனுப்புதல் வேண்டும்.

எந்திரி. செ. பரமானந்தன்,
பதில் செயலாளர்'
நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு,
உள்துறைமுக வீதி,
திருகோணமலை.

(சி/4681)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### திரு. A.R சண்முகலிங்கம்
(கெங்கநாதன்)
(புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம்)

தோற்றம் 20-03 1937 மறைவு:11-05 1990

என்னை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட என் இல்லற ஒளி விளக்கே! ''பபா'', ''பபா'' என நிமிடமொருமுறை கூப்பிடும் உங்கள் அன்புக்குரல் இப்போதும் என் காதுகளில் ஒலிக்கிறது. என்றும் என்னை விட்டுப் பிரியாமல் உறுதுணையாக இருந்து வழி நடத்திய என் தெய்வமே! உங்கள் உடல் என்னை விட்டுப் பிரிந்து சென்றாலும், நீங்கள் என்னுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன்.

நாளை ஞாயிற்றுக்கிழமை 10-06-1990 இல் எனது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் வீட்டுக் கிரியை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன். 14-05-1990இல் அன்று நடைபெற்ற ஈமச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், அயலவர், நண்பர்கட்கும், தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் அன்னாரது பூதவுடலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவர பேருதவிகள் புரிந்த கோட்டை புகையிரத நிலைய அதிபர்களுக்கும், மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கட்கும், யாழ்ப்பாண புகையிரத நிலையத்தைச் சேர்ந்த பிரதம புகையிரத நிலைய அதிபர்: இதர புகையிரத நிலைய அதிபர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இங்ஙனம்
மனைவி
தர்மரஞ்சிதம் சண்முகலிங்கம்.

56, பலாலி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (13336)


முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ்

## பயிற்சி பெறுவோர் தமக்கும் சமுதாயத்துக்கும்உதவவேண்டும்

தாளையடி ஜூன் 9

'' முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுபவர்கள், அதன் மூலம் தமக்கும், தாம் வாழும் சமுதாயத்துக்கும் உதவுதல் வேண்டும் ''

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம், மருதங்கேணி அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில், இயந்திரப் படகு மோட்டார் இயந்திரம் நிறுத்தலுக்கான முறைசாராக் கல்வித்திட்ட பயிற்சி நெறியை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

மருதங்கேணி அரசினர் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:-

'' சான்றிதழை மட்டும் பெறும் நோக்குடன் முறைசாராக் கல்வித்திட்ட பயிற்சியைப் பெறுவதற்கு எவரும் முன் வரக் கூடாது. இத்திட்டத்தின் மூலம் பெறும் பயிற்சி அவர்களது வாழ்க்கைக்கும் சமுதாயத்துக்கும், பயன் பட வேண்டும். ஒரு பிரதேசத்தில் காணப்படுகின்ற மக்களின் தொழில் மூலவளம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இப்பயிற்சி நெறி அளிக்கப்பட்டு வருகின்றது. இப்படி அவர் கூறினார்.

யாழ் மாவட்ட முறைசாராக் கல்வித் திட்ட கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியமும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டார். (இ-144)

### ஆசிரியர்---

1( ஆம் பக்கத் தொடர்ச்சி)
போராளிகள், தமிழ் மக்கள் ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்துவதுடன் கூட்டம் ஆரம்பமானது.

சங்கத்தின் தலைவர் திரு. கா. சோமசுந்தரம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. சபாநாயகம் தமதுஉரையில் மேலும் கூறியதாவது:-

கல்வி அமைச்சர் சமீபத்தில் கூட்டிய மாநாடு ஒன்றில் ஆசிரியர் சம்பள முரண்பாடு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது' அச்சமயம் ஆசிரியர்களின் சம்பள விவகாரம் பற்றி ஆராய இருவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவில் நானும், சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஸ்ரான்லி விஜயசிங்காவும் நியமிக்கப்பட்டுள்ளோம்.

ஆசிரிய தொழிற் சங்கங்களின் ஆலோசனையின்படி புதிய சம்பளத் திட்டம் தயாரிக்கப்படும் - என்றார்.

கல்வி அமைச்சினால் தமிழ் மொழி அமுலாக்கம் குறித்து தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

(உ-3-10)

### வெங்காய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முறைப்பாட்டை அடுத்து சம்பவம் நடந்த இடத்திற்குப் பொலீஸார் விரைந்து சடலத்தை வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர். லொறி தற்போது வவுனியா பொலிஸில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

வியாழன் நள்ளிரவு 12 30 மணியளவில் சுமார் 10, 12 பேர் அடங்கிய கோஷ்டி ஒன்று வழியை மறித்ததாம் அவர்களை விலக்கிக்கொண்டு வீதியின் ஓரமாக லொறியை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றபோது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் வெடி தலையில் பட்டதனால் சாரதி உயிரிழந்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரம், காற்சட்டையும் அணிந்து சிங்களம், தமிழ் மொழிகளில் பேசிய இக் கோஷ்டியினர் சாரதியிடமிருந்த 1700 ரூபா ரொக்கப் பணத்தையும், கிளீனரிடமிருந்து 170 ரூபாவையும் கொள்ளையடித்ததாகவும் கிளீனர் வவுனியா பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்த தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-164-3)

### ஈழத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்ததைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அனைவரும் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

(ஒ-எ]

### தமிழ்க்குழு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சருடனும் பேச்சுக்கள் நடத்துவார் என்று புதுடில்லிச் செய்தி கூறுகிறது.

கொழும்பில் தங்கி நிற்கும் போது அமைச்சர் குஜ்ரால் ஈழத் தமிழ் குழுக்களுடன் பேசுவார் என்று மட்டுமே இந்திய வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் எந்தக் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பார் என்ற விவரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் அவர் பேச முயற்சிப்பாரா என்பது பற்றியும் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதனிடையில்—

''இந்தியத் தரப்புடன் உறவைச் சீர்படுத்தும் நோக்கம் ஏதும் உண்டா?'' என்று விடுதலைப் புலிகளின் உயர்மட்ட பிரமுகர் ஒருவரிடம் கேட்டபோது ''இப்போதைக்கு அப்படி எண்ணம் ஏதும் இல்லை'' என்று அவர் பதிலளித்தார்.

''கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் உட்பட தூதரக அதிகாரிகள் அனைவரும் தற்போது கூண்டோடு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் இடத்துக்கு புதிய அதிகாரிகள் பொறுப்பேற்கவிருக்கின்றனர். அதன் பின்னர் தூதரக மட்டத்தில் பேச்சு நடக்க வாய்ப்புகள் உண்டு '' — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

[உ-எ]


மன்னார்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### 24 ஸ்ரீ 958 இலக்க இசுசு லொறி விற்பனை

மேற்படி சங்கத்தின் பாவனையிலுள்ள 24ஸ்ரீ958 இலக்க இசுசு லொறி விற்பனவுக்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

முடிவுத் திகதி: 08 - 07 - 1990

கேள்விப்பத்திர வைப்புப்பணம்:
ரூபா. 2000/- [மீளளிக்கப்படும்]

கேள்விப் பத்திரக் கட்டணம்:
ரூபா. 50/- [மீளளிக்கப்படமாட்டாது]

கேள்விப் பத்திரங்கள் யாவும் ''தலைவர் மன்னார் பல நோ. கூ. சங்கம், வயல் வீதி மன்னார்'' என்ற முகவரிக்கு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் '' 24 ஸ்ரீ 958 லொறிக்கான கேள்விப்பத்திரம்''எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடி ஒப்படைத்தல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு பொதுமுகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

எம். எம். இயாஸ்,
பொது முகாமையாளர்.

(சி-4684)


### நிவாரணம்

மட்டக்களப்பு ஜூன் 9

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த-வெல்லாவெளி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள-இருபது கிராமங்களுக்கு இம் மாதம் இரண்டாந் திகதி முதல்- உற்பத்தித்திறன் நன்கொடைப் பணமாக 88 லட்சத்து 64 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி உதவிஅரச அதிபர்திரு. எஸ். சாமித்தம்பி தெரிவித்தார்.

(இ-121)

### விபத்தில் கரம் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 09

சங்கானையில் உள்ள மின் நெசவு ஆலை ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட இயந்திர விபத்தில் அராலியைச்சேர்ந்த இளம் பெண் ஒருவரின் கரம் துண்டிக்கப்பட்டது. (இ-சு)

### கடவை ஊழியர் உணவு முத்திரை

பச்சிலைப்பள்ளி ஜூன் 09

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ரயில்வே கடவைகளில் கடமையாற்றுபவர்களுக்கு உணவு முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

அரச ஊழியர்கள் என்ற காரணத்தால் அண்மையில் விநியோகிக்கப்பட்ட புதிய உணவு முத்திரைகள் இவர்களுக்கு வழங்கப்படாத போதிலும்யாழ் மாவட்டத்திலுள்ள கடவை ஊழியர்களுக்கு உணவு முத்திரை வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி இவ்வூழியர்கள் முறைப்பாடு செய்ததையடுத்து புதிய உணவு முத்திரைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறியப்படுகிறது.

### சங்காபிஷேகம்

மயிலணி, ஜூன் 9

சுன்னாகம்- வரியப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாள் சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். இதனைத் தொடர்ந்து பகல் அன்னதானமும் நடைபெறும். (இ-89)

### சிங்கள சமையல் காரர்

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ். கோட்டை பொலீஸ் நிலயத்தில் இருந்து 2 சிங்கள சமையற்காரர் தவிர அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்டு விட்டனர்;

சிங்கள சமையற்காரருக்கு பதிலாக தமிழர் நியமிக்கப்பட்டதும் அந்த இரண்டு பேரும் உடன் இடமாற்றம் செய்யப்பட்டு விடுவார்கள் என பொலீஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ 10]

### கள்ளுக் கொட்டில் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஜூன் 09

அரியாலையில கள்ளுக் கொட்டில் ஒன்று இனம் தெரிய தவர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது இதனால் 9 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, யாழ். பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது. [இ-10]

### கல்விப் பணிப்பாளருக்கு வதிவிடம்

பட்டிருப்பு, ஜூன் 9

மட்டக்களப்பு - மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கான வதிவிடம் அமைக்கப்படவுள்ளது

மாவட்ட கல்வித் திணைக்கள வளவுக்குள் 6 லட்சம் ரூபா செலவில் அது அமையும்.

இதற்கான அத்திவாரக் கல்லை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கு சோமசுந்தரம் திங்களன்று பிற்பகல் நட்டார்.

மாவட்ட கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த-மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். தே. சோமயானந்தன், பிரதம கல்விஅதிகாரிஜனாப் ஏ. எம். ஏ. சர்ப்டீன்உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மாகலிங்கம்ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-12)

### கிளிநொச்சி- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தாலேயே மின்சார விநியோகம் நிறுத்தப்படுவதாக கிளிநொச்சிப் பிரதேச அலுவலக மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

### கட்டுத்துவக்கு வெடித்து காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வவுனிக்குளம் காட்டில் மிருகத்துக்குப் பொறி வைத்த கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த என். அழகர் என்பவர் ஆவார்.

[ஒ-9]


## உடனடி வேலை வாய்ப்புக்கள்

## அபுதாபி, சவூதி அரேபியா

### ★ அபுதாபி

அபுதாபி விமான நிலைய சுத்திகரிப்பாளர் (Abudhabi Air Port Cleaner) பதவிக்கு எம்மிடம் வெற்றிடங்கள் உள்ளன. 600 திறாம்ஸ் (60 Dhrams) சம்பளம், இலவச உணவு, இருப்பிட வசதியுண்டு. பிரயாணம் 2 கிழமைக்குள், வயது 20 க்கு மேல் கடவுச்சீட்டு, 6 படங்கள் என்பனவற்றுடன் உடனடியாக நேரில் வரவும்.

### ★ சவூதி அரேபியா

கோழிப்பண்ணை வேலையாட்கள் Poultry Farm Labourers) } அல்றாஜ் கொம்பனி Al Raj Company

(சம்பளம் 450 S. R. இலவச உணவு, இருப்பிட வசதியுண்டு. வயது 21 க்கு மேல், பிரயாணம் 2 கிழமைகளில்)

★ House maid பணிப்பெண்கள், சவூதி அரேபியா (வயது 30 க்கு மேல்) பாரின், துபாய், ஓமான், குவைத் (வயது 20 க்கு மேல்)


★ கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு Open Visa வில் ஒரு கிழமைக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். வயது 25 க்கு மேல் விரும்புவோர் உடனடியாக கடவுச்சீட்டு, 6 படங்கள், அனுபவச் சான்றிதழ்கள் என்பனவற்றுடன் நேரில் வரவும்.

| | | |
|---|---|---|
| Fabricator | — | 1000 SR |
| Carpenters (தச்சு வேலையாட்கள்) | — | 700 SR |
| Mason (மேசன்) | — | 700 SR |
| Steel Benders (கம்பி வளைப்பவர்) | — | 700 SR |
| A/C Technician | — | 900 SR |
| Plumber | — | 700 SR |
| Pipe Fitter | — | 700 SR |
| Mechanical Engineer | — | 1200 SR |
| X' Ray Welder | — | 1200 SR |

156, 1ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
[வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக]
[சி-4723]



## 150 ஆம் நாள் நினைவஞ்சலி



''ஹப்பிரெக்ஸ்ற்'' பங்காளர்

### சின்னையா கனகரத்தினம்
(மகாலிங்கம்)

மலர்வு: 05 - 07 - 1952 உதிர்வு: 11 - 01 - 1990

அரியாலை ஈன்றெடுத்த அரியதோர் முத்து
தெரியாதோர் இன்றாக தெவிட்டாத முத்து
சின்னையா மகாலிங்கச் சிரிக்கின்ற முத்து
என்னையா எங்குற்றாய் எமையெல்லாம் விட்டு

நூற்றி ஐம்பது நாளாக இன்று
போற்றிப் பரவி நாம் நினைக்கின்றாம் நும்மை
மனைவி மக்கள் மருமக்கள் எல்லாம்
நினைக்கின்றார் நின்னை நினைத்திடுவாய் எம்மை

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

நாவலர் வீதி,
அரியாலை.

[3825]



தகிக்கும்
வெய்யிலில்
இருந்து பாதுகாப்பு

மில்க்வைற் 200 மேலுறை அனுப்பித்
தொப்பியொன்றைப்
பெற்றுப் பயனடைக.

★ மில்க்வைற் ★
யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

09—06—1990 சனிக்கிழமை



வற்றாப்பளை கண்ணகை அம்மன்
பொங்கல்

ரூ 20/-க்கு மில்க்வைற் உற்பத்தி
வாங்குவோருக்கு

கிரைவிதை, அழகிய அம்பாள் ஸ்ரிக்கர்
அன்பளிப்பு

மற்றும் மேலுறைகளுக்கு உரிய பரிசுகள்

★ மில்க்வைற் ★
யாழ்ப்பாணம்.


## இன்று நடப்பவை

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 9

மகளிர் அபிவிருத்தி நிலையம் இன்று சனிக்கிழமை "அபிவிருத்தியில் பெண்களின் பொறுப்புக்களும், கடமைகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றை சரசாலை அம்பிகா பாலர் பாடசாலையில்நடத்துகிறது.

### செய்முறை வகுப்புகள்

கைதடி, ஜூன் 9

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கான செய்முறை வகுப்புக்கள் இன்றும் நாளையும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதேவேளை 90/92 கல்வியாண்டிற்க்கான நேர் முகப் பரீட்சையும் நாளை வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என சிரேஷ்ட விரிவுரையாளர் அலெக்ஸாந்தர் தெரிவித்தார். (ஒ-74)

### மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 9

இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்சத் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது

ஆறுமுகப் பெருமான் இன்றிரவு வள்ளி தேவயானை சமேதராய் திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம் வருவார். (ஒ)

### இறையியல் கற்கை நெறி

யாழ்ப்பாணம் ஜூன் 10

பொது நிலையினருக்கான இறையியல் கற்கை நெறி இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆயர். வண. தியோகுப்பிள்ளை அவர்களால் திருமறைப் பணி நிலையத்தில் தொடக்கி வைக்கப்படும்.

### இன்று நடக்கும் 3 ஆட்டங்கள்

ரோம், ஜூன் 9

இன்று நடைபெறும் உலக உதைபந்தாட்ட ஆட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

'ஏ' பிரிவு இத்தாலி எதிர் ஆஸ்திரியா (இடம்-ரோம்)

'பி' பிரிவு சோவியத் யூனியன் எதிர் ருமேனியா (இடம்-(பாரி).

'டி' பிரிவு: ஐக்கிய அரபு எமிரேற்ஸ் எதிர் கொலம்பியா (இடம்-டோலோக்னா) (இ-எ)

### மட்டக்களப்பில் கலை விழா

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவையின் கலை விழா இன்று 9 ஆம் திகதி மாநகர மண்டபத்தில் பேரவையின் தலைவரும், அரச அதிபருமான திரு. ஆர் யோகநாதன் தலைமையில் நடைபெறும்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. எஸ். கணேசநாதன் பிரதம அதிதியாக விழாவில் கலந்து கொள்வார்.

### மாகாணசபை திருத்த சட்டநகல்

மாகாணசபைகள் (திருத்தச்) சட்டநகல் நாடாளுமன்றத்தில் இம்மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகின்றது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அதனைச் சமர்ப்பிப்பார்.

வடக்கு- கிழக்கு மாகாண சபையைக் கலைத்து புதிதாகத் தேர்தலை நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் இத்திருத்தச் சட்டம் அமைந்துள்ளது. (இ-எ)

## ஆசிரியருக்கு 5,000 ரூபா சம்பளம் வழங்கவேண்டும்

### வருடாந்த மாநாட்டில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

"ஒரு சாதாரண தொழிலாளியின் சம்பளத்தை விட குறைந்த சம்பளத்தையே ஆசிரியர்கள் பெறுகிறார்கள். அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஆகக் குறைந்தது 5,000 ரூபாவாக இருக்கத்தக்கவகையில்சம்பளஉயர்வு வழங்கப்படவேண்டும்."

இப்படி அரசுக்கு கோரிக்கை விடுத்தார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம்.

நேற்று யாழ் இந்துக் கல்லூரியில் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர் சங்கத்தின் 16 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அரசிடம் முன்வைத்த மற்றும் கோரிக்கைகள் வருமாறு:

★ பிற மாவட்டங்களில் உள்ள தமிழர் ஆசிரியர் விவகாரங்களிலும்வடக்கு- கிழக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் செல்லுபடியாக வகை செய்யவேண்டும். அதிபர், ஆசிரியர்களை அவமானப்படுத்தும் கல்வி அமைச்சின் செயலையும், கல்வி அதிகாரிகளின் செயல்களையும் கண்டிக்கின்றோம்.

★ பயிலுநர் ஆசிரியர் என்றும், பட்டதாரிப் பயிலுநர் என்றும் நியமனம் வழங்கி ஆசிரியத் தொழிலை அவமதிக்கும் செயலை நிறுத்தி சகலருக்கும் பாகுபாடு அற்ற முறையில் ஆசிரியர்கள் அந்தஸ்தை வழங்கவேண்டும்.

★ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உள்ள இராணுவ முகாமை அகற்றி கலாசாலை இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ இரத்மலானை இந்துக் கல்லூரியில் உள்ள ஸ்ரீலங்கா முகாமை அகற்றி தமிழ் மாணவர்கள் கல்வி பயிலக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

★ பயிற்சிக்கலாசாலைகளில் கல்வி கற்கும் ஆசிரிய மாணவர்களுக்கு கஷ்ட நிவாரணப் படி வழங்கவேண்டும்.

★ கடந்த காலங்களில் மாகாணசபையால் செய்யப்பட்ட பழிவாங்கல் இடமாற்றங்கள் மற்றும் பதவிஉயர்வுகளைரத்துச்செய்யவேண்டும்.

★ தொண்டர் ஆசிரியர்கள் யாவரும் நிரந்தரமாக்கப்படவேண்டும். [ஒ 3-10]

## நாட்டு நிலைமை குறித்து ஐ. தே. க. திங்கள் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் ஸ்ரீகோதாவில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும்.

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமை வகிப்பார்.

நாட்டின் தற்போதைய நிலைமை, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஆகியன பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படும்.

இதனிடையில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் மினி தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. சுமார் 10 லட்சம் ஐ. தே. க. உறுப்பினர்கள் இத்தேர்தலில வாக்களித்து வேட்பாளர்களைத் தெரிவு செய்வர்.

பிரதேசசபை, மாநகர, நகர சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-எ)

## பத்மநாபா நீதிமன்ற உத்தரவை ஏற்றால் விடுதலையாவார்

கொழும்பு, ஜூன் 9

ஈ. பி. ஆர். எல். எப் செயலதிபர் திரு. கே. பத்மநாபா நீதிமன்றத்துக்கு சமுகமளித்து, நீதிமன்ற உத்தரவுகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே விடுதலை செய்யப்படுவார்.

இப்படி சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்த வழக்கு ஒன்றில் திரு பத்மநாபா மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அவர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காததால் அவர்மீது கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது தெரிந்ததே. (இ-எ)

### யாழ். நகரில் பி.பி.சி. செய்தியாளர்

பி.பி.சி. செய்தியாளர் திரு. கிரிஸ் மொறிஸ் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

பி.பி.சியின் கொழும்புச் செய்தியாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட திரு. மொறிஸ் நேற்று யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் சிலரையும் அவர் சந்தித்து பேசியதுடன் பேட்டியும் கண்டார். (ஒ-3)

### ● அந்த விமானி கட்டாய லீவில்

கொழும்பு, ஜூன் 9

சிங்கப்பூரில் கடை ஒன்றில் பொருள்களைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எயர் லங்காவின் விமானி கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### வவுனியா மோதல் குறித்து வணசிங்க

வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட மோதல் தப்பபிப்பிராயத்தாலேயே இடம்பெற்றுவிட்டது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க முன்கண்டவாறு தெரிவித்தார்,

இச்சம்பவம் தொடர்பாக அப்பகுதி இராணுவத் தளபதியிடமிருந்து அரசு விரிவான அறிக்கை ஒன்றைக் கேட்டுள்ளது என்றார் அவர்.

### மலையகத்தில் கடும் மழை

நுவரெலியா, ஜூன் 9

கடந்த ஒருவார காலமாக அட்டன், நுவரெலியா, மஸ்கெலியா, வட்டவளைப்பகுதிகளில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருகின்றது. இம்முறை கடும் குளிரும் நிலவுகிறது.

கடும் மழைகாரணமாக நுவரெலியாவில் மரக்கறி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. [ஒ-58]

### உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாண மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கும் புதிதாகச் சேர விரும்புவோருக்கும் பயிற்சி வகுப்புகளை நடத்த உள்ளது.

இவ்வகுப்புகளைச் சங்கத்தின் தலைவர் திரு. கனகலிங்கம், திருவாளர்கள் சிங்கராயர், மாட்டீன் ஆகியோர் நடத்துவர்.

நாளை 10ஆம்திகதி காலை 9-30க்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கும் இவ்வகுப்புகளுக்கான ஒழுங்குகளை சங்கத்தின் செயலாளர் கப்டன் என். சோமசுந்தரம் செய்துள்ளார். (தி-மு)

## செய்திச் சாரம்

### ஜீசி. ஈ.புள்ளிகள் விவரம் வெளியாகியது

யாழ்ப்பாணம், ஜூன் 9

1989 டிசம்பரில் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளி விவரங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனேகமான யாழ். பாடசாலைகளுக்கு இந்தப்புள்ளி விவரங்கள் நேற்றுக் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

### காஞ்சி முனிவர் பிறந்த நாளில் ராஜீவும்!

காஞ்சிபுரம், ஜூன் 9

காஞ்சி முனிவர் சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகளின் 97 ஆவது பிறந்ததினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

இது சம்பந்தமாக காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் கலந்து கொண்டார். (ஒ எ)

### ● விளையாட்டு வினையானது

யாழ்ப்பாணம், ஜூன் 9

சிறு பிள்ளைகள் இருவர் விளையாடிய விளையாட்டு வினையாது.

ஒரு பிள்ளை தமது சகோதரிக்கு மண்ணெண்ணெய் விளக்கால் தீபாராதனை காட்டுவது போன்று செய்தபோது விளக்கு கைதவறி விழுந்தது. அதனால் அந்தச் சிறுமி எரிகாயங்களுக்குள்ளானார்.

திருக்கேதீஸ்வரம் பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் காயமடைந்த அந்தச் சிறுமி நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார். மரணமான சிறுமியின் பெயர் த. சீதாலட்சுமி (வயது 8). (ஒ-9)

### விபத்தில் சிக்கியவர் மரணம்

புங்குடுதீவு, ஜூன் 9

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்ட பெண்மணி யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

புங்குடுதீவு மடத்துவெளியைச் சேர்ந்த திருமதி- சிவபாக்கியம் நாகரத்தினம் என்பவரே மரணமானவராவார்.

மினிபஸ்ஸில்பயணம்செய்த இவர் புங்குடுதீவு பஸ்தரிப்பு நிலையத்தில்இறங்கி பஸ்ஸின் பின்பக்கமாக வீதியை கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு பலத்த காயங்களுக்குள்ளானார்.

ஆபத்தான நிலையில் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட அவர், அங்கு வியாழக்கிழமை இரவு மரணமானார். [அ-137-9]

### நுகேகொடையில் ஸ்ரீ.ல.சு.க. கூட்டம்

போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் அரசின் திட்டத்தைக் கண்டித்து சுதந்திரக்கட்சி நுகேகொடையில் இம்மாதம் 12 ஆம் திகதி பொதுக்கூட்டமொன்றைநடத்தவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி ஐ. தே. கட்சிக்கு எதிரான கட்சிகளை சுதந்திரக் கட்சி அழைத்துள்ளது. (ஒ-எ)

### சொய்ஸா கொலை; தாயார் 2 மணி நேரம் சாட்சியம்

கொலையுண்ட ரிச்சாட் டிசொய்சாவின் மரணம் தொடர்பாக, அவரின் தாயாரின் வாக்கு மூலத்தை சிரேஷ்ட பொலீஸ் அதிபர் காமினி பெரேரா கடந்த செவ்வாய்க்கிழமை பதிவு செய்தார்.

மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜக்கோலின்டிசெனவிரத்தினவின் வாசஸ்தலத்தில் வைத்து இந்த வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது: இதற்கு 2 மணித்தியாலங்கள் எடுத்தன. (ஒ-எ)

### தமிழ் மாவட்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யன் குளம் அ. த. க. பாடசாலை)

**கல்முனையிலிருந்து**

திருமதி தங்கரத்தினம் மகாலிங்கம் (வெஸ்லி உயர்தரப் பாடசாலை), திருமதி க. சிவநேசன், திருமதி சாரதாதேவி பாலசுப்பிரமணியம் (இருவரும் கார்மேல் பாத்திமா கல்லூரி)

**மட்டக்களப்பிலிருந்து**

திருமதி விமலாதேவி யோகநாதன் [அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் ம. வி) திருமதி சுசிலாதேவி கோபாலகிருஷ்ணன் (மட்டக்களப்பு இந்துக் கல்லூரி), பொன்னம்பலம் யோகநாதன் (மட்டக்களப்பு இந்துக்கல்லூரி)

**மன்னாரிலிருந்து**

பிலிப்பு அமலதாசன்(புனித சவேரியர் பெண்கள் ம. வி.). க நவநேசன் (மாவிலங்கேணி றோ. க. பா.), திருமதி கதறின் டெய்ஸி அன்ரனி பெர்னாண்டோ (றோ. க. த. க. வி.), மு. மதுகாந்தி [ஆண்டான்குளம் றோ. க. த. க. வி.], திருமதி சாந்தி வாமதேவா (புதுக்குடியிருப்பு அரச மு. வி.), மனுவேற்பிள்ளை மகேஸ்வரராஜா (நானாட்டான் ம. வி.), தம்பையா தர்மஜோதி [இரணை இழுப்பக்குளம் அ. த. க. பா.].

**திருமலையிலிருந்து**

வில்லியம் ஜெயசீலன் [திருமலைஇந்துக்கல்லூரி], திருமதி சி. ஜீ ஜெயசீலன் (புனித மரியாள் கல்லூரி), வீர சிங்கம் சிங்கராசா [கோபாலபுரம்அ. த. க. பா]. பி. சுப்பிரமணியம் (சல்லி அம்பாள் வி.), திருமதிசிவபாலராஜா விமலாதேவி [புல்மோட்டை மு. ம. வி.], பவானி ஆறுமுகம் பிள்ளை [ஆலங்கேணி விநாயகர் ம. வி ]. சு. கணேசமூர்த்தி [சேனையூர் ம. வி].

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றோர் பற்றிய விவரம் நாளையஉதயனில் வெளிவரும், [உ-9]

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் கைலாயபிள்ளை

சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், சைவப்புலவரும், இளைப்பாறிய ஆசிரியருமாகிய சண்முகம் கைலாயபிள்ளை ஆசிரியர் நேற்று 8 - 6 - 90 இல் அமரத்துவம் எய்தினார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய தபாலதிபர் தியாகராசாவின் அன்புத்தம்பியும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், சண்முகதாசனின் அன்புத் தந்தையும், மனோன்மணியின் அன்பு மாமனும், செந்தூரன் ஆரூரன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 8 - 6 - 90 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. உற்றார், உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சரசாலை.

தகவல்:
மகன், மருமகள்.
(3832)

### திரு. தம்பு இராசேந்திரம்

(தொலைத் தொடர்பு திணைக்களம்-திருகோணமலை)

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட தம்பு இராசேந்திரம் காலமானார். இவர் புவனேஸ்வரியின் அன்பு கணவரும், புவன்றாஜ் (கூட்டுறவுப் பரிசோதகர்). மதனராஜ், ரவிராஜ், றஜனி, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மயில்வாகனம் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்). காலஞ்சென்ற திருமதி லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியகுட்டி (கூட்டுறவுப் பரிசோதகர், வட்டுக்கோட்டை), கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சரவணமுத்து, நாகம்மாவின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 9 - 6 - 90 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அளவெட்டியில் நடைபெறும்.

தம்மனை,
அளவெட்டி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
(3831)

## மரண அறிவித்தல்

### கயிலாயபிள்ளை வேலுப்பிள்ளை

[செல்லையா]

கயிலாயபிள்ளை வேலுப்பிள்ளை (செல்லையா) ஓய்வுபெற்ற கோட் முதலியார் காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற கயிலாயபிள்ளை, சிவகாமனின் அன்புப்புத்திரனும் காலம் சென்ற நாகலிங்கம், சிவக்கொழுந்துவின் அருமை சகோதரரும் சுந்தரம்மாவின் அன்புக் கணவரும் மதங்க சூடாமணி, சுந்தரலிங்கம் (டென்மார்க்), சுந்தரேஸ் (பிரதேச முகாமையாளர் கடற்தொழில் கூட்டுத்தாபனம் புத்தளம்), சுந்தரமூர்த்தி (சுபா றேடிங் சென்றர் திருமலை) சரஸ்வதி தனலட்சுமி, சிறிஸ்கந்தராசா (ஓமான்), மனோகரன் கருணாகரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற சுப்பிரமணியம் (துறைமுகக் கூட்டுத்தாபனம்) மல்லிகாதேவி, யோகேஸ்வரி, ரத்னாதேவி, கந்தையா, ஞானசோதி (சோதி ஜுவலர்ஸ் யாழ்ப்பாணம் பரமேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அருமை மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் காரைநகர் இல்லத்திலிருந்து இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

களபூமி,
காரைநகர்.

தகவல்:
மகன்


யாழ் / மானிப்பாய் லியோ கழகங்களினால்
போதைப்பொருள் எதிர்ப்பு நிதிக்காக
கொழும்பு "சங்கீதாஸ்" வழங்கும்

★ ராக சங்கமம் ★

(இசை நிகழ்ச்சி)

இடம் : யாழ் இந்து மகளிர் கல்லூரி - 23-6-90, 24-6-90
மானிப்பாய் இந்துக் கல்லூரி - 22-6-90

அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

(3834)
லியோ கழகம்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்-சித்தன்கேணி

பௌதிகம் - திரு. க. கணேஷன்
இரசாயனம் - திரு. BAR
தாவரவியல் - திரு. பாலா
விலங்கியல் - திரு. ஞானம்

சஞ்சீவி
# சஞ்சிகை

09 - 06 - 1990 சனிக்கிழமை

நாவலர்
பண்டத்தரிப்பு & சித்தன்கேணி
ஆண்டு 11
கணிதம்
திரு. ப. குணம்
"புள்ளிவிபரவியல்"

## கருத்துக் கலசம்

மஜூரா

### முயற்சியும் பயிற்சியும்

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையமாட்டார்கள். உயர்ச்சியே பெறுவார்கள். முயற்சி திருவினையும் ஆக்கும். எனினும் முயற்சியுடன் பயிற்சியும் இருந்தால் உயர்ச்சி மிகப் பெரிதாக இருக்கும். நிலையாகவும், நிரந்தரமாகவும் அமையும்.

கல்வியாயினும் சரி, செல்வமாயினும் சரி, வீரமாயினும் சரி முயற்சியும், பயிற்சியும் தேவை. முயற்சி இருந்தால் எத்துறையிலும் பயிற்சியும் பெறமுடியும். பயிற்சி தனியாக இருந்து முயற்சி இல்லாவிடில் பெற்ற பயிற்சியின் மூலம் பயனடைய இயலாது. பயிற்சி இல்லாமல் மேற்கொள்ளப்படும் முயற்சியும் முழுப்பலனைத் தராது.

ஆனால் பயிற்சி பெறுவதற்கும் ஒரு திறமை அவசியம்.

குடிமனையிலும், பணிமனையிலும் முயற்சி, பயிற்சி, திறமை ஆகியவை முக்கூட்டுச்சேரவேண்டும். அப்போதுதான் சம்பந்தப்பட்டவரும் சிறக்க முடியும்; அவரது வீடும், பணியாற்றும் தொழில் நிலையமும் செழிக்க முடியும். திறமை இல்லாதவன் பயிற்சி பெறமுடியாவிடினும், முயற்சியால் ஓரளவுக்சேனும் முன்னுக்கு வரலாம்.

இப்போது பலரும் முயற்சியும் பயிற்சியும் இல்லாமல் எடுத்த எடுப்பிலேயே பெரும் பணம் சம்பாதிக்க நினைக்கிறார்கள். பாடசாலையிலிருந்து வெளிக்கிளம்பியதும் ஒரு வேலையில் சேர்ந்து கைநிறைய உழைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்களுக்கு உரிய பயிற்சி உண்டா என்று எண்ணுவதில்லை, அதனைப் பெறவும் முயற்சிப்பதில்லை.

முயற்சி, பயிற்சி, திறமை ஆகிய மூன்றும் இளவயதில் இருந்தே பழக்கத்துக்கு கொண்டுவரப்படுவது அவசியம்.

கல்வியில் பயிற்சி, தொழிலில் பயிற்சி, தொண்டில் பயிற்சி, தலைமைத்துவத்தில் பயிற்சி, நிர்வாகத்தில் பயிற்சி என்று எல்லாப் பயிற்சிகளும் பாடசாலை நாட்களிலேயே அதிகம் பெறப்படவேண்டியவை. ஆகையால் பாடசாலைகள் பெறும் கல்விக்கூடங்கள் மட்டுமல்ல, வாழ்க்கைப் பயிற்சிக் கூடங்களுமாம்.

பாடசாலையினதும், மாணவப் பருவத்தினதும் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலையின் கல்வி விதானங்களும், இணைப்பாட விதானங்களும் அல்லது புறக்கிருத்திய விதானங்களும் அமைக்கப்பட வேண்டும். பாடசாலை வெறும் கல்விச்சாலை என்று இல்லாமல் வாழ்க்கைப் பயிற்சி நிலையமாகவும் மிளிர வேண்டும்.

அங்கு, வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்குத் தேவையான திறமை, முயற்சி என்பனவற்றுக்குப் பயிற்சி தரப்பட வேண்டும். எமது பகுதிப் பாடசாலைகள் அந்த நிலைமைக்கு உயர்வது எப்போது? முந்தி ஒரு காலத்தில் அவை வாழ்க்கைப் பயிற்சி நிலையங்களாக மிளிர்ந்தன. முந்திய மகிமையை இன்றைய கல்விச்சாலைகள் பெறுவது எப்போது? ★

# (ஈழத்தமிழ் மண்ணில் பிறக்கும் போர்க்காலக் கவிதைகள்)

ஆங்கில இலக்கிய வரலாற்றிலே போர்க்கவிஞர்கள் (War Poets) என்று ரூபர்ட் புரூக் (Rupert Brooke), கிரேன்பெல் (Cran Fell), வில்பிரட் ஓவன் (Wilfred Owen) சசூன் (Sasoon) போன்றோரைக் குறிப்பிடுவர்.

இவர்களில் முதலிருவரும் போரைப் புகழ்ந்தும், பின்னிருவரும் போரை இகழ்ந்தும் பாடியுள்ளனர்.

இவர்கள் போரில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தனர்.

இக்கவிஞர்களைக் கேள்வியுற்றபோது, போர் பற்றிப் பாடிய தமிழ்க் கவிஞர்கள் உள்ளனரா என்ற கேள்வி எழுந்தது.

சங்க காலத்தில் போரைப் புகழ்ந்து பாடியவர்கள் பலர் இருந்தனர். இகழ்ந்து பாடியவர்களும் உள்ளனர்.

அது வீரயுகக் காலம். காதலும் போரும் அக்காலச் செயல்முறையாக இருந்துவந்தன.

போர்க்களத்தில் நின்று பாடிய புலவர் போலத் தோற்றமளிப்பவர் கலிங்கத்துப் பரணி பாடிய சயங்கொண்டாரே.

எனினும், அவர் போரில் ஈடுபட்ட கவிஞர் என்பதாக வரலாறு இல்லை.

போர்க்கவிஞர்கள் தமிழகத்தில் வேறுயாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், இலங்கையில் போர்க்கவிஞர்கள் நிறையப் பேர் உள்ளனர்.

களத்தில் இறங்கிப் போராடிக்கொண்டே கவிதை எழுதும் கவிஞர்களும் உள்ளனர்.

அவர்களையே போர்க் கவிஞர்கள் என்று குறிக்கலாம்.

இவர்களுள் பெண்கவிஞர்களும் உள்ளனர் என்பது தான் இன்னும் வியப்பிற்குரியது.

அவர்களது கவிதையைப் பார்க்கும்போது அலங்கார வார்த்தைகள் இல்லை: அடுக்குத் தொடர்கள் இல்லை: புரியாத மொழிக் கூறு இல்லை: பண்டிதத்துவத்தைக் காட்டவேண்டும் என்ற முனைப்பும் இல்லை.

இயல்பாய், உள்ளத்தில் எழும் உணர்வின் வடிகாலாய் அவை விளங்குகின்றன.

அவர்கள் தம்மே பார்க்களக் கவிதைக்குள் சிறிது நேரம் சென்று மீளுவோம்.

**"கௌரி"**

'கௌரி' என்ற பெயரில் எழுதிய கவிஞர் 1980 ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் போரில் ஈடுபட்டவர்.

1984 - 85 இல் இலங்கை இராணுவ முகாம்களில் பல சித்திரவதைகளை அனுபவித்தவர்.

அக்காலகட்டங்களில் பல கவிதைகள் எழுதியிருப்பினும் அவற்றைப் பாதுகாக்கும் சூழல் அவருக்கேற்படவில்லை.

'போராட்டக் களத்தின் யதார்த்தமான சூழலில் இருந்துவரும் இலக்கியங்கள் ஜீவன் உள்ளவையாக அமைவது இயற்கைதான்' என்று அக்கவிஞரே வாக்கு மூலம் தந்துள்ளார்.

அவரது கவிதைகள் 'சோகங்களிலும் துயரமானது' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது. சமூக ஆய்வு வட்டம். அசோக் நகர், சென்னை).

அக்கவிஞரின் கவிதைகளிலிருந்து சிலவரிகள்:

*'AK 47 க்கும் M16க்கும்*
*வேறுபாட்டை*
*அது வெடிக்கும்*
*ஓசையைக் கொண்டே*
*தரம் பிரிக்க*
*எமது சிறார்கள்*
*கற்றுக்கொண்ட பின்னரும்*
*நீங்களோ இன்னமும்*
*எதிரிகளையும் நண்பர்களையும்*
*இனம்காணத் தவறுவதால்...*

—என்ற வரிகள், கலிங்கத்துப்பரணியின் போர்க்களக் காட்சியிலிருந்து நவீன போர்க்களக் காட்சி தமிழில் எவ்வாறெல்லாம் மாறுபட்டு வெளிப்படுகிறது என்பதை ஒப்புநோக்கவைக்கின்றன.

சிறுவர்கூட இது பற்றிய அறிவு கொண்டிருந்ததலை வெளிக்காட்டுதலோடு கவிஞர்களுக்கு ஆயுதத்திலுள்ள பயிற்சியும் வெளிப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினர்க்கு அறிவுரை கூறுகிறார் இக்கவிஞர்,

*இங்கு சிறுவர்கூட*
*ஆயுதம் ஏந்துவது*
*உங்களுக்கு ஆச்சரியம்*
*இல்லையா?*
*உங்களுக்குத் தெரியாது*
*உங்களின் குண்டுவீச்சால்*
*எனது நாட்டில்*
*கருச்சிதைவுகள் மட்டுமல்ல*
*பிரசவங்களும் நடக்கிற*
*தென்று'*

—என்று கூறுவதன் மூலம் போராட்டம் தலைமுறையாய்த் தொடரும் என்பதைச் சுட்டுகிறார்.

இவரது கவிதைகளைப் பற்றி அ. மார்க்ஸ் என்ற திறனாய்வாளர் போராட்டத்தினூடாய்ப் பெற்ற அனுபவங்களின் வழியாய்க் கசியும் தன்னுணர்ச்சிச் சிதறல்களாய்த் தெறிப்பவை' என்று இத்தொகுப்பின் பின்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கவிதைத் தொகுப்பைப் படிக்கும்போது போர்க் கவிஞரின் உள்ளம், பகட்டின்றி, ஆரவாரமின்றி, அமைதியாய், ஆழமாய், உணர்வாய் வெளிப்படுவதை உணரலாம்.

**சபேசன்**

'இனி வரும் காலம்' என்ற கவிதைத் தொகுப்பைச் சபேசன் எழுதியுள்ளார்.

(பொதிகை வெளியீடு, சேத்துப்பட்டு, சென்னை). போர்க்களத்தில் ஈடுபட்ட ஒருவன் தன் அன்னைக்கு எழுதுவதாக ஒரு கவிதை:

*'எதிரிகளோடு போர்*
*புரியப்போன*
*நெஞ்சுரம் மிக்க உன்மகன்*
*காற்று வீசுகிற தெருக்களில்*
*எலும்பும் மிஞ்சாமல்*
*சாம்பலாகி*
*விட்டான்*
*என்ற செய்தியை*
*உன்னிடம் தெரிவிக்குமாறு*
*காற்றை நான்*
*இறைஞ்சுகின்றேன்*
*ஏனெனில் அம்மா......*
*இனி வருபவர்களிடம்*
*சொல்லு*
*எனது மகனின் முதுகின்*
*பின்பும்*
*துவக்குகள் இருந்தன'*

— என்ற கவிதை வீரமரணமடைந்தவனின் உள்ளத்தை வெளிக்காட்டுகிறது.

**எது கவிதை?**

இவ்வுணர்வு வெளிப்பாடுகள் நிச்சயமாகக் களத்தில் ஈடுபட்டவர்களுக்கே ஏற்பட முடியும்.

இவ்வுணர்வுகளை நட்சத்திர ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு வெளிக்காட்டும் திறனுடைய கவிதை செய்வோர் தமிழ்நாட்டில் நிறைய உள்ளனர்.

அவர்களைக் 'கவிஞர்' என்று குறிப்பிடுவதே தவறு

உள்ளத்தில் உள்ளது வார்த்தையாக வெளிவரவேண்டும். அதுதான் கவிதை.

கவிதை உயிரோடு இயங்கிக்கொண்டிருப்பது ஈழத்தில் தான்.

ஈழத்துக் கவிஞர்களின் கவிதைகள் பல இயற்கையாய், ஆடம்பரச் சொற்களின்றி, சோகமாயும், துயரமாயும், வீரமாயும் வெளிப்படுகின்றன.

எதிர்காலத்தில் தமிழ்க் கவிதை வரலாற்றில் இக்கவிதைகளுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு என்பதை இவை இப்போதே இனங்காட்டுகின்றன.

*சிறையினிலே பிறந்ததனால்*
*கிருஷ்ணன் என்றால்*
*சிலுவையிலே இறந்ததனால்*
*யேசு என்றால்*
*போர்க்களத்து*
*வார்த்தையெலாம்*
*கீதையாகும்'*

(சிவசேகரம் - செப்பனிட்ட படிமங்கள்)

—என்ற கூற்றுக்கொப்ப, தமிழ்க்கவிதை தரம் தாழாமல் அவ்வக்காலச் சூழலின் பிரதிபலிப்பாக இருந்து வருவதை இப்போர்க் கவிஞர்களின் கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன. ★

நன்றி; 'தமிழ்மணி'

- ம. மதியழகன் -
தமிழ்த்துறை, புதுவைப்பல்கலைக்கழகம்

# திருநீற்றின் பெருமையை உணர்த்திய ஆளுடையபிள்ளை!

ஆளுடைய பிள்ளையார் ஆலவாய்த் திருப்பதியிலே திருமடத்தில்தங்கியிருந்தார்.

இதை அறிந்த சமணர்கள் பாண்டியனிடம் சென்று 'அரசே, எங்களை வாதில் வெல்லும் பொருட்டு, சீர்காழியிலிருந்து, சிவனருள் பெற்ற அந்தணச் சிறுவன் ஒருவன் வந்திருக்கிறான். அவனுடன் வெண்பொடி பூசிய தொண்டர்களும் தங்கி இருக்கிறார்கள்' என்று வெறுப்புடன் கூறினார்கள்.

முன் செய்த தீவினைப் பயனால் சமண சமயத்தைத் தழுவிய பாண்டியன் மிகவும் சினமடைந்து "அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்" என வினவினான்.

சமண குருமார் "அரசே அந்தப் பாலகன் தங்கியிருக்கும் மடத்தில் 'தீ' பிடிக்குமாறு மந்திரம் செபித்தல் வேண்டும். அப்படிச் செய்யின் அவனும் அவனுடைய தொண்டர்களும் மதுரையை விட்டு ஓடிவிடுவார்கள்" என்றார்கள்.

'மிகவும் நன்று. அப்படியே செய்யுங்கள்' எனப் பாண்டியன் அனுமதி வழங்கினான்.

தவவேடம் பூண்டு அவச்செய்கைகளையே புரியும் சமணர்கள் தங்கள் மந்திரத்திரத்தைச் செபித்து மடத்திற்குத் தீயை ஏவினார்கள்.

ஆதி மந்திரமாகிய பஞ்சாட்சரத்தை ஓதுவோரை ஏனைய மந்திரங்கள் ஏதும் செய்யாது என்பதை அந்த மூடர்கள் அறியவில்லை.

தங்கள் செயல்கள் பலிதமடையாமை கண்ட சமணர்கள், நடு இரவில் தீப்பந்தங்களுடன் சென்று சிவனடியார்கள் துயிலும் மடத்திற்குத் தீ வைத்தார்கள்.

இந்தக் கொடுமையைக் கண்ணுற்ற பரிசனங்கள் அவர்கள் இட்ட தீயை அவித்துவிட்டு, சம்பந்தப் பிள்ளையாரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினார்கள்.

அதைக் கேட்ட ஞானசம்பந்தர், "ஆ.. மாதவர் துயிலும் மடத்துக்குப் பாவிகள் தீ வைப்பதோ? மன்னவன் ஆட்சிமுறையின் தவறே இதற்குக் காரணம். குடிகள் செய்த குற்றம் கொற்றவனையே சார்தல் அரசியல்



தர்மமாகும். சோம சுந்தரப் பெருமானின் திருவருளால், சமணர்கள் இட்ட தீயைப் பாண்டியனிடம் செல்லும்படி பணித்தலே முறையாகும். ஆனால், அந்தத் தீயின் வெம்மை அவனை அழித்து விடுமே" எனக் கவலையுற்றார்.

பின்னர், பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியரின் மங்கல நாண் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையும், பாண்டியனை மீண்டும் சிவநெறியில் நிற்கச்செய்தல் தமது கடமை என்பதையும், திருநீற்றின்மகிமையை அனைவரும்அறியச்செய்யவேண்டும் என்பதையும் திருவுள்ளத்தில் கொண்டு 'சமணர் இட்ட தீ பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பணித்து திருப்பதிகம் பாடியருளினார்.

வெந்தழல் வெப்புநோயாக உருவெடுத்துப் பாண்டியனைச் சுட்டது.

[மருத்துவர்களும் சமணகுருமாரும் ஒன்று] சமண குருமாரும் மருத்துவர்களும் ஒன்றுதிரண்டு செய்த சிகிச்சைகள் அனைத்தும் பயனற்றுப்போயின.

குலச்சிறையாரும் மங்கையற்கரசியாரும் பணிந்து வேண்ட ஞானசம்பந்தப் பெருமான், 'திருநீற்றுப் பதிகம்' பாடிப் பாண்டியனின் மேனியில் திருநீறு பூசி, வேந்தனின் வெப்பு நோயை நீக்கி அருளினார்.

தவறை உணர்ந்த பாண்டியன் ஞானசம்பந்தர் திருவடி மீது வீழ்ந்து வணங்கி 'அடியேன் உய்ந்தேன்' என்றுகூறி மீண்டும் சிவநெறியில் நின்றான்.

பாண்டிய நாட்டில் சைவமும் தமிழும் தழைத்து ஓங்கின.

*செய்யனே திரு ஆலவாய் மேவிய*
*ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப்*
*பொய்யர் அமணர் கொளுவும் சுடர்*
*பையவே சென்று பாண்டியற் காகவே.*

**இன்று திருஞானசம்பந்தநாயனாரின் குருபூஜைத் தினமாகும், அதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

- அழகு அருணாசலம் -

# வெள்ளிக் கிரகத்தில் இருந்து வழியும் நெருப்புக் குழம்பு!

வெள்ளிக் கிரகத்தின் சமவெளிப் பிராந்தியங்களில் தரையில் ஏராளமான சிறிய வெடிப்புகள் உள்ளன.

காயங்களிலிருந்து இரத்தம் வழிவதுபோல் இந்த வெடிப்புகளின் வழியே இக்கிரகத்தின் உட்புறத்திலிருந்து நிறைய நெருப்புக்குழம்பு வழிந்தோடியது காணப்படுகிறது,

இவ்விதம் நெருப்புக்குழம்பு வெளிப்பட்டுள்ள இடங்களில் எரிமலைகள் உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பூமியில் நெருப்புக் குழம்பானது எரிமலைகளின் மூலமே வெளிப்படுகிறது.

பூமியில் புதிதாக ஓர் எரிமலை உருவாகும்போது முதலில் தரையிலிருந்து நெருப்புக் குழம்பு வெளிப்பட ஆரம்பித்து இறுதியில் அங்கு கூம்பு வடிவில் எரிமலை தோன்றி விடுகிறது.

இத்துடன் ஒப்பிடுகையில் வெள்ளிக்கிரகத்தில் சமவெளியில் உள்ள வெடிப்புகளிலிருந்து நெருப்புக் குழம்பு வழிந்துள்ளது.

இக் கிரகத்தின் உட்புற வெப்பத்தில் பெரும் பகுதி பெரிய எரிமலைகள், வெடிப்புப் பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுவதற்குப் பதில் சமவெளிகளில் தரையில் உள்ள வெடிப்புகள் மூலம் வெளிப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

தரை வெடிப்புகள் மூலம் வெளிப்பட்டுள்ள நெருப்புக் குழம்பானது இக்கிரகத்தில் நில அமைப்பை உருவாக்குவதில் பங்களித்துள்ளதாகவும் கருதப்படுகிறது.

வெள்ளிக்கிரகத்தில் பெரிய எரிமலைகளும், வெடிப்புப் பள்ளத்தாக்குகளும் உள்ளன என்பது ஏற்கனவே அறியப்பட்டுள்ள விஷயமாகும்.

தரை வெடிப்புகள் மூலம் நெருப்புக்குழம்பு வெடிப்பட்டுள்ளது இப்போது தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள கார்னெல், பிரௌன் பல்கலைக் கழகங்கள், தேசிய வானவியல் மற்றும் அயனி மண்டலக் கேந்திரம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பியூர்டோ ரிக்கோவில் உள்ள பிரம்மாண்டமான அரெசிபோ வானொலி டெலஸ்கோப்பைப் பயன்படுத்தி வெள்ளிக்கிரகத்தை ஆராய்ந்து இத்தகவல்களைக் கண்டறிந்தனர்.

ரேடார் அலைகளை வெள்ளிக்கிரகத்தை நோக்கிச் செலுத்தி ஆய்வுகள் நடத்தப்பட்டன.

வெள்ளிக் கிரகத்தில் உள்ள பீடபூமிகளுடன் ஒப்பிடுகையில் சமவெளிப்பகுதிகளில் விண்பொருள்கள் வந்து விழுவதால் ஏற்படுகிற வட்டக்குழிகள் (Craters) குறைவாகவே உள்ளதாகவும் ஆய்வுகளில் தெரியவந்தது. ★

## வேதனைகள் தீர்ப்பவனின் பாதம் போற்றி!

ஐம்புலனுக் கெட்டாத பரம்பொருளை
அனுபவிக்கும் பெரும்பேறு மனசுக்குண்டு
நம்புமுயர் பெரியார்தம் அனுபவத்தை
நாடறியச் சொல்லிவைத்த போதும்நாங்கள்
வெம்புதுயர் கொண்டிங்கே அலைகின்றோமே
வேற்றுமைகள் மிகவளர்த்தே மெலிகின்றோமே
அம்புவியில் அருவமாய் உருவங்கொள்ளும்
ஆண்டவனை அனைத்திலுமே காண்போமென்றும்

ஆண்டவனின் அனுபவத்தை அருளாலென்றும்
அவ்வவரே கண்டிருத்தல் வேண்டுமென்றோ
ஈண்டவனின் எழிற்கோல மெங்குமுண்டு
இணையில்லாம் பெருந்துணையா மவனையென்றும்
வேண்டிவரின் விரைந்திடுவா னுள்ளமதில்
வேடிக்கை விளையாட்டு விநோதமெல்லாம்
வேண்டிடுமோ விண்டிடுவீர் வியனுலகீர்
வேதனைகள் தீர்ப்பவனின் பாதம்போற்றி.

இதமான மலரொன்றின் வாசனையை
இன்பமுடன் அனுபவிக்க மூக்கிற்காகும்
பதமான தண்மையோடு சூடுதன்னை
பரிசித்து அறிவதுவும் உடம்பதாகும்
விதமான சுவைகளையே ருசிபார்த்து
விரைந்துரைக்கும் மோரமைப்பு நாவிற்குண்டு
சுதமான ஓசைகளை நுகர்வதற்கு
கருத்தாவா யமைவதுமே செவியதாகும்.

பச்சைதனை அனுபவிக்கும் பக்குவமும்
பார்வைமிகு கண்ணுடைய கடமையாகும்
இச்சையுடன் எதையுமே அனுபவிக்க
இருகண்கள் முயன்றாலும் முடியாதாகும்
மெச்சுபுகழ் ஐம்புலனும் வெவ்வேறாக
மேவிவரு மனுபவத்தை பெற்றபோதும்
இச்சையுள மனமின்றி இவைகளெல்லாம்
எந்தவித அனுபவமும் பெறவேமாட்டா;

—முருகவே பரமநாதன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்தும் மலராத...



தோழிகளின் மத்தியில் சுவப்னா வருவதைப் பார்த்ததும் ராஜனின் மனம் 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. கோவில் தூணின் பின்னால் நின்று சுவப்னாவை அவதானித்தான்.

பெண்மைக்குரிய இயல்புடன் அவள் நடந்துசென்று கொண்டிருந்தாள். கோவில் திருவிழாவும் முடிய இன்னும் சில நாட்கள்தான் இருந்தன.

ஆனால் ராஜனினால் சுவப்னாவின் மனதை அறிய முடியவில்லை. மாலைவேளைகளில் நடைபெறும் உற்சவத்துக்கு சுவப்னாவைக் காண முடியாது தவித்தான். இருந்தாலும் ராஜன் தன் முயற்சியைக் கைவிடவில்லை.

ராஜன் எதிர்பார்த்திருந்த தேர்த்திருவிழாவும் வந்தது. காலை எட்டு மணிக்கே ராஜன் கோவிலுக்கு வந்துவிட்டான். அவனது கண்கள் சுவப்னாவைத் தேடின.

பிள்ளையாரைச் சுற்றி வலம் வரும்போது சுவப்னாவை கண்டுகொண்டான். அவனைக் கண்டதும் அவள் தனது விழிகளைக் கீழே தாழ்த்திக்கொண்டாள்.

அவள் விழிகளைக் கீழே தாழ்த்தியது நாணத்தினால் தானே அல்லது அவனது பார்வையை சந்திக்க விரும்பாததினால்தானோ என்று அவனால் சிந்திக்க முடியவில்லை.

பெண்களுக்கு எப்போதும் ஒரு குணம் உண்டு. தாம் விரும்புகின்ற எந்தப் பொருளையும் உடனே விரும்புவதாக காட்டிக்கொள்ளமாட்டார்கள். ஆனால் அது தமக்குக் கிடையாதா என ஏங்கி இருப்பார்கள்.

சுவப்னா கோவிலை விட்டு நீங்கியதும் ராஜன் தனது இதயம் வெறுமையானதை உணர்ந்தான். நெஞ்சினுள் ஓர் இனம்புரியாதவலி தோன்றியது.

காலம் உருண்டோடிக் கொண்டேயிருந்தது. இரண்டு முறை இரத உற்சவமும் நடந்து முடிந்துவிட்டது. ஆனால் ராஜன் சுவப்னா விவகாரத்தில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

ராஜன் வேலைவாய்ப்பின் நிமித்தம் இரண்டு வருடங்கள் வெளிநாட்டுக்குச் சென்றான். அந்த இரண்டு வருடத்திலும் அவனது மனம் சுவப்னாவையே நினைத்தது.

இரண்டு வருட முடிவில் ஊருக்கு வந்தபோது முதல் வேலையாக அவன் சுவப்னாவை விசாரித்தான். அவள் இன்னமும் திருமணம் ஆகாமல் இருப்பதை அறிந்தான். தனது தாயிடம் விருப்பத்தைத் தெரிவித்தான்.

இவ்வளவு காலமும் குடும்பத்துக்கு உழைத்துக் கொடுத்த மகனின் விருப்

- கவிவரன் -

பத்தை மறுக்கவா போகிறார் தாய்.

சுவப்னாவின் வீட்டிலும் சம்மதம் கிடைத்தது திருமணப்பேச்சு. நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வெளிநாட்டில் இருந்து வரும்போது ராஜனின் நண்பன் ஒருவன் தனது வீட்டிற்கு சில பொருள்களைக் கொடுத்து விடும்படி கொடுத்திருந்தான்.

எனவே அப்பொருள்களைக் கொண்டு ராஜன் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றான்.

நண்பனின் வீட்டில் அவனுக்கு நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜனை மத்தியானம் சாப்பிட்டு போகும்படி வீட்டிலுள்ளவர்கள் வற்புறுத்தினர். அவர்களின் வேண்டுதலை தவிர்க்க முடியாது ஒப்புக்கொண்டான்.

உணவு பரிமாறும்போது நண்பனின் தாய் ராஜனை நோக்கி,

'தம்பி உமக்கு திருமணம் ஆகிவிட்டதா' எனக்கேட்க,

'இல்லை இனிமேல்தான் யோசிக்கவேண்டும்' என்று கூறினான் ராஜன்.

பெண்களுக்குத் தெரியும் என்ன காலத்தில் என்ன செய்யவேண்டுமென்பது. அது அவர்களுக்கு கடவுள் கொடுத்தகொடையாகும்.

உணவு பரிமாறிக்கொண்டிருந்த நண்பனின் தாய்,

'பிள்ளை உமா தம்பிக்கு குடிக்கிறதிற்கு தண்ணி கொண்டுவா' என்று குரல் கொடுத்தாள்.

சிறிது நேரம் கழித்து உமா கையில் தண்ணீர் டம்ளருடன் வந்தாள். உமாவின் முகத்தை ராஜன் ஏறிட்டு நோக்காமல் தண்ணீர் டம்ளரை கையில் வாங்கினான்.

சுவப்னாவை மனத்தால் நேசிக்கத் தொடங்கிய பின்பு அவன் எந்தப் பெண்ணையும் அக்கறையுடன் அவதானிப்பதில்லை.

ராஜன் சாப்பிட்டு முடிந்ததும் கை கழுவுவதற்கு என வெளியே சென்றபோது எதிர்பாராத விதமாக உமாவை நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவனது பார்வையை சந்திக்க முடியாது தலை குனிந்தாள் உமா. அவள் தலையைத்தான் குனிந்தாள். ஆனால் ராஜனின் மனதில் சலனத்தை ஏற்படுத்திய பெருமிதத்தில்தான்.

சுவப்னாவை நேசித்த காலம் ராஜனுக்கு மறந்துவிட்டது. உமாவை மனைவியாக அடைய வேண்டுமென்ற நினைப்புடன் 'போயிட்டு வாறன்' என்று கூறியபடி தனது வீட்டை நோக்கி நடந்தான். அவனது நெஞ்சில் பூரணமாக உமா நிறைந்திருந்தாள்.

வீட்டில் தனது முடிவை ராஜன் கூறியதும் ராஜனின் தாய் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டாள். வசதியாக வாழும் குடும்பத்தைச் சேர்ந்த உமாவை திருமணம் செய்வதினால் தன்னுடைய மகனின் வாழ்வு சிறக்கும் என்று முடிவெடுத்தாள்.

ராஜனின் முடிவை அறிந்த சுவப்னா அதிர்ச்சியடைந்தாள். எனக்காக ஏங்கியவர் ஏன் வேறு பெண்ணைத் திருமணம் செய்ய ஒத்துக்கொண்டார் என எண்ணிக் கண்ணீர் வடித்தாள். ராஜனை நேரில் சந்தித்துக் கேட்டபோது ராஜன்,

'உங்களை விரும்பியது உண்மை. எனது ஆத்மாவின்

**சஞ்சீவி சிறுகதை**

ராகம் உமா என்பதை நான் அறிந்து கொண்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்' என்றி கூறினான்.

ராஜன்-உமாவின் திருமணமும் நடைபெற்றது. ராஜன் மீண்டும் சவுதிக்குச் சென்றான். சுவப்னா ராஜனின் நினைவுடன் வாழ்ந்தாள்.

ராஜனின் கிராமம் ஒரு நாள் ஷெல் தாக்குதலினால் திக்குமுக்காடியது. அதில் உமா தனது இருகால்களையும் இழந்தாள். அவளைப் பராமரிப்பதே கடினமான செயலாகிவிட்டது.

உமாவின் நிலையை அறிந்து சுவப்னா அவளுக்கு உதவி புரிந்து வந்தாள். இவர்களிடையே நெருக்கம் அதிகரித்தபோது சுவப்னாவை ராஜனின் காதலி என அறிந்தாள் உமா.

இரண்டு வருடம் முடிந்து தனது வீட்டுக்கு வந்த ராஜனுக்கு தன்னுடைய வீட்டில் சுவப்னா நிற்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அறைக்குள்ளிலிருந்து சக்கர நாற்காலியில் வந்த உமா,

'அத்தான் ஏன் திகைத்துப் போய் நிற்கிறியள். எனக்கு எல்லாம் தெரியும்' என்றாள்.

நாட்கள் பல கடந்தன. ராஜனுக்குத் தேவையானவற்றை சுவப்னா கவனித்து வந்தாள்.

உமாவும் எதற்கு எடுத்தாலும் சுவப்னாவை ராஜனிடம் 'அதைக் கொடு, இதைக் கொடு' என்று கூறியபடி இருந்தாள்.

ஒருநாள் உமா தனது மனக் கிடக்கையை ராஜனிடம் வெளியிட்டாள். ராஜனின் சம்மதத்தையும் பெற்றாள். அதுபோல சுவப்னாவிடம் கேட்டபோது,

'ராஜனை உனக்குத் திருமணம் செய்ய விருப்பமா'

'நான் ராஜனை விரும்பியது உண்மை. இப்பொழுதும் அவரையே விரும்புகிறேன். மலர் ஒரு முறை தான் பூக்கும். வாடினால் மீண்டும் புத்துயிர்ப்பு அடையாது. அதுபோல் தான் மனமும், கடந்தகால நினைவுகளுடன் என்னை வாழவிடுங்கள்' என்றாள். அப்போது சுவப்னாவின் பெண்மை மிளிர்ந்தது.

(யாவும் கற்பனை) ★

# அறிவியல் கட்டுரை எழுத பயன்படும் அரிச்சுவடி!

□ அறிவியல் கட்டுரை எழுத ஆவல் உள்ளவர்கள் தங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன.

அவையாவன;

வாசகர் நிலை: முதலில் நமது கட்டுரையை யார் வாசிப்பார்கள் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் எழுதுவது வெகுஜனப் பத்திரிகையா அல்லது அறிஞர்கள் மட்டுமே படிக்கும் ஆய்வு இதழா என்பதை நாம் உணர வேண்டும்.

- ஜி. வில்சன் அமல்ராஜ் -

அதற்கேற்றவாறு நமது நடை அமைதல் வேண்டும்.

தலைப்பு: எதைப்பற்றி எழுதப்போகிறோம் என்பதை நாம் வரையறுத்துக் கொள்ளவேண்டும், நமது தலைப்பு 'நறுக்' என்று இருக்க வேண்டும்.

ஒரு கருத்து ஒரு கட்டுரை என்பதுதான் நல்லது.

பரிச்சயம்; நமக்குப் பரிச்சயம் உள்ள துறையில்தான் நாம் கட்டுரை எழுத வேண்டும்.

அப்போதுதான் அதைப் படிப்பவர்கள் நாம் சொல்வதை நம்புவார்கள்.

ஒரு பொருளாதாரப் பேராசிரியர் குடல்வால் பற்றி எழுதினால் யாரும் நம்பமாட்டார்கள்.

அதே போல ஒரு மருத்துவர் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி என்று எழுதினால் பலர் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

நான்கு வகை

அறிவியல் கட்டுரைகள் நான்கு வகைப்படும். அவற்றில் எது நமது தலைப்புக்குப் பொருந்தும் என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அவையாவன;

விளக்கக் கட்டுரை: இதில் நாம் ஒரு தலைப்பைப் பற்றி நமக்குத் தெரிந்ததை எழுதுகிறோம்.

எறும்புப் புற்றைப் பற்றி நாம் எழுதுவதாக வைத்துக் கொள்வோம். இதில், எறும்புகள் எப்படி இதைக் கட்டுகின்றன. ஏன் கட்டுகின்றன, இதன் வடிவம் என்ன போன்ற வினாக்களுக்கு நாம் விடைதருகிறோம் அவ்வளவுதான்.

தூண்டுதல் கட்டுரை: இதில் நாம் சில வாதங்களை வைத்து, சில அறிவுரைகளைக் கூறி வாசிப்போரை சிலவற்றைச் செய்துமாறு தூண்டுகிறோம்.

எடுத்துக்காட்டாக, இரைச்சலைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுகிறோம் என வைத்துக் கொள்வோம்.

அதில் இரைச்சலினால் ஏற்படும் தீமைகளை விளக்கி இரைச்சலைத் தவிர்ப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குகிறோம்.

வருணனைக் கட்டுரை: நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் அவற்றைப்பற்றி எழுதுவதற்கு வருணனைக் கட்டுரை என்று பெயர்.

எடுத்துக்காட்டாக, ஒரு மனநோயாளி எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதைப்பற்றி நாம் எழுதலாம்.

தொடர் நிகழ்வுக் கட்டுரை: ஒரு நிகழ்வை காலத்தின் அடிப்படையில் பல கட்டங்களாகப் பிரித்து அவற்றை வரிசைபடக் கூறினால் அது தொடர் நிகழ்வுக்கட்டுரை.

எடுத்துக்காட்டாக, தாயின் வயிற்றில் குழந்தை வளர்வதைப் பற்றி எழுதலாம்.

அப்போது, முதல் மாதத்தில் சிசுவின் தோற்றம், இரண்டாவது மாதத்தில் சிசுவின் தோற்றம் என்று பத்து மாத காலத்தில் சிசுவின் வளர்ச்சியைப்பற்றி நாம் எழுதுகிறோம்.

மேலே சொன்ன தகவல்களை அறிவியல் கட்டுரை எழுதுவதற்கான அரிச்சுவடி என்று நாம் கருதிக்கொள்ளலாம். ★

## நகைச்சுவை

முதலாவது வீரர்: இராணுவத்தில் சேர்வதற்கு உம்மைத் தூண்டியது யார்?

2 ஆவது வீரர்: எனக்கு மனைவி இல்லை. யுத்தம் செய்ய விரும்பினேன், சேர்ந்தேன். உமது நிலை......

முதலாவது வீரர்: நல்லது. எனக்கு மனைவி இருந்தாள். ஆனால் அமைதியை விரும்பி இராணுவத்தில் நான் சேர்ந்தேன். ★

# புதுமைப்பித்தன் கதைகளில் பெண்கள்!

- பெண்களின் மன உணர்வுகளை, செயற்பாடுகளை யதார்த்தமாகவும், உளவியல் பாங்குடனும், கலாபூர்வமாகவும் பல பெண் எழுத்தாளர்களைக் காட்டிலும் சிறப்பாகச் சித்தரித்துக் காட்டியவர்;

பெண்கள் மேல் அளவு கடந்த பரிதாபமோ; வெறுப்போ இன்றிப் பெண்களைப் பெண்களாகச் சித்தரித்து, அவர்களின் ஏக்கம், சோகம், பாசம், ஒடுக்கப்பட்ட உணர்வு, துணிச்சல்களை ஒளிவு மறைவின்றிக் காட்டியவர்.

கனவுகளைக் கலைத்து, யதார்த்த வாழ்வின் குரூரங்களை அதிர்ச்சியூட்டும் வகையில், வாசகர் மனங்களில் பதிய வைத்து அனுபவ ரீதியாகச் சிந்திக்கத் தூண்டியவர் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் சிறுகதைகளில் வரும் பெண்கள், பொருளாதார ரீதியிலும் சமூகக்கட்டுப்பாட்டிலும் சிக்குண்டு அவதிப்படும் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தினர், ஏழைகள் என்று பலதரப்பட்டவர்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலையால் உடல் உள்ளத்தால் தவறிப் போகும் பெண்கள், விபசாரி.

கணவனால் உதாசீனப் படுத்தப்பட்டு இன்னொரு

- ராஜமார்த்தாண்டன் -

வனை மானசீகமாக விரும்பும் பெண்.

இளம் வயதில் கணவனை இழந்து மனச் சஞ்சலம் அடையும் விதவைப்பெண், போன்றோரின் பிரச்சினைகளும், மனப்போராட்டங்களும் கதைகளில் விவரிக்கப்பட்டுள்ள போதிலும்,

எந்த ஓர் இடத்திலும், பாத்திரங்களின் உரையாடல்களிலோ, சம்பவ விவரிப்பிலோ, கவர்ச்சியூட்டும் சுவாரஸ்யமோ, ஆபாசமோ கிஞ்சித்தும் இடம் பெறவில்லை.

பிரச்சினைகளைப் பிரச்சனைகளாக, அவற்றின் சிடுக்குகள், குரூரங்களுடன் சுட்டிக்காட்டி, வாசகரைச் சிந்திக்க வைப்பதொன்றே புதுமைப்பித்தனின் கலைச் சித்தாந்தம் ஆகும்.


புதுமைப்பித்தன் கதைகளில் வரும் பெண்கள் ''வள வளா'' என்று பேசுவதில்லை.

அவர்களால் பேசப்படும் ஒரு சில வார்த்தைகளும் அவர்களின் குணாம்சம், உள்ளக்கிடக்கைகளைத் துல்லியமாக வெளிக்காட்டி விடுகின்றன.

கதைகளில் சித்தரிக்கப்படும் பெண்கள், தங்கள் மனோபாவங்களுக்கும் வாழ்க்கைப் பின்னணிக்கும் ஏற்ப இயல்பாகச் செயல்படுகிறார்கள். இவர்கள் ஆசிரியரின் ஊதுகுழல்களாகப் பேசுபவர்கள் அல்லர்.

ஆசிரியரின் கொள்கைகளுக்கேற்ப ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளும் அல்லர். புதுமைப்பித்தனின் கலை வெற்றியில், இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். ★

## சொற்சிலம்பம்



சொற்சிலம்பம் இல: 116
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................
விலாசம் ..................................
..................................

இங்கே வெட்டுக

## போட்டி இல: 116

**இடமிருந்து வலம்:**

1. சிவபெருமான் 5. கிரகம் 6. முதுமை 8. பெண்ணின் பெயர் ஒன்று 11. விண்வார்த்தை பேசுதல் 14. மிருகம் 15. அழகு இடம் மாறியுள்ளது 16. இரண்டு 17. கவிதை 18. ஒரு நோய் 19. நூல் 20 சயிறு.

**மேலிருந்து கீழ்:**

1. தருமவான் 2. சாதிமல்லிகை 3. பகுதி 4. அடிமையானவன் (தலைகீழாக) 7. மயில்தோகை 9. உண்மை 10. சுற்றல் 11. கீறு 12. தாழி (குழம்பியுள்ளது) 13. நிரம்பி வழிதல் 14. முறைமை 17. 'திருவடி' பூஜையை இப்படியும் அழைக்கலாம்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 20 - 06 - 1990

## பொது அறிவுப்போட்டி இல. 41

1. ஒரே சமயத்தில் எட்டு ரொக்கெட்டை ஏவிய நாடு...? ... ... ... ... அமெரிக்கா / ரஷ்யா
2. முதல் முதல் தோன்றிய நாகரீகம்...? ... ... ... நைல்நதி / சிந்துவெளி
3. உலகில் புகழ்பெற்ற சுதந்திரச் சிலை உள்ள நகரம்...? ... ... ... நியூயோர்க் / பாரீஸ்
4. பூமியைத் தவிர வேறு எந்தக் கோளில் கடல் இருக்கிறது...? ... ... ... வீனஸ் / யுப்பிட்டேஸ்
5. அண்மையில் ஒன்றாக இணைந்த இரு நாடுகள்...? ... ... ... ... வட.தெற்குஜேர்மன் / கிழக்கு. மேற்கு ஜேர்மன்
6. எவரெஸ்ட் மலை உச்சிக் குப்பைகளை ஏலம் விடப்போகும் நாடு...? ... ... ... ... அமெரிக்கா / ஜப்பான்
7. இறந்தபின் ''பிரமிட்'' டினுள் வாழ விரும்பும் நடிகர் யார்...? ... ... ... மார்லன் பிராண்டோ / ரிச்சட் பேர்ட்டன்
8. யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ஐரிஷ் பிரசை...? ... ... ... லோங் அடிகளார் / கேர்னல் ஒல்கொட்
9. பதினாறு சந்திரன்களை உடைய கிரகம்...? ... ... ... வியாழன் / வெள்ளி
10. ''தங்கத் தாத்தா'' என அழைக்கப்படுபவர்...? ... ... ... ... சோமசுந்தரப்புலவர் / குமாரசாமிப்புலவர்
11. உலகில் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நகரம்...? ... ... ... ... டோக்கியோ / பீகிங்
12. பிறை எந்த நாட்டின் தேசியச் சின்னம்...? ... ... ஈரான் / பாகிஸ்தான்

பெயர்:- ..................................
விலாசம்:- ..................................
..................................

பொது அறிவுப்போட்டி இல: 41
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டுக

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 13 - 06 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவாகப் பெற்று வளமாக வாழ

# மனிதனுக்கு வழிகாட்டும் பறவை இனம்!



☐ பெற்ற குழந்தைகளை வளர்த்து ஆளாக்கச் சக்தியும் வசதியும் தனக்கு உள்ளதா என்பதைத் தீர ஆலோசிக்காமலேயே சில பேர் நிறையக் குழந்தைகளைப் பெற்று விட்டுத் திண்டாடுவதை நாம் பல குடும்பங்களில் பார்க்கிறோம்.

ஆனால் பறவைகள் அப்படி இல்லையாம்.

தமது கூட்டில் எவ்வளவு குஞ்சுகளை வைத்துப் பராமரிக்க முடியுமோ அந்த எண்ணிக்கையிலேயே முட்டையிடுகின்றன என்று 'நேச்சர்' (Nature) இதழில் வெளியான ஒரு கட்டுரை கூறுகிறது.

ஒக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பெற்றிபோர் (R. A. Pettifor) என்பவரின் ஆய்வுக்குழுவினர் இந்த உண்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஒக்ஸ்போர்ட்ஷயரில் உள்ள ஒரு தோப்பில் வசித்த Parus major என்ற இனத்து பெரிய ரிற் (GreetTit) பறவைகளைத் தீவிரமாக ஆராய்ந்து அவர்கள் இதைக் கண்டுபிடித்தார்கள்.

பறவைகள் எப்படித் தமது குடும்பங்களின் அளவை நிர்ணயித்துக் கொள்கின்றன என்பதைப் பற்றிப் பல முக்கியமான துப்புக்களை அவர்கள் சேகரித்திருக்கிறார்கள்.

ஒரே இனத்தைச் சேர்ந்த வெவ்வேறு பறவை ஜோடிகள் ஒரு தரத்தில் ஒரே எண்ணிக்கையில் முட்டைகள் இடுவதில்லை.

இது ஏன் என்பதற்கு பறவையியல் நிபுணர்கள் இரண்டு விதமான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனர்.

பெற்றிபோர் குழுவினரின் ஆய்வுகள் அவற்றில் ஒரு கொள்கையைத்தான் சரியானதாகக் காட்டுகின்றன:

உயிர் பிழைக்கப் பெரும் வாய்ப்புள்ள எண்ணிக்கையில் தான் பறவைகள் முட்டையிடும் என்று அந்தக் கொள்கை கூறுகிறது. அந்த எண்ணிக்கைக்கும் மேற்பட்டும் இடாது. குறைவாயும் இடாது.

பறவைகள் தமது குஞ்சுகளின் உடல்நலத்தை விடத் தமது சொந்த உடல்நலத்தை அதிகம் மதிக்கின்றன என்று மற்றொரு கொள்கை கூறுகிறது.

அதனால் அவை தமது உடல் நலத்திற்கோ, எதிர்காலச்சந்ததி விருத்தித் தன்மைக்கோ ஊறு ஏற்படாத வகையில் ஒரு உகப்பான எண்ணிக்கையில் முட்டைகளை இடுகின்றதாக அது கூறுகிறது. ★

## மங்கோலியாவின் மர்ம அக்கினிப் பெண்

● மங்கோலியா நாட்டில் உலான்படார் நகரைச் சேர்ந்த 22 வயது இளம்பெண் உண்டுர்மா பாட்முஞ்ச்.

இந்தப் பெண் அக்கினிப் பெண் என்று அழைக்கப்படுகிறார்.

இவள் ஒரு இடத்தைக் கடந்து செல்லும்போது அங்கு உள்ள பொருட்கள் தானாகவே தீப்பிடித்து எரிந்து விடுகின்றன.

இதனால் அவளது குடும்பத்தினர் பல தடவை வெவ்வேறு இடங்களுக்கு மாறிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அவள் நிற்கும் இடத்தில் துணியோ, காகிதங்களோ இருந்தால் உடனடியாக அவை தீ பிடித்து எரிகின்றன.

ஆனால் அவற்றின் சாம்பல் எதுவும் அந்த இடத்தில் காணப்படுவதில்லை.

இதுபோன்ற காரணத்தால் அவள் மருத்துவமனையில் இருந்தபோது அவளே கூட தீயில் சிக்க வேண்டியதாயிற்று.

கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதியில் இருந்து மே 2 ஆம் திகதி வரை அவளால்65 தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த அதிசய அக்கினிப் பெண் பற்றிய மர்மத்தை யாராலும் புரிந்து கொள்ளள முடியவில்லை. ★

## நீச்சல் சாதனை

● கனடாவில் ஜூலை 1989இல் ஒரு நீச்சல் சாதனை நிகழ்ந்தது. விக்கிகெய்த் என்பவர் கைகளை மட்டுமே அசைத்து ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் மனிதராவார். இது ஓர் உலக சாதனை. ★

## பொற்கொல்லருக்கு பல்கலைக்கழகம்

● சமீபத்தில் டெர்லினில் பொற்கொல்லர்களுக்கான பல்கலைக்கழகம் என்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகத்தில் தங்க நகை செய்வது சம்பந்தமான பாடங்கள் நடத்தி, அதில் வெற்றி, பெறும் மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவும் நடத்துகின்றனர். ★

## தனிமனிதரின் சாதனை

● 1906-ல் வில்லியன் ஹென்றி பரரோ என்பவர் கலிஃபோர்னியாவின் மலையைக் குடைந்து ஒரு சுரங்கம் தோண்டத் தொடங்கினார்,

32 வருடகாலம் பாடுபட்டு, 1872 அடி குறுக்கே தோண்டி சுரங்கப்பணியை முடித்தார் அந்தத் தனி மனிதர். ★

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## அறிவுரை

★ ஆரோக்கியமான உடம்பும் மனநிம்மதியும் கிடைக்க நாம் ஆண்டவனை வேண்டுவோமாக.

— ஜீவனல்

★ உலகம் ஒரு நிலைக் கண்ணாடி. அதில் யார் பார்த்தாலும் அவர்கள் முகங்களைக் காட்டும்.

— தாக்கரே

★ ஆக்குபவனும் நான். அழிப்பவனும் நான். ஆகவே நியாயமான வழியில் செயல்படு.

— கிருஷ்ண பரமாத்மா

## தூங்குர்போது யார் பாதுகாப்பு?

☐ ஒருமுறை வினோபாஜி. பணக்காரர் ஒருவரை பூதானத்திற்காகக் காணச்சென்றார். அப்போது அவர் உறங்கிக்கொண்டிருந்தார்.

அவர் உறங்கி விழிக்கும் வரை காத்திருந்த வினோபாஜி விழித்ததும் அவரைக் காணச்சென்றார்.

அவரைச் சுற்றி தடி, கம்பு, அரிவாள் போன்ற ஆயுதங்கள் இருந்தன. அவரிடம் —இவை எல்லாம் எதற்கா? என்றுவினோபாஜி வினாவினார்.

அதற்குஅந்தப் பணக்காரர் 'எதிரிகள் யாராவது திடீர் என்று தாக்கினால் திருப்பித் தாக்க' என்று பதிலளித்தவுடன்,

வினேபாஜி மேலும் 'அது விழித்திருக்கும்போது தானே? உறங்கும்போது? என்றவுடன் தான் அப்பணக்காரருக்கு புரிந்தது. பதில் சொல்லாது விழித்தார்.

வினோபா அவரிடம் 'தூங்கும்போது யாரும் தன்னுடைய பாதுகாப்பைத் தேடமுடியாது. ஆத்மாவிற்குப் பாதுகாப்பான அந்த இறைவன் தான் உறங்கும் போதும் பாதுகாப்பான்' என்றதும் பணக்காரர் தலை குனிந்தார். ★

# அண்ணலுக்கான சந்தனக்கட்டை

# அன்னைக்குப் பாவிக்கப்பட்டது!

● காந்தி அடிகள் ஒரு சமயம் காலவரையறை இல்லாத உண்ணாவிரதம் இருந்தார்.

இங்கிலாந்து பிரதம மந்திரி



காந்திஜி

யாக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில், 'காந்தி பட்டினியாக இருந்து சாகவிரும்பினால் நான் அதைத் தடுக்க விரும்பவில்லை' என்று இறுமாப்புடன் கூறினார்.

காந்தியடிகள் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது.

இங்கிலாந்து அரசு காந்தியடிகளின் மரணநாளைக் கணக்குப்போட்டு அவரது ஈமச்சடங்குகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளை இரகசியமாகச் செய்யத்தொடங்கியது.

இரண்டு புரோகிதர்கள் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

ஈமச்சடங்குகளின் போது மந்திரம் ஓத அவர்கள் தயாராய் இருந்தார்கள்.

அந்தச் சிறைக்கு இரகசியமாய் சிதைக்கு நெருப்பு வைக்க சந்தனக்கட்டைகளும் கொண்டுவரப்பட்டன.

தண்ணீரும், உப்பும், சிறிது எலுமிச்சைபழச்சாறு மட்டும் காந்தியடிகள் உயிர்வாழ உதவின.

எல்லோரும் எதிர்பார்த்தபடி காந்தியடிகள் உயிர் துறக்கவில்லை.

ஆனால்!...

அண்ணலின் மனைவி கஸ்



கஸ்தூரிபா

தூரிபாய் பின்னர் மரணமடைந்தார். காந்தியடிகளுக்காகக் கொண்டுவரப்பட்ட சந்தனக்கட்டைகள் முதலியன அன்னை கஸ்தூரிபாயின் ஈமச்சடங்குகளின் போது பயன்படுத்தப்பட்டது. ★

# விற்பனைக்கு வந்துள்ள செயற்கை நகங்கள்!

☐ நம் நாட்டுப் பெண்கள் விரல் நகங்களை நீளமாக வளர்த்து அதில் அழகாகப் பொலிஷ் போடுகின்றனர் கையின் கவர்ச்சிக்காக!

இந்த நகம் வளர்ப்பதில் இன்று அமெரிக்கப் பெண்கள் வினோதமான முறைகளைக் கையாண்டு நம்மை வியப்புறச் செய்கின்றனர்.

நகம் வளர்க்கும் கலை அங்கு மிக வேகமாகப் பரவி வருகின்றது.

பெண்கள் பல வண்ணங்களில் நகங்களை அலங்காரப் படுத்துவதோடு நில்லாமல், வைரம்போல் மின்னும் கற்களையும் நகங்களில் பதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மேலும் பல வண்ணங்களில் அலுமினியத் தூள்களையும் நக அலங்காரத்துக்கு உபயோகிக்கின்றனர்.

இப்போது 14 காரட் தங்கத்தால் ஆன தங்கத் தகட்டை நகங்களின் மீது போர்த்தி, உடையாமல் சிதையாமல் இருக்குமாறு பாதுகாத்துக் கொள்கின்றனர்.

இவர்கள் பல வண்ணங்கள் பூசப்பட்ட தங்களது நகங்களின் மீது, பிரியமுள்ள பல உருவங்களை வரைய ஆரம்பித்து விட்டார்கள்.

தற்போது செயற்கை நகங்கள் விற்பனைக்கு வந்து விட்டன. ★

# குபேரனின் வரலாறு

☐ கர்ணனுக்கு மிஞ்சிய கொடையாளி இல்லை. குபேரனுக்கு மிஞ்சிய பணக்காரன் இல்லை என்ற பழமொழி ஏற்படும் அளவுக்கு நமக்குக் குபேரனைப் பற்றி இலக்கிய அறிவு உண்டு.

ஆனால் சிற்பரூபமாக அவன் உருவம் என்ன? ஊர்தி எது? மனைவி யார்? எல்லாமே சந்தேகம்தான்!

அம்சுபேதாகமம், சுப்ரபேதாகமம், சில்பரத்னம், ரூபமந்தனம் போன்ற சிற்ப நூல்கள் இவனைப் பற்றி வர்ணிக்கின்றன.

சிவனின் தோழன், நரவாகனன் கதாயுதம் ஏந்தியவன், பானை வயிறு படைத்தவன், எட்டு செல்வங்களுக்குத் தலைவன் அஷ்டதிக்கு பாலனாகிய வடதிசைத் தலைவன், அளகாபுரி வாசி, சங்க-பதுக நிதிகளைக் கையிலேந்தியவன் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறான்.

குள்ளமானவன் குட்சி-குபேரன் ஆனான். நித்தி, பத்ரை என்பவர் மனைவிகளாகக் கருதப்படுகிறார்கள்.

பௌத்தசமயம் குபேரனை புத்தரின் உதவியாளனாய்க் கருதுகிறது. ஹரீதி மனைவி. பர்கூத் தூணில் யட்ச குபேரனின் சிற்பம் உள்ளது

சமணத்தில் 19 ஆவது தீர்த்தங்கரரின் உதவியாளனாய்க் கொள்ளப்படுகிறான் இவன்.

காந்தாரம், ஓரிஸா, வடமதுரை, கஜுராகோ ஆலயங்களில் குபேர பிம்பங்கள் உள்ளன.

கௌடல்ய அர்த்த சாஸ்திரம் குபேரன் சிலையை கோட்டைகளுக்குள் நிறுவ வேண்டும் என விதிக்கின்றது. குபேரன் அளகாபுரி வாசி.

இமாலயச் சிகரங்களில் உற்பத்தியாகிறதே கங்கை, அதற்கு பிறப்பிடத்தில் கங்கை என்ற பெயர் கிடையாது.

அளகருந்தாவும் வாகீரதியும் சங்கமித்த பிறகுதான் கங்கை ஆகிறது. ★

# விவேகானந்தரின் சமயோசிதம்!

☐ விவேகானந்தர் அதிகமாகப் பிரபல்யம் அடையாத காலம் அது. ஒரு சமயம் தென்னிந்தியாவில் ரயிலில்



விவேகானந்தர்

பயணம் செய்துகொண்டிருந்தார். அதே பெட்டியில் இருந்த சில வெள்ளைக்காரச் சிப்பாய்கள் சந்நியாசிகளைப்பற்றி நிந்தையாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

சேலம் ரயில் நிலையத்தில் அவர் நிலைய அதிகாரியுடன் ஆங்கிலத்தில் பேசுவதைக் கண்ட சிப்பாய்கள், 'உமக்குத்தான் ஆங்கிலம் தெரிந்திருக்கிறதே, எங்கள் பேச்சை மறுத்து ஏன் எதுவும் சொல்லவில்லை. என்று கேட்டனர்.

'முட்டாள்களைச் சந்திப்பது எனக்கு இது முதல் தடவை அல்ல.' என்று பதிலளித்தார் விவேகானந்தர்.

- தொகுப்பு க. கனகராசா

## குட்டி நதி

☐ ஒரேகான் என்ற இடத்தில் 'டி' என்று ஒரு நதி உள்ளது. என்ன விசேஷம் இதில்? 200 கஜ நீளம் மட்டுமே உள்ள ஒரு குட்டி நதி இது! ★

# 'நான்' போனால்...

☐ இரு தபசிகள் இடையே ஒரு வாக்குவாதம்.

'நான்தான் முதலில் சொர்க்கம் போவேன் என்றார்' ஒருவர்.

'இல்லை நான்தான் அங்கே முதலில் செல்வேன்' என்றார் மற்றவர்.

இச்சமயம் அவர்களைக் கடந்து போய்க்கொண்டிருந்த ஒரு இளம்பெண்-

'நான் போனால்தான் அங்கே போகமுடியும்' என்று சொல்லிக்கொண்டே நடந்தாள்.

இதைக்கேட்டு திகைத்த அந்த தபசிகள் அப்பெண்ணைத் தொடர்ந்து சென்று-

'என்ன சொன்னாய்? நீ போனால்தான் சொர்க்கத்திற்குப் போகமுடியுமா?' என்று ஆத்திரமாகக் கேட்டார்கள்.

அதற்கு அந்தப் பெண்ணோ- 'நான்' என்பது என்னைக் குறிப்பிடுவதில்லை! 'நான்' 'நான்' என்று நீங்கள் பேசுகிறீர்களே அந்த 'நான்' போனால்தான் சொர்க்கத்தை எட்டமுடியும் என்று கூறினேன்' என விளக்கினாள். ★

# அரிச்சந்திரன் சொன்ன பொய்!

☐ ஹரிச்சந்திரனை எப்படியாவது பொய்பேச வைக்கவேண்டும் என்று எண்ணிய விசுவாமித்திரர் அவனிடம், 'நீ எப்படியாவது ஒரேயொரு பொய்யை மட்டும் சொல்லிவிடு; நீ இழந்தவைகள் அனைத்தும் பெற்று விடுவாய்' என்றார்.

அதைக்கேட்ட ஹரிச்சந்திரன், 'முக்காலமும் உணர்ந்த முனிவரே! தயாநிதியே! என்னைப் பொய் மட்டும் சொல்லச் செய்யாதீர்கள்' என்றான்.

பிறகு விசுவாமித்திரர் சென்றுவிட்டார். மாலையில் திரும்பிய அவர் தன் சீடனிடம், 'நான் போனபிறகு ஹரிச்சந்திரன் பொய் சொன்னானா?' என்று கேட்டார்.

சீடன் 'நீங்கள் போனபிறகு என்ன? அதுதான் நீங்கள் இருக்கும்போதே ஒரு பொய் சொல்லிவிட்டானே! என்றான்.

'அப்படியா! என்ன பொய் சொன்னான்?' என்று மகிழ்ச்சியுடன் கேட்டார் அவர்.

அதற்கு அந்தச் சீடன் சொன்னான்,

'உங்களைப்போய் 'தயாநிதி' என்று அழைத்தானே அதைவிடப்பெரிதாக ஒரு பொய் சொல்லவேண்டுமா?'

# பிரிட்டன் வெளியிட்ட


# நகைச்சுவை முத்திரை!

☐ உலகிலேயே முதன்முதலாக அஞ்சல் தலை வெளியிட்ட நாடு இங்கிலாந்து.

அந்தப் பெருமைக்காக அந்நாடு வெளியிடும் முத்திரைகளில் நாட்டின் பெயரை அச்சிடமாட்டார்கள். முதல் முத்திரை வெளியிட்டுப் புகழ்பெற்ற இங்கிலாந்து, அண்மையில் நகைச்சுவை உணர்ச்சியுடன் அந்நாட்டில் சிரிப்பு உண்டாக்கும் நபர்களை, கற்பனைப் பாத்திரங்களைச் சிறப்பிக்க நகைச்சுவை முத்திரை தொகுதியை வெளியிட்டுள்ளது.

அந்நாட்டில் புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட் பஞ்ச்.

சிரிப்பு மன்னன் வோரெல் புன்னகை அரசி மோனலிசா, கோமாளி, நகைக்கும் சாவலர், நகைச்சுவைக் கதாநாயகன் டெனிஸ் சந்திரனில் மனிதன், சீஸர் பூனை, கரடி ஆகியோர் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இருபது சென்ட் மதிப்புள்ள ஒவ்வொரு முத்திரையிலும் பிரிட்டனின் ராணி உருவம் அச்சிட்டுள்ளனர். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலின் நிறம்

சூரிய ஒளியில் பார்த்தால் பாலும் தயிரும் வெண்ணிறமாகவே காணப்படுகிறது. ஆனால் பாலைச் சிவப்பு வெளிச்சத்தில் பார்த்தாலோ, அது சிவப்பாகத் தெரியும். பச்சை அல்லது நீல ஒளியில் பால் முறையே பச்சையாகவும் நீலமாகவும் காணப்படும். இது ஏன் என்று தெரியுமா...?

வெண்ணிறமாகக் காட்சி தரும் சூரிய ஒளி உண்மையில் ஏழு வண்ணங்களின் கலவை என்பதை நாம் அறிவோம்.

அவை ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு இந்த நிறங்களை ஒரு பட்டகையின் உதவிகொண்டு பிரிக்கலாம்.

ஒரு பொருள் எந்த நிறத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறதோ, அந்த நிறத்தைக் கொண்டதாக நம் கண்ணுக்குப் புலனாகிறது.

பால், தயிர் இவற்றின் மூலக்கூற்று அமைப்பு சூரிய ஒளியின் எந்த நிறத்தையும் தனியாகக் காண்பிக்காமல் அனைத்து நிறங்களையும் ஒருங்கே பிரதிபலிக்கச் செய்கிறது.

அதனால் தான் பாலும் தயிரும் வெண்ணிறமாகக் காணப்படுகிறது. பாலையும் தயிரையும் செந்நிற ஒளியில் பார்த்தால், சிவப்பாகத் தெரியும். ஏனெனில் அது சிவப்பு நிறத்தை எதிரொளிக்கின்றன. இந்த உண்மை எல்லாம் பொருளுக்கும் பொருந்தும்.

எப்பொருள் எந்த நிறத்தை எதிரொளிக்கச் செய்கிறதோ அப்பொருள் அந்தநிறத்தைக் கொண்டதாக நம் கண்ணுக்குத் தெரிகிறது. ★

## உடலைப் பேணுவோம்!

ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
உயரம் பாய்ந்து பழகுவோம்
அஞ்சல் தடைகள் தாண்டுவோம்
அழகாய் உடலைப் பேணுவோம்.

நீந்தி மீன்போல் துள்ளுவோம்
நீண்ட தூரம் ஓடுவோம்
பந்து விளையாடு வோம்
பாங்காய் உடலைப் பேணுவோம்.

பாரம் தூக்கப் பயிலுவோம்
பலமும் நலமும் பெற்றிடுவோம்
நோயும் பிணியும் அணுகாது
நாளும் உடலைப் பேணுவோம்.

தேகப் பயிற்சி செய்குவோம்
தேகம் உறுதி கொள்ளுவோம்
தேசம் செழிக்கச் சிறுவர் நாம்
திடமாய் உடலைப் பேணுவோம்.

– நெடுந்திவு லக்ஸ்மன் –

## அறிவுரை

★ நமது உள்ளம் நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல் அமைதியுடனிருக்க வேண்டும்.

– புத்தர்

# விஞ்ஞானி ஐன்ஸ்டீன்

## வாழ்விலே ஒரு நாள்...

விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டு இருந்தார். அவருக்குப் பசி வந்தது. ஏதாவது சாப்பிட வேண்டும் போல இருந்தது.

எனவே ரயில்வே சிற்றுண்டிக் கடையை நோக்கிச் சென்றார். அங்கு என்ன இருக்கிறது என்று அங்குள்ள வேலையாளிடம் வினவினார்.

வேலையாள் கடையிலுள்ள தின்பண்டங்களின் பட்டியலை எடுத்து ஐன்ஸ்டீனிடம் நீட்டினான். அதைப் படிப்பதற்காகத் தன் 'ஷேர்ட் பொக்கட்' டில் கண்ணாடியைத் தேடினார்.

ஆனால் கண்ணாடியை அங்கு காணவில்லை. எங்கோ தவறவிட்டு விட்டார். கண்ணாடி இல்லாது படிக்க முடியாத ஐன்ஸ்டீன் பட்டியலை வேலையாளிடம் கொடுத்து,

'இதை நீயே படித்துச் சொல்லு'—

என்று கேட்டார்.

ஐன்ஸ்டீன் கல்வியறிவு இல்லாதவர் என எண்ணிக் கொண்ட அந்த வேலையாள் அவரிடம்,

'நானும் உங்களைப் போல படிப்பில்லாதவன் தான்' என்று கூறினான்.

இதைக் கேட்ட ஐன்ஸ்டீன் முகத்தில் புன்னகை அரும்ப 'அப்படியா...' எனக் கேட்டுக் கொண்டார். ★

சிறுவர் சுடர்

## பன்னாட்டுப் பொன்மொழிகள்

☐ அன்பின் அடையாளமாகப் பரிசுகள் வழங்கி மகிழ்ந்தால் அவை தெய்வங்களைக்கூட நம் பக்கம் நேசத்துடன் பார்க்கச் சொல்லும்.

– கிரீஸ்

● நினைவில் இருக்கட்டும்! எந்தப் புத்தகத்தைத் திறந்து பார்த்தாலும் அதில் உங்களுக்கு நிச்சயம் லாபம் கிடைக்கும்.

– சீனா

## அன்றாட வாழ்வில்....

வீட்டுப் பாவனைக்காக நாம் வாங்கும் முட்டைகளை காய்கறிக்கூடை, ரின்போன்ற கண்டகண்ட இடங்களிலும் வைத்திருந்து சாப்பாட்டுக்கு உபயோகிக்கின்றோம் இது தவறு.

காரணம், முட்டையின் ஓட்டிலுள்ள துவாரத்தின் வழியாக காற்றுப்போய் முட்டை பாக்டீரியாவின் தாக்குதலுக்குட்பட்டு கெட்டுப்போகலாம்.

எனவே முட்டையைப் பாதுகாக்க முட்டையை வாங்கியவுடன் அதன்மேல் வாஸலீன் பூசி, ஒரு முட்டையுடன் மற்றொரு முட்டை படாதவாறு வைத்துவிட்டால் முட்டை கெடாமல் இருக்கும்.

மற்றொருவழி; ஒரு பெட்டியில் நன்கு காய்ந்த ஈரமில்லாத உப்பைப்போட்டு சமதளமாகப் பரப்பி அதன்மேல் வாஸலீன் பூசி, ஒரு முட்டையுடன் மற்றொரு முட்டை படாதவாறு வைத்துவிட்டால் முட்டை கெடாமல் இருக்கும். ★

## இந்துவின் டைரி

மாலை 3 மணி. பல மாதங்களின் பின் துளசி வீட்டுக் 'கேற்,றைத் திறக்கிறேன். ஒரு கணம்—

'இது துளசி வீடா... அல்லது ஏதாவது 'சில்றன் பாக்' கில் நுழைந்து விட்டேனா?'

ஒரு பக்கம் இரண்டு குழந்தைகள் 'ரீசோ அப் அன் டவுண்... சாந்தி கோயிங் குலண்டன் டவுன்' உற்சாகமாகப் பாடி ஆடுகிறார்கள்.

மறுபக்கம் நான்கு குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்து பந்து அடித்து விளையாடுகிறார்கள்.

இன்னும் சில குழந்தைகள் ஓர் ஓரமாக அமர்ந்திருந்து கிளேயை உருட்டி உருவங்கள் செய்வதில் ஈடுபடுகிறார்கள்.

ரோஜா மலர்களுக்கு கை, கால்கள் முளைத்துவிட்டதோ என்று சொல்லும் வண்ணம் குழந்தைகளின் தோற்றம் மனதைச் சுண்டி இழுத்தது.

எல்லாம் ஒரு வயதுக்கும் மூன்று வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள். கண் கொட்டாமல் அவர்களையே ரசித்தபடி நின்றேன்.

'யாரு இந்துவா... என்ன அங்கேயே நிற்கிறாய் வா... உள்ளே'

—இப்படித் துளசியே மிகவும் உற்சாகமாக வரவேற்கிறாள்.

சுய நினைவுக்கு வந்தநான் 'என்ன... முன்பு ஒரு குழந்தைக்காக கோயில் கோயிலாகத் தவம் கிடந்தாய்... இப்ப வீடெல்லாம் ஒரே குழந்தைகளாக இருக்கிறதே......!

ஒன்றும் புரியாமல் கேட்கிறேன். 'உண்மைதான் இந்து எல்லோருக்கும் எல்லாம் கிடைத்து விடுவதில்லை. நானும் குழந்தைகள் இல்லையே என்று மனம் வெதும்பி வீட்டுக்குள் அடைந்து கிடந்த நாட்கள் எத்தனையோ,

ஒரு நாள் இரண்டு வீடு தள்ளி வாழும் மல்லிகா, குழந்தையைப் பராமரிக்க ஒருவரும் இல்லாதபடியால் தான் வேலையை விடப் போவதாகவும், அப்படி வேலையை விட்டாலும் கணவனுடைய சம்பாத்தியம் குடும்பத்தைக் காப்பதற்குப் போதாது என்று சொல்லிக் கவலைப்பட்டாள்.

அவளுக்கு உதவ வேண்டும் என்ற நினைவில்—

மல்லிகா...... உன் குழந்தையை நான் பார்க்கிறேன். நீ வேலைக்குப் போய் வா... என்று கூறினேன்,

'அதன்படி மல்லிகா, காலையில் குழந்தையைக் கொண்டு வந்து விட்டு விட்டு மாலையில் வந்து கூட்டிக் கொண்டு போவாள்.

—'இது என் வாழ்வில் ஒரு பிடிப்பையும், மாற்றத்தையும் ஏற்படுத்துவதை உணர்ந்தேன். இதையே ஒரு தொழிலாக உருவாக்கினால் என்ன? என்ற என் மன எழுச்சியே இந்தக் 'குழந்தைகள் இல்லம்' உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்தது.

இதன் மூலம் குழந்தைகளை விட்டு விட்டு வேலைக்குப் போக முடியவில்லையே என தவிக்கும் தாய்மார்களுக்கு நான் உதவ முடிகிறதே என்ற ஒரு மனத்திருப்தி எனக்கு.

'அடுத்ததாக ஒரு குழந்தையைப் பராமரிக்க இவ்வளவு என்று வீட்டில் இருந்தபடியே கைநிறையச் சம்பாதிக்க முடிகிறது.

'எல்லாவற்றுக்கும் மேலாக குழந்தைகளுடன் நேரத்தைக் கழிப்பதால் குழந்தை இல்லையே என்ற குறை கூட எனக்கு இப்போது இல்லை. மாறாக மனதில் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையுமே நிறைந்துள்ளது'—என்று கூறி முடித்தாள் துளசி.

'உண்மைதான். இப்படியான குழந்தைகள் பராமரிக்கும் நிலையங்கள் மேல்நாடுகளில் தான் சந்திக்கு சந்தி இருக்கின்றன. இங்கும் அப்படி நிலையங்கள் உருவாகிறது என்றால் வேலைக்குப் போகும் பெண்கள் அதிகரித்து விட்டார்கள். அதன் மூலம் வீட்டில் இருக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கிறது' என்று தான் சொல்ல வேண்டும் இல்லையா?

நாம் பேசிக்கொண்டு இருக்கும்போதே இரண்டு பெண்கள் தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காக வருகிறார்கள். ★

நங்கை

# ஆண்டு - 5
## புலமைப் பரிசில் பரீட்சை
### மாதிரி வினாத்தாள்
# கணிதம்


பாடம் பயில்வோம்

தொகுப்பு:
- திரு. சி. வல்லிபுரம் -

### பகுதி (I)


1-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள்வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ளவற்றில் மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. உங்களது பாடசாலைத்தின வரவு இடாப்பு ஒன்றின் நீளம் அண்ணளவாகச் சென்ரிமீற்றரில்?
   1. 27 c.m  2. 37 c.m  3. 17 c.m  4. 47 c.m
2. ஐம்பது சிறிது அறுபதிலும் என்பதைக் குறியீட்டுடன் எழுதினால்?
   1. 50 < 60  2. 50 > 60  3. 60 > 50  60 > 50
3. $\frac{2}{3} + \frac{2}{3}$ ஐச் சுருக்கினால் பெறப்படும் விடையின் பெறுமானம்.
   (1) $\frac{4}{3}$  (2) $\frac{3}{4}$  (3) $\frac{4}{9}$  (4) $\frac{3}{3}$
4. நான்கு சமபக்க முக்கோணிகளால் ஆக்கக்கூடிய திண்மம்?
   1. கூம்பகம்  2. கூம்பு  3. நான்முகி  4. சதுரமுகி
5. ஒரு சாதாரண தேநீர்க்கோப்பை கொள்ளும் மிகக்கூடிய திரவத்தின் அளவு அண்ணளவாக மில்லிமீற்றரில்?
   1. 400 m.l  2. 200 m.l  3. 300 m.l  4. 100 m.l
6. கீழேயுள்ள உருக்களில் A இலிருந்து B தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள விதத்தைக் காட்டும் உரு.




உரு 1  உரு 2  உரு 3  உரு 4

7. எவரெடி ரோச் பற்றி ஒன்றின் நிறை அண்ணளவாக கிட்டிய கிராமில்?
   1. 100  2. 200  3. 300  4. 50
8. இவ்வுருவில் நிழலிடப்பட்டபகுதி, முழுவதின் என்னபங்கு?



   (1) $\frac{1}{6}$  (2) $\frac{1}{3}$  (3) $\frac{1}{24}$  (4) $\frac{1}{12}$

9. சுமாராக 5 செக்கனில் நிகழக்கூடிய ஒரு செயல் பின்வருவனவற்றுள் எது?
   1. 100 மீற்றர் ஓட்டம்  2. ஒரு சாதாரண மைதானத்தைச் சுற்றி ஓடல்
   3. உயரம் பாய்தல்  4. அஞ்சலோட்டம்
10. வடக்குத் திசைக்கும் மேற்குத் திசைக்கும் இடையே சரிநடுவில் அமைந்துள்ள திசைக்கு எதிர்திசை?
   1. வடமேற்கு  2. தென்கிழக்கு  3. தென்கிழக்கு  4. வடகிழக்கு

### பகுதி (II)

இலக்கம் 11 முதல் 25 வரை உள்ள வினாக்களுக்கான விடைகளை அவற்றுக்குரிய வெற்றிடங்களில் எழுதுங்கள்.

11.
```
   4634
    659
 + 5757
 ------
```
12.
```
   6050
 -  865
 ------
```
13.
```
   6305
 X    9
 ------
```

14. 9008 ÷ 8 = ...............
15. 603 — 26 + 108 = ...............

(16) $3\frac{1}{4} + 2\frac{3}{5}$  (17) $3\frac{1}{5} - \frac{2}{3}$  (18) $1\frac{1}{3} - 2\frac{1}{2} + 4\frac{3}{4}$

19. வெற்றுகூட்டினுள் இடவேண்டிய பொருத்தமான எண்ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்?
   $32 \div 4 = 4 \times \square$. ...............
20. 504.300 என்பதைச் சொற்களில் எழுதுங்கள்?
   ...............
21. எண் ஒன்றின் 0.5 பங்கு 100 ஆகும். அவ் எண்ணின் 5/1 பங்கு எத்தனை?
   ...............
22. 2.5 லீற்றர் மையை ஆகக்கூடியது எத்தனை 100 மில்லி லீற்றர் குப்பிகளில் நிரப்பலாம்?
   ...............
23. ஐந்நூற்று ஓராயிரத்து ஒன்று என்பதை இலக்கங்களில் எழுதுங்கள்?
   ...............
24. ஒரு மீற்றர் றிபன் ரூபா 1.20 படி 50 சென்ரி மீற்றர் றிபனின் விலை யாது?
   ...............
25. புதன்கிழமை 9:30 மணித்தியாலத்திலிருந்து அதேதினம் 16:30 மணித்தியாலம் வரையுள்ள காலம் எவ்வளவு?

### பகுதி (III)

இலக்கம் 26 முதல் 35 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை அவ்வினாவுக்குரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்?

26. 385 மணித்தியாலங்களை வாரம், நாள், மணியில் எழுதுங்கள்?
   ............... ...............
27. 20503.06 மீற்றர்களை கிலோ மீற்றர், மீற்றர், சென்ரிமீற்றர்களில் எழுதுக?
   ...............
28. 0.05 k.g எத்தனை கிராம்? ...............
29. ஒரு லீற்றர் ரூபாய் 60% 50 மில்லி லீற்றர் பெயின்ரின் விலை யாது? ...............
30. ஒரு கிலோகிராம் ரூபாய் 50 வீதம் 150 கிராம் வெங்காயத்தின் விலையாது?
   ...............
31. 00.25 மணித்தியால நேரத்தை முற்பகல் / பிற்பகல் நேரத்தில் எழுதுக?
   (முற்பகலா, பிற்பகலா என்பதைக் குறிக்குக) ...............
   2
32. 9 cm பரப்பளவைக்கொண்ட சதுரம் ஒன்றின் சுற்றளவைக் காண்க? ...............
33. செவ்வகம் ஒன்றின் நீளம் அதன் அகலத்திலும் இருமடங்காகும். நீளம் 30 cm ஆயின், அதன் பரப்பளவைக் காண்க? ...............
34. இக்கோலத்தில் × இன் பெறுமானத்தைக் காண்க?

| 25 | | 36 | | X | |
|---|---|---|---|---|---|
| 4 | 1 | 1 | 5 | 2 | 5 |

35. இக்கோலத்தில் வெற்றிக்கூட்டினுள் வரவேண்டிய பொருத்தமான எண் யாது?

0 → 1 → 4 → 9 → 16 → ☐ ...............

### (பகுதி iv)

இலக்கம் 36 முதல் 40 வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றினதும் விடைகளை அவற்றுக்குரிய வெற்றிடங்களில் எழுதுங்கள்.

36. பால் விநியோகம் செய்பவன் ஒருவன் குறித்த ஒரு தினத்தில் நான்கு பால் நிலையங்களிலிருந்து முறையே 110 லீற்றர், 55.5 லீற்றர், 40.5 லீற்றர், 60.45 லீற்றர் பாலை வாங்கினான். அவன் இவற்றை 500 மில்லி லீற்றர் போத்தல்களில் அடைத்து விநியோகித்தானாயின் அவனுக்கு பால் முழுவதையும் அடைப்பதற்கு எத்தனை போத்தல்கள் தேவைப்பட்டன?
37. சிறிய பேருந்து ஒன்றில் 36 ஆசனங்கள் உள்ளன. அதன் இரு மடங்கிலும் 7 குறைவான ஆசனங்கள் பேருந்து ஒன்றில் இருக்கின்றன. பேருந்திலுள்ள ஆசனங்களை விட சிறிய பேருந்தில் எத்தனை ஆசனங்கள் குறைவாக உள்ளன?
38. ஒரு பாடசாலையின் கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்துகொள்ள இருப்பவர்களில் ஆசிரியர்கள், பெற்றோர்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும் 12 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை ஆசிரியர்களின் எண்ணக்கையின் 9 மடங்காகும். 12 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை பெற்றோரின் எண்ணிக்கையின் 12 மடங்காகும். சுற்றுலாவிற் கலந்துகொள்ளும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 3 எனின் இச்சுற்றுலாவில் செல்லவிருப்போரின் முழு எண்ணிக்கை யாது?
39. கார்த்திகா 8 கைக்குட்டைகள் கொண்ட பெட்டி ஒன்றை வாங்கினாள் அவள் அதற்காக ரூபாய் 50ஐக் கொடுத்தபோது மீதிப் பணமாக 5 ரூபாய் நாணயங்கள் இரண்டும், 2 ரூபாய் நாணயங்கள் மூன்றும், ஒரு ரூபாய் நாணயம் ஒன்றும், 25 சத நாணயங்கள் நான்கும் கிடைத்தனவெனின் கைக்குட்டை ஒன்றின் விலை எவ்வளவு?
40. கண்ணன் அவன் அண்ணன் மன்னனைவிட 10 வயது இளையவன். இன்று அவர்களது பிறந்ததினமாகும். கண்ணனுக்கு இப்போது 6 வயது. கடந்த ஆண்டு பிறந்ததினத்தின்போது மன்னனின் வயது கண்ணனின் வயதின் எத்தனை மடங்காகும்?

# ஆண்டு - 5
## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரிவினாத்தாள்
# தமிழ்
### சென்றவார வினாக்களுக்கான சரியான விடைகள்:

1. கடும்புயல் வீச மரங்கள் முறிந்து விழுந்தன.
2. சுதா நன்றாகப் படித்ததால் புலமைப்பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்தாள்.
3. நான் கோயிலுக்குப் புறப்பட எனது தங்கையும் என்னுடன் வந்தாள்.
4. மாணவர்கள் வகுப்பறைக்கு வந்ததும் பாடசாலை மணி அடித்தது.
5. பாம்பாட்டி மகுடியை ஊத பாம்பு படமெடுத்து ஆடியது.
6. நேசம் — வன்பு  7. நகை — அழு  8. ஆதி — அந்தம்
9. சமீபம் — சேய்மை  10. மேன்மை — தாழ்வு
11. வானளாவ  12. கிளைகள்  13. குளிர்நிழலைப்  14 மெல்லிய
15. பசுமையான  16. ஆயிரத்திலொரு  17. பருமனோ  18. செழித்து
19. வெள்ளம்  20. பழமைபோல்
21. நிகழ்ச்சி நிரல்  22. ஐந்துதரம்  23. பிரதம விருந்தினர்  24. பிற்பகல்
25. அஞ்சலோட்டம்  26. கலவன் பாடசாலை  27. நூறு மீற்றர் ஓட்டம், இருநூறுமீற்றர் ஓட்டம், தடை தாண்டி ஓட்டம், அஞ்சல் ஓட்டம்
28. ஆயிரத்துநூறு மீற்றர் ஓட்டம்  29. அதிபர் நன்றி உரை  30. அதிசயம்
31. இன்னோர் உயிரைக் கொல்லுதல்
32. தான் தெரியாமல் செய்த குற்றத்திற்காக அந்த விகாரையை பதினையாயிரம் பொற்காசு செலவு செய்து திருத்திக்கட்டுவித்ததனால் புத்தசமயத்தவர் அவனைப் பெரிதும் வாழ்த்தினர்.
33. அன்பினாலும், நீதியினாலும் மன்னன் மக்களுடைய அன்மையும் மதிப்பையும் பெற்றான்
34. (அ) தவறு  (ஆ) தூற்றுதல்
35. (அ) பிழை  (ஆ) பிழை  (இ) சரி  (ஈ) பிழை
36. பிறரின் தயவில் வாழ்வதை  37. இயற்கை அளிக்கும் செல்வங்கள்
38. (அ) ... (ஆ) ...
39. உழைத்து அருந்தினால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தூங்க வைக்கும்' படத்திற்கு 'அலாரம் கடிகாரம்' பரிசு!

□ சில படங்கள் பார்ப்பவர்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கும்; கவலைகளைக் மறக்கச்செய்யும்.

இன்னும் சில படங்கள் பார்ப்பவர்களுக்கு நித்திரையைக் கொடுக்கும்.

அப்படி நித்திரையை ஏற்படுத்தும் படங்கள் தமிழில் நிறைய வருகின்றன.

அதனால் அவற்றுக்கு பரிசுகள், விருதுகள் வழங்கப்படுவதில்லை.

அண்மையில் பிரான்ஸில் கேன்ஸ் என்ற இடத்தில் உலகத் திரைப்பட விழா நடந்தது.

சிறந்த படங்கள் அங்கு திரையிடப்பட்டன. சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகையர் என்று எல்லாம் தெரிவுசெய்யப்பட்டனர்.

இறுதியில் 'தூக்கத்தைத் தூண்டும் படமும் தெரிவுசெய்யப்பட்டு அதற்கான விருதும் வழங்கப்பட்டது.

'மரணக் கடி' என்ற ஜப்பானியப் படம் அந்த விருதைச் தட்டிச்சென்றது.

திருமண முறிவை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட இப்படத்தின் காட்சிகள் மிக மெதுவாக நகர்ந்து செல்வதாக அமைக்கப்பட்டிருந்தது.

வெள்ளியில் செய்யப்பட்ட 'அலாரம் கடிகாரம்' (Alarm Clock) ஒன்று இப்படத்திற்கு பரிசாக அளிக்கப்பட்டது.

தூக்கத்தைக் கலைப்பது அலாரம் கடிகாரம்தானே!

★

# சினிமாவின் 'கதாநாயகன்' நல்ல திரைக்கதையே!

தமிழ்த் திரைப்படத்துறையில் புதுமை காண வேண்டும் என்ற நோக்கில் படம் தயாரித்து டைரக்ட் செய்து வருபவர் இளைஞர் ரஞ்சன் (லிவிங்ஸ்டன்).

படத்துக்குக் கதையே 'நாயகன்' என்று கூறுகிறார் இவர்.

திரைப்படத்துறை பற்றிய அவரின் கருத்துக்கள் இங்கு தரப்படுகிறது.

படங்களில் புதைந்துள்ள நல்ல கதையம்சங்களே வெற்றிக்குக் காரணம்.

அதைவிட அந்தக் கதையினை கோவையாக நேர்த்தியுடன் – சுவை குறையாமல் எடுத்துச் சொல்லும் முறைதான் காரணம்!

ஆக, ஒரு படத்தின் ஜீவ ஓட்டமே கதைதான்.

கதையில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு அந்தப் படம் வெற்றிப் படமாக அமைகிறது.

கதை மட்டும் சரியாக நல்ல கருப்பொருளைக் கொண்டு இருந்தால் யார் வேண்டுமானாலும் கதாநாயகனாக நடிக்கலாம்.

படத்திற்குக் கதாபாத்திரத்திற்குரிய வயதுதான் தேவையே தவிர, கதாநாயகனுக்கு வயது தேவையில்லை.

ஒரு நடிகனுக்கு நல்ல கதாபாத்திரங்கள் கிடைப்பதே பெரிய அதிர்ஷ்டமான விஷயம்.

முன்னுக்கு வந்துவிட்ட எந்தக் கலைஞனுக்கும் அதிர்ஷ்டம் மட்டுமே காரணமாக இருந்துவிட முடியாது. திறமையும் காரணம். திறமையில்லாத எந்தக் கலைஞனையும், மக்கள் நிரந்தரமாக ஏற்றுக்கொண்டதில்லை. ஐம்பது சதவீதம் அதிர்ஷ்டமும், ஐம்பது சதவீதம் திறமையும் சேரும்போது தான் அவர்கள் ரசிகர்கள் மத்தியில் நீடித்து நிலைத்து நின்று பிரகாசிக்க முடிகிறது!

நமது கலாசாரத்தின் அடித்தளம் கிராமங்களே. நம்மில் சிலர் கிராமங்களில் இருந்து இன்று 'அந்நிய'ப்பட்டு இருக்கலாம்.

ஆனால் நமது மூதாதையர்களின் பூர்வீகம் கிராமங்கள் தானே. நமது பண்புகளும் – பண்பாடுகளின் பரிணாம வளர்ச்சியும் பிரசவமானது கிராமங்களில் தானே.

ஒரு நடிகன் தனக்கு ஏற்படும் எவ்வளவு பெரிய இக்கட்டான சூழ்நிலையிலும் தான் காணும் நல்லவைகளையும், நகைச்சுவைகளையும் ரசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

அப்போதுதான் அவன் தனது உள்ளத்தில் புதிய புதிய உத்திகளையும் – உணர்வுகளையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

★

# அமெரிக்காவில் டெலிவிஷன்; ஒரு கண்ணோட்டம்

அமெரிக்காவில் 1000க்கும் மேற்பட்ட டெலிவிஷன் நிலையங்கள் உள்ளன.

ஒவ்வொரு நகரிலும் டி. வியில் பல சனல்கள் உண்டு.

நியூயார்க் நகரில் 25க்கும் அதிகமான சனல்கள் உள்ளன.

சில நகரங்களில் கல்வி ஒளிபரப்புக்கென தனி சனல் உள்ளது.

எதைப்பார்ப்பது, எதைவிடுவது என்று முடிவுசெய்ய முடியாமல் திண்டாடுகிற அளவுக்கு டி.வியில் சுவாரசியமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன.

இவையல்லாமல் கேபிள் டி. வி செய்மதி டி. வி வேறு.

அமெரிக்க டெலிவிஷனில் வர்த்தக விளம்பரம் அதிகம். எனினும் அவை புதுப்புது சிந்தனையைத் தூண்டுபவை.

இந்த வர்த்தக விளம்பரங்களில் பொருள்களின் நேர்த்தி, மேன்மை, தரம், பலன் பற்றி அளவுக்கு மீறிச் சொல்வதில்லை.

அமெரிக்காவில் இது விஷயத்தில் அரசு விதித்துள்ள கடும் கட்டுப்பாடுகள் உள்ளன.

தெம்பு அளிக்கிற ஒரு பானத்தைப் பருகினால் சுவரைத் தகர்க்கிற அளவுக்கு அல்லது பயில்வானை உதைத்துத்தள்ளுகிற அளவுக்கு தெம்பு கிடைத்துவிடுவதுபோல மிகைப்படுத்தி விளம்பரம் செய்துவிட முடியாது.

வலி நிவாரணி, தெம்பளிக்கும் பானம், புஷ்டி தரும் ஆகாரம் போன்ற எந்தப் பொருளானாலும் சரி. அது உண்மையில் அளிக்கக்கூடிய பலனை மட்டுமே சொல்லவேண்டும். அதற்கு மேல் சொல்லக்கூடாது என கண்டிப்பான விதி உள்ளது.

அமெரிக்க டெலிவிஷனில் 'வாரம் ஒரு சினிமா' என்பது கிடையாது.

ஆர்லண்டோ நகரில் விடியவிடிய சினிமா டெலிவிஷனில் காட்டப்படுகிறது.

டி.வியில் காட்டப்படுகிற சினிமா பிடிக்கவில்லையென்றால், நீங்கள் விரும்புகிற சினிமாவைத் தேர்ந்தெடுத்தும் பார்க்கமுடியும். ஹோட்டல்களில் இதற்கு வசதி உண்டு.

டி. வி. பெட்டி மீது உள்ள அட்டையில் பல்வேறு சினிமாப்படங்களின் விவரம் இருக்கும்.

டி. வி. பெட்டிக்கு அருகே தனியே சிறிய பெட்டி உள்ளது. அதில் எண்கள் மட்டும் இருக்கும். குறிப்பிட்ட நம்பரை அழுத்தினால், குறிப்பிட்ட சினிமாவைப் பார்க்கலாம்.

இப்படி ஒரு சினிமாவைப் பார்த்தால், ஹோட்டலில் உங்கள் கணக்கில் 7.50 டாலர் ஏறிவிடும். சினிமா பட்டியல் அட்டையை அவ்வப்போது மாற்றிக்கொண்டிருப்பர்.

அமெரிக்க மக்களின் அன்றாட வாழ்க்கையில் டி.வி பெரும் விளைவை உண்டாக்கியுள்ளது.

குடும்பத்தினர் ஒன்றுகூடி அமர்ந்து கலகலப்பாகப் பேசுவது என்பது டி.வி காரணமாக மறைந்து விடுவதாகவும் புகார்கள் உள்ளன.

உலகெங்கும் டி. வியானது வெவ்வேறு அளவில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்திவருகிறது.

டி. வி. பெட்டிக்கு மேலைநாட்டவர் "Idiot Box" என்று ஒரு பெயர் வைத்துள்ளனர். எனினும் It has very intelligent uses என்றும் சொல்லப்படுகிறது.

★

வெள்ளித்திரையில்

"குழல் இனிது யாழ் இனிதென்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்

★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதிவிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | - | *7% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ஈ. கருணரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண.
A.I.B. (Lond.). பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் தாவீது அடிகளாரின் தமிழ்ப் பணியில் சொற்பிறப்பு ஒப்பியல் ஆராய்ச்சி ஒரு மைல்கல்

'கருவறை தொடக்கம் கல்லறைவரை கற்க' என்பதற்கு சான்றாகத் திகழ்ந்தவர் தாவீது அடிகள் என்றால் அது மிகையாகாது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தாம் தொடங்கிய சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் வேலை முற்றுப்பெற முன் மறைந்து விட்டார்.

'விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக் கருதி இருக்கின்றாயடா' என்று பொங்கினான் பாரதி! ஆம், அந்தத் துர்ப்பாக்கிய நிலையில்தான் ஒப்பியல் அகராதி இருந்தது.

சுவாமி ஞானப்பிரகாசரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரின் சீடரான கலாநிதி தாவீது அடிகள் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை உருவாக்கும் பணியைத் தொடர்ந்தார்.

ஒரு பூரண பல்கலைக்கழகம் ஆற்றவேண்டிய வேலை அது. தாவீது அடிகளார் முன்வந்து அப்பணியைச் சிரமேற் கொண்டார்.

பணவலிமை குன்றியிருந்தும் (நெப்போலியன் போன்று) மனவலிமை குன்றாமல் முக்கால் நூற்றாண்டு காலம் இப்பணிக்காக கடினமாக உழைத்தார்.

ஒப்பியல் அகராதியின் ஒன்பதாவது பகுதியைச் சிங்கள மொழியில் தாவீது அடிகள் எழுதத் திட்டமிட்டார். சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ்-சிங்கள அகராதியை இயற்றினால் தேசிய ஒருமைப்பாடு உருவாகும் என உணர்ந்து உழைத்த உத்தமர், 'தொல் திராவிடம்' அன்றேல் சீரிய சிறந்த (தாமீழ) மொழியை விளக்கிச் சாதனை நிலை நாட்டிய மாமேதை அவர்.

அதுமட்டுமல்லாது சிங்களம் தமிழின் தங்கை என்று ஆதாரபூர்வத்துடன் நிரூபித்துக்காட்டிய முதல் அறிஞர் தாவீது அடிகள்.

கி. மு. 100 ஆம் ஆண்டளவில் தோன்றிய கலித்தொகை குறுந்தொகை போன்ற நூல்களில் வரும் 'யாழ' 'யாழ்' என்ற சொற்கள் காதலன், காதலியை. தோழன், தோழியை அழைப்பதாக வருகின்றது என்றும் எனவே தமிழ் 'யாழ' 'யாழ்' என்ற சொற்களிலிருந்து தான் சிங்கள 'யாழுவர்' பிறந்தது என்றும் இங்ஙனம் 4000 பதங்கள் சிங்களத்திற்கும் தமிழுக்கும் பொதுவானவை என்பதை அறிஞரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஆதாரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

அது மட்டுமல்ல சென்னை அகராதியிலுள்ள பிழைகளைத் தக்க ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டிய தமிழ் அறிஞர் தாவீது அடிகளே. சொற்பிறப்பு ஒப்பியல் துறையில் இவர் ஒரு மைற்கல்.

**அறிவுக் களஞ்சியம்**

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்ற பாரதியின் கூற்றுக்கு அமைய தாவீது அடிகள் மேலைநாடுகளில் கல்விகற்றும் பல்வேறு நாடுகள் சென்றிருப்பினும், தான் பிறந்த மண்ணிலே இறுதி மூச்சு வரையும் பணி புரிந்த தியாகச் செம்மல். முப்பத்துமூன்று மொழிகளில் திறமான புலமை பெற்ற தாவீது அடிகள் மூலச்சொற்களையும் அவற்றுடன் இணைந்த சொற்களையும் மிக நுட்பமாக ஆராய்ந்து 'உலகில் ஆதியில் நிலவிய மொழி ஒன்றே; உலகில் வழங்கும் மொழிகள் எல்லாம் அதன் குடும்பமே' என்னும் உண்மையை விளக்கினார்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற ரீதியில் திருநூலில் (Holy Bible) ஆதியிலே ஒரு மொழிதான் இருந்ததென்றும் அது காலகதியில் பல்வேறாகப் பரிணமித்துப் பரந்து செறிந்ததென்றும் அறிகிறோம்.

அதன் அடிப்படையில் அந்த முதன் மொழி எது என்று ஆராயப் புகுந்து அரிய கண்டுபிடிப்புக்களைக் காலந்தோறும் பலமொழியில் அறிஞர்கள் உலகுக்களித்தனர். அவர்களிலே வண. ஹெரஸ், நல்லூர்ச்சுவாமி ஞானப்பிரகாச அடிகள் போன்றோர் வரிசையில் தாவீது அடிகளும் தமது விலைமதித்தற்குரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்.

தாவீது அடிகளின் மொழி ஆராய்ச்சியில் 'தமிழ் எளுவ' கூறியதைச் சிறிது நோக்கின் உண்மை விளங்கும் பின்வரும் பகுதியை உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் 'இலங்கை'யை 'லங்கா' எனவும், தமிழ் 'இளமையனை' 'ளமயா' எனவும் தமிழ் 'சீரிய, சீர்' என்பதை 'ஸிரி' [உ+ம்: 'ஸிரிஸேன்'] எனவுஞ் சற்று மாற்றி அதைப் புதுமொழி என்கின்றனர்.

**எம்பணி**

யாழ்நகரில் தென்கிழக்காசியாவிலே தலைசிறந்த பொதுசன நூலகம் உருவாகுவதற்கு வித்திட்ட சிலரில் பேரறிஞர் அருட்திரு T. M. F லோங் அடிகள். அவரின் உன்னத பணிக்கு 22. 05. 90 இல் அரசு முத்திரை வெளியிடு செய்து அவரைத் தேசியவீரர்களின் பட்டியலில் சேர்த்து கௌரவித்தது. (யாழ். நூலகம் தீக்கு இரையானதைச் சகிக்க முடியாத கலாநிதி தாவீது அடிகள் உயிர் துறந்தார்.) இரு பேரறிஞர்களின் ஆன்மா சாந்திபெற, யாழ். நூலகம் உயிரூட்டம் பெற அரசும், சிறப்பாக ஒவ்வொரு தமிழ் மகனும் பங்கெடுப்பது முக்கிய பணியாகும்.

யாழ். பொதுசன நூலகத்தில் ஒரு பகுதியில் தமிழ் ஆய்வு அகம் உருவாக்கப்பட்டு, அதற்குக் கலாநிதி தாவீது அடிகளின் பெயர் பொறிக்கப்பட்டு, இவரினால் ஆக்கப்பட்ட சகல சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி நூல்கள், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் நூல்கள், தமிழ் ஆய்வுக்குரிய நூல்கள் இடம்பெறல் அடிகளின் பணி தொடர வழி வகுக்கும்.

யாழ் நூலகத்தில் தாவீது அடிகளின் சிலை நிறுவப்பட்டு அதன் அடியில் 'முப்பத்து மூன்று மொழிகளின் மாமேதை கலாநிதி தாவீது அடிகள் யாழ். நூலகம் தீக்கிரையானதும் அக்கணமே உயிர்துறந்தார்' என பொறிக்கப்பட வேண்டும்.

காலமெல்லாம் மக்கள் நன்றிப் பெருக்குடன் தாவீது அடிகளை நினைவு கூர வழி வகுக்கும்.

யாழ். பல்கலைக்கழகம் தாவீது அடிகளின் பணியைக் கௌரவித்து சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி முற்றுப்பெற வழிவகுப்பது கடமை மட்டுமல்ல, தமிழ் அன்னைக்குச் செய்யும் பணியுமாகும்.

தாவீது அடிகளின் பணிகள் அளவிடற்கரியது. தமிழ் — சிங்கள அகராதியை ஆக்குவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு உருவாகுமென உழைத்தார். 'எளுவ' மொழிப் பாடப் புத்தகத்தை உருவாக்கித் தேசிய ஒருமைக்காகப் பாடுபட்டவர்.

அடிகளின் மாபெரும் பணிகளைக் கௌரவிக்குமுகமாக அரசு முத்திரை வெளியிடு செய்யவேண்டும். இதனால் அரசே மகிமையுறும்.

பொது நலனுக்காகத் தம்மைப் பூரணமாக அர்ப்பணித்த கலாநிதி தாவீது அடிகளின் பணியைக் காலமெல்லாம் நன்றிப்பெருக்குடன் நினைவு கூர தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள். ★

- துரை. ஆரோக்கியதாசன் -
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கல்லூரி)

# 'லில்லி'யின் விசுவாசம்

**தருகக்கதை**

'லில்லி' என்ற அந்த நாய் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டது. சோர்வுடன் மெல்ல நடந்தது. அதன் கண்களில் சோகம் நிறைந்திருந்தது. வீட்டினுள்ளே தனி அறையிற் போடப்பட்டிருந்த அந்தக் கட்டிலின் கீழே மீண்டும் படுத்துக்கொண்டது.

'லில்லி! லில்லி! லில்லி!' என்று இரண்டு முறைக்கு மேலும் வர்ணம் அக்காள் கூப்பிட்டுப் பார்த்தாள்.

தலையை மெல்ல உயர்த்தி அவளை ஏறெடுத்துப்பார்த்து வாலை மெல்ல ஆட்டியது. மீண்டும் தலையைச் சாய்த்து அந்தக் கட்டிலின் கீழேயே சுருண்டு படுத்தது.

கந்தசாமியார் கடைசிவரை படுத்திருந்த கட்டில். அவர் அங்குதான் தனது கடைசி நாட்களில் பேச்சுமூச்சற்று உறங்கிக்கிடந்து இறந்து போனார்.

அவருடனேயே, அவர்மீது லில்லியும் விசுவாசம், நன்றி கலந்த உணர்வுகளுடன் உறவாடித் திரிந்தது உணவை உண்டது. வாலாட்டி அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது.

எத்தனைமுறை அடித்தாலும், கலைத்தாலும் மீண்டும் மீண்டும் கந்தசாமியாரின் கட்டளைக்குப் பணிந்து வீட்டைக் காவல்காத்து அவரது காலடியிலேயே நன்றியுணர்வுடன் வாலாட்டி வளையவருவது அதன் வழக்கம் – அதன் பழக்கம்.

இன்று அது சோர்ந்து போய் உறங்கிக் கிடந்தது. கந்தசாமியார் இறந்து இன்றுடன் ஐந்து நாட்கள் கடந்து விட்டன. பிள்ளையில்லாத குறை நீங்க அவர் தத்தெடுத்துத் தம் மகனாக வளர்த்த கனகு இன்னமும் வரவில்லை.

கந்தசாமியாரின் தந்தை உறவிலும் வர்ணம் அக்காளின் தாய்ப் பாசத்திலும் வளர்ந்தவன் கனகு.

'அவன் இன்னமும் வரவில்லையே!, இந்த மனுஷன் அவனை எவ்வளவு அன்பாய்ப் பார்த்தது. செத்தவீட்டுக்கு எண்டாலும் வந்தானில்லை' வர்ணம் அக்காள் வாய்விட்டுப் புலம்பினாள்.

எத்தனை இன்பங்கள், இனிமைகள் இளமையிலிருந்தே அவர்களுடன் வளர்ந்து வாழ்ந்து பெரியவனானவன்.

கந்தசாமியாரால் மகன் என்று அன்புடன் அழைத்து அரவணைத்து வளர்க்கப்பட்டவன். இன்னமும் அவரது மரணச்செய்தி கேட்டும் வரவில்லை.

ஏதோ ஆத்திரத்தில் 'என்னுடைய முகத்தில நீ முழிக்கக் கூடாது' என்று அன்றொரு நாள் சொன்னதை மனத்தில் இருத்திக் கொண்டு தனது மனைவியையும் இழுத்துக் கொண்டு போனவன் தான். இன்னமும் திரும்ப வரவில்லை.

அந்த நாய் எதையும் சாப்பிடாமல் அந்தக் கட்டிலின் கீழேயே படுத்துக் கிடந்தது.

அதற்கென வைக்கப்பட்ட சோற்றுக் குழையல் அதன் அருகிலேயே அப்படியே இருந்தது.

'அவர் செத்ததில இருந்து 'லில்லி' ஒண்ணும் சாப்பிடுகுதில்லை' வர்ணம் அக்காள் வருத்தப்பட்டாள்.

அந்த நாய் மீண்டும் தான் படுத்திருந்த இடத்திலிருந்து எழுந்தது. அவ்விடத்திலேயே மெல்லச் சுழன்று சுற்றிச் சுருண்டு படுத்துக் கொண்டது.

இன்றும்-இன்னமும் கனகு வரவில்லை.

அடுத்த நாட்காலை.

லில்லி கால்களைப் பரப்பிக் கட்டிலின் கீழே நீண்டு கிடந்தது. அந்த நாய் இறந்து விட்டது.

'இஞ்சபார் வர்ணம், அந்த நாய் செத்துக் கிடக்கு. மிருகங்களுக்கிருக்கும் அன்பும் அறிவும் மனுசருக்கில்லையே' என்று ஆரவாரப்பட்டு பக்கத்துவீட்டுப் பரிமளத்தை நோக்கினாள்.

அந்த நாய் செத்துக் கிடந்தது.

வர்ணமக்காளின் கண்கள் பனித்தன.

கனகு இன்னமும் வரவில்லை. ★

(யாவும் கற்பனை)

- மாவுறையூரான் -

# யேசுபிரான் காட்டிய வழியில் ஒளியின் மக்களாக வாழ்வோம்!

தன்னைப் பகைத்தவர்களுக்காகவே தன்னுயிரைக் கொடுத்து அன்புக்கு இலக்கணம் கூறும் உயிர்த்த இயேசுவை இனங்கண்டு கொள்ள வேதாகமம் நம்மை அழைக்கிறது.

புதிய ஏற்பாட்டில் அருளப்பர் 13; 31 — 35 இயேசுவின் அன்பு எப்படியானது என்பதை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

'ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்.' இது யேசுவின்



அறை கூவல். இதைப் புதிய கட்டளையாக நமக்குத் தருகிறார்.

இறையரசின் புதிய பாதைகளை மலைப் பொழிவின் புதிய கண்ணோட்டத்தில் தடம்போட்டுக் காட்டிய இயேசு பழைய ஏற்பாட்டுக் கட்டளைக்கு புதிய அணுகுமுறையை வழங்குவதை மத் 5: 20 - 48 இதிலே காண்கின்றோம்.

'மறை நூல் அறிஞர் பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தை விட உங்கள் ஒழுக்கம்' சிறந்திருக்கவேண்டும் என்பதற்காகவே இயேசு இதைப் புதிய கட்டளையாகத்தருகின்றார்.

'கண்ணுக்குள் கண், பல்லுக்குப் பல்...... அயலானுக்கு அன்பு; பகைவனுக்கு வெறுப்பு; எனக் கேட்டிருக்கின்றீர்கள். நானோ சொல்லுகிறேன்; தீயோனை எதிர்க்கவேண்டாம்; பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; நன்மை செய்பவர்களுக்கு மட்டும் அன்பு செய்வது தன்னலம்; ஆனால் பகைவருக்கு அன்பு காட்டுவது தெய்வீகம். இத்தகைய அன்பையே தம் சீடரின் அடையாளமாக இயேசு குறிப்பிடுகின்றார்.

அன்புக்கு இலக்கணம் கூறும் இயேசு 'அன்பு செய்' என்றும் மட்டும் கூறவில்லை. 'நான் உங்களை அன்பு செய்தது போல' என்று தன் வாழ்வின் மாதிரி கையை தான்கொடுத்த கட்டளைக்கு அளவு கோலாக்கிப் புதிய புதிய கட்டளைக்குப் பொருள் கொடுத்தார்.

உதட்டிற்கும் உள்ளத்திற்கும் மாறுபாடு காட்டுபவனின் கட்டளையல்ல வாழ்ந்தவனின் புதிய கட்டளை.

இந்த அன்பின் ஆழம் பகைவனின் இதயத்தையும் கவரவேண்டும். தந்தையே இவர்களை மன்னியும் என்றவரின் புதிய கட்டளையை உயிர்ப்பின் இயேசுவிற்கு சாட்சியாக அமைக்கவேண்டும்.

பல வேளைகளில் புதிராகவே நிற்கும் இப்புதிய கட்டளையைப் புரிந்து கொண்டு செயற்படுவோம்.

குட்டக் குட்டக் குனிந்து கொண்டேயிருந்தால் காரியம் என்னாவது: அவனுக்குப்பாடம் கற்பித்தால் உலகில் வாழமுடியும் என்ற பழி வாங்கலுக்குப் புதிய கட்டளையின் பதில் என்ன?

யேசுவின் வாழ்வே அதற்குப்பதில் தருகின்றது. அன்று யேசுவோடே இருந்த சீடன் அவரைக்காட்டிக் கொடுத்தான். மறுதலித்தான். தீர்ப்புக் கூறவேண்டியவர் தீர்ப்புக்காக அன்றைய தலைவர் முன்னிலையில் நின்றார் அவர்மேல் பல குற்றங்களைச் சாட்டினார்கள். இயேசுவே மறுமொழி ஒன்றும் கூறவில்லை (மாற் 15: 5). அவர்களை எதிர்க்கவில்லை ஏனென்றால் அவர் கூறிய, எமக்குத் தந்த, புதிய கட்டளைகளின்படி வாழ்ந்து காட்டினார். அதனால் இறுதி வெற்றி உயிர்த்த இயேசுவுக்கே ஒழிய, அவை துன்புறுத்தி சிலுவையில் அறைந்து கொன்றவர்களுக்கல்ல.

ஆகவே இயேசுக் கிறீஸ்து வாழ்ந்து காட்டிய வாழ்வில் வாழாமல் ஆண்டவரே ஆண்டவரே என்று அழைப்பதில் அர்த்தமில்லை. நாமும் யேசு காட்டிய வழியில் ஒளியின் மக்களாக இருந்து எம் மண்ணில் அன்பு நிலை கொண்டு வருவோம். ★

- சகோதரர் அ. சகாயநாதன் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் உலகில் பேணப்பட பகவான் பாபா காட்டும் வழி!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அக அமைதிக்கு(சாந்திக்கு) எதிரிகளாக எமக்கு முன் தோன்றுவன, எமக்குள் தோன்றும் எமது உலகியல் அவாக்களாகும்.

ஆசை, சினம், பொறாமை, வெறுப்பு, அச்சம், மனச் சோர்வு என்ற உணர்வுகள் எம்மைத் தம் எண்ணப்படி ஆட்டிப்படைக்கும் வரை எம்மால் அமைதியை அடைய முடியாது.

எனவே இவ்வுணர்வுகளைக் கட்டுப்படுத்தி அவைகளை வென்று சாந்தியை அடைவது எங்ஙனம் என்ற பெரிய வினா எம் முன் தோன்றி எம்மைத் திகைக்க வைக்கின்றது.

இவ்வுணர்வுகள் எம் அடிமனத்துள் (Subconccious mind) எமக்குத் தெரியாமலே பல பிறவிகளில் இருந்து படிப்படியாக வந்து புதைந்து கிடக்கின்றன.

### ஐம்பொறிகள் தரும் செய்தி

எமது ஐம்பொறிகள் மூலம் ஏதாவது ஒரு செய்தி எமது மூளைக்கு வந்தவுடன் மனம் இதை அறியும். உடனே மனம் இச் செய்தியை எமது அடிமனத்தில் புதைந்து இருக்கும் இவ்வுணர்வுகளோடு தொடர்புபடுத்தும்.

இவ்வுணர்வுகளோடு சாதகமாக, இக்குறிப்பிட்ட செய்தி இருந்தால் அது உடனடியாக மகிழ்ச்சி, ஆனந்தம், ஆதரவு என்பவற்றை உடனே மேல் மனத்துக்கு வெளிப்படுத்தும்.

அதே சமயம் பாதகமாக இருந்தால் கோபம், பொறாமை, வெறுப்பு எனும் உணர்வுகளை மனத்துக்கு வெளிப்படுத்தி அனுப்பும்.

உடனே எம்மையறியாமலே நாம் உணர்ச்சிவசப்படுகின்றோம், திகைக்கின்றோம், வெறுக்கின்றோம், பொறாமைப்படுகின்றோம், மகிழ்கின்றோம், அழுகின்றோம், சிரிக்கின்றோம். இவ்வாறு நாம் நடந்து கொள்வதெல்லாம் எமது அடிமனதில் புதைத்து வைக்கப்பட்டுள்ள, பல பிறவிகளின் பயனாக வந்த செயல்களின் விளைவேயாகும்.

இவ்வுணர்வுகளை நாம் வெறுக்க முடியாது ஏனெனில் இவை எம் முன் இருந்து உருவாகி வரும் எமது உணர்வுகளே. இவைகளை உடனடியாக அழிக்கமுடியாது. முயன்றால் மன முறிவு ஏற்பட்டு மூளையையே பாதிக்கலாம்.

எனவே அவைகளுடன் சேர்ந்து வாழப் பழகி அவற்றை எம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைய வேண்டும்.

இது சம்பந்தமாக Dr. Wambach என்பவர் 1000க்கு மேற்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்து ஒரு மனிதனிடம் சுமார் ஆயிரம் வருடங்களிக்கு மேலுள்ள பிறவிகளின் உணர்வுத் தொகுப்பு அவன் அடிமனத்துள் புதைந்து கிடப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு எனத் தனது ''Life before life'' என்ற புத்தகம் மூலமும், ''Re — living past lives'' என்ற புத்தகம் மூலமும் வெளிப்படுத்துகின்றார்.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்க வெளியீடான ''விஞ்ஞான முரசு'' சஞ்சிகையின் தைமாத இதழில் வெளியான ''மனித மேம்பாடுகள்'' என்ற கட்டுரையின் இறுதிப்பகுதி இங்கு பிரசுரமாகிறது.

எனவே இவ்வுணர்வுகள் எம்மையறியாமலே எமக்குள் தோன்றிவரும்போது அவைகளை நாம் இனம் கண்டு கொள்ளவேண்டும்.

அதுவே முதலாவது படியாகும். நாம் பொறாமைப் படுகின்றோம் என்பதை நாம் அறிந்துகொண்டாலே அதன்மூலம் நாம் செய்யும் எதிர்விளைவுகளைக் கட்டுப்படுத்தலாம்.

இதையே வள்ளுவரும்

''சென்ற இடத்தால்
செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப (து)
அறிவு''

(அறிவுடைமை அதிகாரம்43) —எனக்கூறி, எமது அறிவிற்கு முக்கியத்துவம் கொடுத்து உணர்வுகளைக் கட்டுப்படுத்தி சாந்தியை அடைவதற்கான வழியை வகுத்துக்கொடுத்தார்.

- நா. புவனேந்திரன் பி. ஏ. -

இத்தகைய நிலைமைக்கு நாம் வருவதற்கு மனித மேம்பாடுகளை எமது மனதுக்குள் விதைப்பது மிக அவசியமாகும்.

சூரிய வெளிச்சம் வந்தவுடன் இருள் அகல்வதுபோல



சத்தியசாயி பாபா

இம்மேம்பாடுகள் எம்முள் உதிக்கும்போது இவ்வுணர்வுகள் தன்னையறியாமலே அடங்கிப்போய்விடும். சாந்தி பிரகாசிக்கும்.

உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும் தன்னை உணர்ந்து கொள்ளவும் தியானம் செய்தல் மிக உதவியான கருவி எனவும் கூறப்படுகின்றது.

### பிரேமை

அன்பு என்பது உலகின் மிகவும் பெரிய ஆற்றல், தூய சுயநலமற்ற அன்பால் இவ்வுலகில் சாதிக்கமுடியாதது எதுவுமேயில்லை.

பரிசுத்தமான அன்பு மனிதனின் இதயத்தைப் பண்படுத்தும். எதிரியை நண்பனாக்கும். மனித மேம்பாட்டுக் குணங்கள் எல்லாவற்றையுமே பிரேமை அடிநாதமாக இருந்து வளர்த்துச் செல்கின்றது.

பிரேமை எண்ணங்களோடு சேரும்போது சத்யம். பிரேமை நடத்தையுடன் சேரும்போது - தர்மம், பிரேமை உணர்வுகளோடு கலக்கும்போது - சாந்தி பிரேமை புரிந்துணர்வுடன் சேரும்போது - அஹிம்சை.

எனவேதான் திருவள்ளுவர்-

''அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாழ்'' எனவும்
''அன்புடையார் என்பும்
உரியர் பிறர்க்கு'' என

வும் கூறி — அன்பின் பெருமையை எடுத்துரைத்தார்.

அன்புதான் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருப்பதனால்தான், அன்பில்லாத மனிதரைவிட மிருகங்கள் வாழும் காடு மேல் என பகவான் விளக்குகின்றார்.

இத்தகைய மாபெரும் சக்தி வாய்ந்த, தெய்வீக அன்பை, நாம் சத்யத்தை உணரும் போது இலகுவில் வெளிப்படுத்தலாம்.

### அஹிம்சை

மனித மேம்பாட்டுக் குணங்களுள் ஒன்றான அஹிம்சையை வெளிப்படுத்துவதற்கு ஏனைய நான்கு மனித மேம்பாட்டுக் குணங்களும் பூரணமாக வளர்த்தெடுக்கப்படவேண்டும். அப்போதுதான் அஹிம்சையின் பூரணமான தன்மை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

அஹிம்சை என்பது ''உயிர்க்கு ஊறுகள் செய்யாமை'' ஆகும். அதாவது சொல்லால், எண்ணத்தால், செயலால் தீங்கு செய்யாமல் இருப்பதே அஹிம்சை.

இத்தகைய அதி உன்னத மேம்பாடான அஹிம்சை நெறி நின்று உலகுக்கு உதாரணம் காட்டியவர்களில் புத்த பெருமான், மகாவீரர், யேசு, காந்தியடிகள் என்போர் முக்கியமானவர்களாவர்.

அஹிம்சை எம் மனத்திற்கு உறுதியையும், அச்சமில்லாத் தன்மையையும் களங்கமற்ற அன்புடன் சேவை செய்யும் சக்தியையும் வளர்க்கின்றது.

மற்றவர் எமக்குத் துன்பம் செய்தாலும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்று அவர்களுக்கு நல்லதையே செய்யும் பண்பை இது வளர்க்கும்.

இதுமட்டுமன்றி நாம் வாழும் சூழலைக் கூட மாசுபடுத்தாததன்மையை வளர்த்தெடுக்கும் (Non Violation of the natural Laws) அத்துடன் எதையும் வீணாக்குதலைத் தடுத்து எமது சக்தியை வீண் விரயம் செய்வதையும் குறைத்து விடும்.

எமது உணவு, நேரம், பணம், ஞானம் சக்தி எல்லாமே சரியான முறையில் நன்மைக்குப் பயன்படுத்தப் படவேண்டும்.

இவைகளை வீணாக்கவோ சமுதாய அழிவுக்கு உபயோகிக்கவோ கூடாது என்பதையும் இம்மேம்பாடு வலியுறுத்துகின்றது.

மனிதனது நற்குணங்கள் எண்பத்து மூன்றாக ஆய்வாளர்கள் எடுத்துரைத்தாலும், இவைகளை ஐந்து மேம்பாடுகளாகத் தொகுத்து எல்லா நற்குணங்களையும் இதனுள் வகுத்துக் காட்டி மானிடர் உய்த்துணர பகவான் பாபா வழிகாட்டுகின்றார்.

இது மனிதனுக்கு மட்டுமல்ல, அவனது குடும்பத்துக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் ஏன் இப்பரந்த உலகுக்கே வழி காட்டும் புனித ஆத்மாவாக அவனைப் பிரகாசிக்க வைக்கும்.

(முற்றும்)

---

| | |
|---|---|
| நூல்: | சிரணி அந்தாதி |
| இயற்றியவர்: | கவிஞர் அம்பிகைதாசன் |
| வெளியிட்டவர்: | சாமி கி. பாலகிருஷ்ணக் குருக்கள் |
| விமர்சனம்: | சோனா |



## நூல் வரிசை

'நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம்பெறலாம்'

என்பது மகாகவி பாரதியின் அநுபவ வாக்கு, அமுத வாக்கு. கவிஞர் அம்பிகைதாசன் யாழ்ப்பாணத்துச் சண்டிலிப்பாயிலே எழுந்தருளி அருள்பாலிக்கும் நாகம்மாளை நம்பி, வழிபட்டு அதிக நலம் பெற்ற தன் பயனாக அவ்வன்னை மீது அந்தாதிப் பிரபந்தம் ஒன்றைப்பாடி அளித்துள்ளார்.

கவிஞர் அம்பிகைதாசன் யாப்பறி புலவர்; தமிழை முறையாகக் கற்று நல்லாசிரியராய் விளங்கி ஓய்வுபெற்றவர்: சமயப்பற்றும் அறிவும் பக்தியும் மிகுந்தவர். முன்னரே கடவுளர் மீது பிரபந்தங்கள்பாடி அடியார்கள் அவற்றை உருக்கத்துடன் பாராயணம் செய்திட உதவியவர் இத்தகைய தகுதிப்பாடுகள் பலவும் வாய்க்கப் பெற்ற ஒருவர் யாத்த பிரபந்தம் பலவகையிலும் சிறந்து விளங்கும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே.

வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற பா, பாவினங்களால் ஒருபாடலின் அந்தம் அடுத்தபாடலின் தொடக்கமாகவும், முதற்பாடலின் முதற்சீர் இறுதிப் பாடலின் இறுதிச் சீராகவும் அமைய நூறுபாடல்களில் அமைக்கப்படும் பிரபந்தமே அந்தாதி எனத் தமிழில் வழங்கும்.

கவிஞர் அம்பிகைதாசன் அந்தம் - ஆதி, முதற்பாடலின் முதற்சீர் இறுதிப்பாடலின் இறுதிச்சீராக அமையுமாறு தமது அந்தாதியை யாத்துள்ளார்.

ஆனால் வெண்பா, கட்டளைக்கலித்துறை என்பவற்றிற்கு வேறாக ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் முதலாம் பாவினங்களைக் கொண்ட பாக்களை யாத்துப் புதுமை செய்துள்ளார்.

பக்தியுணர்விற்குப் பொருந்தும்வகையில் ஓசை மாற்றங்களை இவ்வாறு ஏற்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கதே. இம்முறையானது இனிவரும் காலத்தில் அந்தாதி பாடுவோருக்கு வழிகாட்டுவதாய் விளங்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

அம்பிகைதாசன் பாடல்களிலே பக்திக்குரிய உருக்கப் பண்பு மிகுந்து நிற்கின்றது. உதாரணமாக ஒரு பாடலை மட்டும் இவ்விடத்தில் எடுத்துக் காட்டலாம்.

உறைந்திடும் உமையே! எங்கள்
உளங்கவர்கள்ளி உள்ளம்
நிறைந்திடு பக்தி வெள்ளம் நின்மலி கோவி லெங்கும்
திறந்திடு மடையைப்போல வழிந்திட வழிபா டாற்றுந்
திறந்தனைத் தந்து உந்தன் திருக்க(ண)னை
நல்கு வாயே.

பக்தியோடு சக்தி தத்துவங்களும் பின்னிப்பிணைந்து ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதும் சிரணி அந்தாதியின் சிறப்பமிசம் எனலாம்.

அம்பிகையை வாழ்த்தித் திருவடியை வணங்குவார்க்குக் கிடைப்பன எவை? கவிஞர் இவ்வினாவிற்குத் தரும் அழகிய விடை இது:-

வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் வளைந்துமனம்
தாழ்ந்தாலும் வாழ்வு வேண்டி
வாழ்த்தியொரு வரங்கேட்டு வடிவழகி
திருவடியில் வணங்கி னாலே
வாழ்த்தியெம்மைக் கைதூக்கி வாழ்க்கையினை
வளமாக்கி வளர்த்தே நாளும்
ஆழ்த்திப்பே ரின்பத்தில் ஆராட்டும்
பாராட்டும் அளிப்பா ளன்றே.

---

# 1986 இல் இங்கிலாந்தைத் தோற்கடித்த
# பசுமை நினைவுகளுடன் செல்லும்'இந்திய அணி!

★ 7 துடுப்பாட்ட வீரர்கள், 7 பந்துவீச்சாளர்கள், 2 விக்கெட் காப்பாளர்கள் இந்தப் புதிய அணி உங்களுக்கு திருப்தி அளிக்கிறதா? ரவிசாஸ்திரி துடுப்பாட்ட வீரர் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறாரா?

— இது ஒரு நல்ல அணிதான். ரவிசாஸ்திரி டெஸ்ட் போட்டிகளில் பல விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தாலும் கூட அவர் ஒரு சிறந்த துடுப்பாட்டவீரர் என்பதையும் புறக்கணித்துவிட முடியாது.

இங்கிலாந்து செல்லும் இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக அஸாருதீன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அஸாருதீன் இந்திய அணியின் திறமை, பலவீனம் பற்றிப்பேட்டி ஒன்றில் கருத்து வெளியிட்டார். அது இங்கு பிரசுரமாகிறது.

என்னைப் பொறுத்தவரை அணியில் துடுப்பாட்டவீரர் குறைவு என்று நினைத்துக் கொண்டு ஆடுவேன். அது தான் என்னைப் பொறுப்புடன் ஆடச் செய்யும்.

நாம் துடுப்பாட்ட வீரர்களை மேலும் விளையாடத் தூண்டச் செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் சரியாக விளையாடவில்லை என்றால் நமக்குப் பின் வருபவர் பார்த்துக் கொள்வார் எண்ணம் மாறும்.

அந்த வகையில் புதிய அணி குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். பந்து வீச்சும் நன்றாகக் காணப்படுகிறது. ஏனெனில் கபில்தேவ் எப்போதுமே இங்கிலாந்தில் நன்றாகப் பந்து வீசியுள்ளார்.

அதேபோல் மனோஜ் பிரபாகரும் நன்றாகப் பந்து வீசுவார்.

ஆனால் பந்துவீச்சைப் பொறுத்து இப்போது என்னால் எதுவும் சொல்ல இயலாது. ஏனென்றால் அது அவ்வப்போதைய சூழ்நிலையைப் பொறுத்தது.



கபில்தேவ்

★ தற்போது சித்து மட்டும்தான் குறிப்பிட்டுக் கூறும்படியான தொடக்க ஆட்டக்காரராக இருக்கிறார். இது ஒரு பிரச்சினையாக இருக்கும் என்று கருதுகின்றீர்களா?

— இல்லை. ராமனும் நன்றாக ஆடக்கூடியவர்தான்; மேலும் மேற்கிந்திய அணிக்கு எதிராக ரவிசாஸ்திரி கூட தொடக்க ஆட்டக்காரராக சிறப்பாக ஆடியிருக்கிறார்.

மனோஜ் பிரபாகரும் நியூசிலாந்து தொடரின்போது தொடக்க ஆட்டக்காரராக நன்கு ஆடியவர்தானே?

எனவே எந்தப் பிரச்சினையும் இருக்காது. இப்போது இந்திய அணி நல்லதொரு துடுப்பாட்ட அணியாக உள்ளது. குறிப்பாக இங்கிலாந்தில் நன்றாக விளையாடிய அனுபவம் பெற்ற வெங்சர்க்காரும் அணியில் இருக்கிறார்.

★ அணியில் நான்கு வேகப் பந்துவீச்சாளர்களே உள்ளனர். இது போதுமென்று நினைக்கிறீர்களா?

— ஆம். இது போதும் என்று கருதுகிறேன். ஏனெனில் முதல் பகுதியை விட இரண்டாவது பகுதியில்தான் பந்துவீச்சை அதிகம் பயன்படுத்தப் போகிறோம். எனவே தான் ரவிசாஸ்திரி உட்பட 3 சுழல் பந்துவீச்சாளர்களை தேர்வு செய்திருக்கிறார்கள்.

★ 'பீல்டிங்' நன்றாக இருக்கிறது என்று கருதுகிறீர்களா?

— இல்லை. இப்போது ரொம்ப மோசமாகவே இருக்கிறது. எனவே இதற்கு இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்.

★ சமீப காலமாக கபில்தேவின் தொடக்க பந்துவீச்சு அவ்வளவு வலுவானதாக இல்லையே? இங்கிலாந்தில் அவர் தனது திறமையை மீண்டும் காட்டுவார் என்று எதிர் பார்க்கிறீர்களா?

— ஆமாம். நிச்சயமாக கபில்தேவிற்கு இன்னும் தொடக்கப் பந்துவீச்சாளருக்கு உரிய திறமை இருக்கிறது. அவரது அனுபவம் விலைமதிப்பிட முடியாது. குறிப்பாக அவர் தன்னால் முடிந்தவரை எப்போதும் நன்றாகச் செய்தார்.

### கப்டன் அஸாருதீன் பேட்டி

★ இந்தியா சிறப்பாக விளையாடாத நிலையில் நீங்கள் இங்கிலாந்து செல்வது பற்றி......?

— இங்கிலாந்து அணி எப்போதுமே நன்றாக விளையாடக்கூடியது. ஏனெனில் நிறைய கிரி[illegible] களில் ஆடுவதால் அவர்களுக்கு உள் [illegible] நிலைமைகள் தெரியும்.

சமீபத்தில் தங்களது திறமையை அவர்கள் மீண்டும் வெளிக் காட்டியுள்ளனர்.



வெங்சாகர்

மேலும் தொழில் ரீதியாகவும் ஆடக்கூடியவர்கள்.

1986 - இல் இங்கிலாந்தில் இந்திய அணி வெற்றிகளைக் குவித்தது.

அந்தப் பசுமையான நினைவுகளுடன் இப்போது நாங்கள் அங்கு செல்கிறோம். எவ்வளவு நேரம் விக்கெட்டில் ஒட்டிக்கொண்டு போராடுகிறோமோ அதுதான் எங்களது வெற்றிக்கு காரணமாக அமையலாம்.

★ அணியில் முன்னாள் கப்டன்கள் நிறையப் பேர் இருப்பது உங்களுக்குப் பிரச்சினையாக இருக்காதா?

— இல்லை. எனக்கு யாருடனும் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஏனெனில் யாராவது எனக்கு அறிவுரை கூறினால் கூட அதைக் கேட்டு நடக்கத் தயங்கமாட்டேன். [illegible] படையானவன்.

உதாரணத்திற்கு சச்சின் தெண்டுல்கர் என்னிடம் வந்து நீங்கள் இப்படிச் செய்வது தவறு என்று கூறினால் கூட அதை ஆராய்ந்து பார்ப்பேன்.

★ இந்தத் தொடர் முடியும் வரைதான் நீங்கள் கப்டனாக நியமிக்கப்பட்டு இருக்கிறீர்கள்? அதுவும் சோதனையான நேரத்தில் கப்டனாக நியமிக்கப்பட்டிருப்பது பற்றி வருத்தம் அடையவில்லையா?

— இல்லை. எப்போதும் அதுபோல் நான் வருத்தப்படுவது கிடையாது. என்றுமே எதிர்வருவதை அப்படியே எடுத்துக்கொள்வேன். எதைப் பற்றியும் கவலைப் படமாட்டேன். ★

### அமெரிக்காவில் கிரிக்கெட்

□ அமெரிக்காவில் கிரிக்கெட் விளையாட்டுப் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்த ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் இடையேயான ஒரு நாள் போட்டித் தொடர் அமெரிக்காவில் நடத்தப்பட்டது.

முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா ஜெயித்துள்ளது.

அடுத்த ஆட்டத்தில் பாகிஸ்தான் வென்றதால் இந்தக் காட்சி போட்டித்தொடர் 1-1 என்றகணக்கில்முடிந்தது.

### ரிச்சர்ட்ஸுக்கு கண்டனம்

● இங்கிலாந்து கிரிக்கெட் அணி கடந்த ஏப்ரல் மாதம் மேற்கு இந்தியத் தீவுடன் ஆன்ட்ரிபாவில் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை ஆடியது. அப்போது விவியன் ரிச்சர்ட்ஸ் பத்திரிகையாளர் ஒருவர் செய்தியாளருடன் கடுமையான முறையில் மோதிக்கொண்டார்.

பின்னர் இந்தச் சம்பவத்திற்கு ரிச்சர்ட்ஸ் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இந்தச் செயலுக்கு இப்போது மேற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கண்டனம் தெரிவித்திருக்கிறது. ★

---

# எயிட்ஸிலும் பார்க்க கொடிய காமாலைநோய்

தொற்றும் தன்மை கொண்ட காமாலை நோயானது (Hepatitis B) உலகில் மக்களின் ஆரோக்கியத்துக்கு எய்ட்ஸைவிட அதிக ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாகும் என தொற்றுநோய்கள் பற்றிய நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

தவிர, இக்காமாலை நோயானது கல்லீரல் புற்று நோயை உண்டாக்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

எயிட்ஸ் நோயை உண்டாக்குகிற எச். ஐ. வி வைரஸைஉடலில் பெற்றுள்ளவர்கள் உலகில் சுமார் ஒன்று முதல் 5 கோடிவரை உள்ளனர்.

இவர்களுடன் ஒப்பிட்டால் உடலில் தொற்றுக்காமாலை வைரஸைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 30 கோடியாகும் என்று தொற்று நோய்களுக்கான அமெரிக்க தேசிய ஸ்தாபனத்தின் துணைத்தலைவர் டாக்டர் சான்ஃபோர்ட் எப். குவின் கூறினார்.

உடலில் தொற்றுகாமாலை வைரஸைப் பெற்றுள்ளவர்களில் சுமார் 25 சதம் பேர் அதாவது, சுமார் 6 கோடி மக்கள் ஆரம்பநிலை கல்லீரல் புற்றுநோயினால் மரிப்பர் என்றும், சுமார் 15 சதம் பேர் அதாவது 4 கோடி லட்சம் மக்கள் சிர்ரோஸிஸ் (Cirrhosis) எனப்படும் கல்லீரல் நோயினால் மடிவர் என்றும் அவர் சொன்னார்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் தொற்றுக் காமாலை நோய் சர்வசாதாரணமாகக் காணப்படுகிறது.

சில நாடுகளில் இந்நோய்க்கு எதிராக மக்களுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

குழந்தைகளுக்குப் போடப்படும் பல தடுப்பு ஊசிகளுடன் தொற்றுக் காமாலைக்கு எதிரான தடுப்பு ஊசியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் சிபாரிசு செய்துள்ளது.

தொற்றுக் காமாலை வைரஸ், எய்ட்ஸ் வைரஸ் ஆகிய இரண்டுமே, இந்த வைரஸை உடலில் தாங்கியவர்களின் இரத்தத்தை மற்றவர் பெறுவதன்மூலம் பரவுகிறது.

பாலினச் சேர்க்கை, பல நபர்கள் ஒரே ஊசி மூலம் போதை மருந்துகளைச் செலுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றின்மூலமும் பரவுகிறது.

இரண்டு வைரஸ்களும் தாயிடமிருந்து குழந்தைகளுக்குப் பரவுகின்றன.

சுகாதார ஊழியர் ஒருவர் தொற்றுநோய் காமாலைக்காரருக்கு ஊசிபோட்ட பின்னர் தற்செயலாக அவரது கையில் அந்த ஊசி குத்துமானால், அந்த ஊழியருக்கு நோய் ஏற்பட 40 சத அளவுக்கு வாய்ப்புள்ளது என்று குவின் கூறினார்.

இதேபோன்ற நிலைமையில் எய்ட்ஸ் நோய் தொற்றுவதற்கு 0. 5 சத வாய்ப்பே உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தான்சன்
கல்வி நிலையம்
கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பழை.
0/L DAY CLASS
(பகல்நேர வகுப்புக்கள்)
வகுப்புநேரம்:-
காலை 8 மணி முதல் பி ப 1 மணிவரை
''முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்''



சஞ்சீவி சஞ்சிகை

09 - 06 - 1990 சனிக்கிழமை



தான்சன்
கல்வி நிலையம்
கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பழை.
எமது ஆசிரியர்குழு
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன் மதி
தமிழ் — திரு. கணேஷ்
சமூகக்கல்வி — திரு. S. T. குமார்
ஆங்கிலம் — திரு. சிவகாந்தன்
வர்த்தகம் — திரு. வரதன்


# ஐரோப்பிய அரசியல் மாற்றங்கள்

# ஆசிய எல்லையை தொடும் அறிகுறி

இரண்டாவது உலகமகா யுத்த முடிவில் யால்ரா (Yalta) ஒப்பந்தம் மூலம் கொரியா துண்டாடப்பட்டது.

1950 ஆம் ஆண்டு தென் கொரியாவை வடகொரியா பலவந்தமாக இணைக்க முற்பட்ட போது கொரிய யுத்தம் மூண்டது.

1953 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இந்த யுத்தத்தில் வடகொரியாவை சீனா ஆதரித்தது. தென்கொரியா பக்கம் அமெரிக்கா உட்பட 16 நாடுகள் போரிட்டன. 46 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.

1953 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் ஏற்பட்டு ஐ. நா. அவதானிகள் படையும் நிறுத்தப்பட்டது. எட்டு நாடுகளைச் சேர்ந்த 8000 ஐ. நா. அவதானிகள் படை அங்கு தற்போதும் நிறுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் கொரிய யுத்தம் முடிந்து 37 வருடங்கள் கழிந்தும் தென்கொரிய எல்லையில் அமெரிக்கப்படைகள் இன்னும் நிலை கொண்டுள்ளன.

மற்றொரு கம்யூனிஸ்ட் நாடான மொங்கோலியாவைப் போன்று சர்வதேச அரங்கில் இருந்து ஒதுங்கி வாழ்ந்து வரும் வடகொரியா, கொரியப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காணும் கொள்கையில் இருந்து இன்னும் விடுபட்டதாகத் தெரியவில்லை. உலகில் கொந்தளிப்பு நிலவும் பிரதேசங்களில் ஒன்றாகக் கொரிய குடா நாடு இருந்து வருகிறது.

தற்போது சர்வதேச அரங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்

## தென்கொரிய - சோவியத் தலைவர்கள் சந்திப்பு கொரிய இணைப்புக்கு முதற்படியா?

களுக்கு அமைய கொரியப் பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தென்கொரிய ஜனாதிபதி


கோர்பச்சேவ்

றோ தா - வூ (Roh Tae - Woo) கருதுகிறார். இதற்கு சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் (Mikhail Gorbachev) ஆதரவு அவருக்கு அவசியம்.

இதன் விளைவே கடந்த வாரம் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் இடம் பெற்ற சந்திப்பு.

### வூ - புஷ் சந்திப்பு

தென்கொரிய ஜனாதிபதி றோதா - வூ சான்பிரான்சிஸ்கோ சென்று சோவியத் அதிபர் கோர்பச்சேவைச் சந்தித்து கொரிய விவகாரம் தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்தி உள்ளார்.

கொரியா துண்டாடப்பட்ட பின்பு தென்கொரிய - சோவியத் தலைவர்கள் சந்தித்தது இதுவே முதல் தடவை.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் உச்சிமாநாடு நடத்துவதற்காக ஜனாதிபதி கோர்பச்சேவ் வாஷிங்டன் வந்திருந்த சமயம் சான்பிராசிஸ்கோவில் இந்த எதிர்பாராத சந்திப்பு நிகழ்ந்தது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்பின் துண்டாடப்பட்ட நாடுகளில் வியட்நாம் நீண்டபோரின் பின்பு 1975 ஆம் ஆண்டு இணைந்து கொண்டது.

சமீபத்தில் வடயேமனும் தென்யேமனும் இணைந்து கொண்டன.

தற்போது இரு ஜேர்மனிகளும் இணையும் நிலையில் இருக்கின்றன. எஞ்சி இருப்பவை வடகொரியாவும் தென் கொரியாவுமே.


ஜோர்ஜ் புஷ்

வாஷிங்டனில் இடம்பெற்ற கோர்பச்சேவ் - ஜோர்ஜ் புஷ் பேச்சுவார்த்தையில் கொரிய இணைப்பு விவகாரமும் ஆராயப்பட்டது.

சோவியத் அதிபர் கோர்பச்சேவ் கடந்தவாரம் வாஷிங்டனில் அமெரிக்க அதிபருடன் நான்கு நாள் உச்சிப் பேச்சுக்களை நடத்தி இருந்தார். ஆறுமாதங்களுக்குமுன் அமெரிக்க - சோவியத் அதிபர்கள் மோல்டாவில் (Malta) சந்தித்திருந்தனர். அந்தச் சந்திப்பின்போதே இரு நாடுகளுக்கும் இடையிலான 45 வருடகால கெடுபிடி யுத்தம் கிட்டத்தட்ட முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. சமாதானத்துக்கான கதவுகள் திறக்கப்பட்டிருந்தன.

கடந்த வாரம் வாஷிங்டனில் இடம்பெற்ற சந்திப்பு இரு வல்லரசுகளும் நட்புறவை நோக்கி மேலும் நெருங்கி வருவதற்கு வழி வகுத்துள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுக்கள் ஐரோப்பாவில் மட்டும் அல்ல ஆசியாவிலும் அரசியல் மாற்றங்களுக்கான பாதையைத் திறந்துவிட்டிருக்கின்றன என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### 2 பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு

வாஷிங்டனில் கடந்த வாரம் நடைபெற்ற கோர்பசேவ் - புஷ் சந்திப்பு இரு முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறி இருந்தது. ஒன்று ஜேர்மன் பிரச்சினை. ஒன்றுபட்ட ஜேர்மனி நேட்டோ எனப்படும் வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் ஸ்தாபனத்தில் இணைய வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. இதற்கு சோவியத் யூனியன் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

நேட்டோ, சோவியத் யூனியனின் அச்சுறுத்தல்களை முறியடிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும். ஒன்றுபட்ட ஜேர்மனி நேட்டோவில் இணைவது வல்லரசுகளின் ஆயுத சமநிலையைப் பாதிக்கும் என்று சோவியத்யூனியன் கருதுகிறது. இந்தப் பிரச்சினையில் சோவியத் யூனியன் விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை.

படைக்குறைப்பு அணு ஆயுதக் குறைப்புத் தொடர்பாக அமெரிக்காவுடன் தற்போது நடத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளை நிறுத்தி விடப்போவதாகவும் சோவியத் யூனியன் எச்சரிக்கை செய்துள்ளது.

கடந்த வார உச்சிப்பேச்சில் தீர்வுகாணத் தவறிய மற்றைய பிரச்சினை லித்துஏனிய பிரச்சினை ஆகும்.

லித்துஏனியா மீதான சோவியத் யூனியனின் பொருளாதாரத்தடையை நீக்கும் முயற்சியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தோல்வி கண்டுவிட்டார். லித்துஏனியா விவகாரம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸ் அதிபர் ஜோர்ஜ் புஷ் மீது பல நிர்ப்பந்தங்களைச் செலுத்தி வருகிறது. அமெரிக்க - சோவியத் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு நிபந்தனையாக லித்து ஏனியா மீதான சோவியத் பொருளாதாரத் தடைகள் நீக்கப்படவேண்டும் என்பது அமெரிக்க காங்கிரஸின் கோரிக்கை. அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்யவேண்டுமென்று சோவியத் யூனியன் நீண்டகாலமாகக் கோரி வருகிறது.

### 2 ஒப்பந்தங்கள்

கடந்தவாரம் நடைபெற்ற நான்கு நாள் உச்சிமாநாட்டின் முடிவில் இரசாயன ஆயுதங்களின் இருப்பைக் குறைப்பது தொடர்பான ஒப்பந்தமும் வர்த்தகம், விஞ்ஞானம், கலாசாரம் தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டன. இரு தலைவர்களும் தொடர்ந்து சந்திப்புகளை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் அடுத்த உச்சிமாநாடு சோவியத் யூனியனில் நடைபெறும்.

கடந்தவாரம் இடம்பெற்ற உச்சிப் பேச்சுகளில் காஷ்மீர், ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு போன்ற சர்வதேச நெருக்கடிகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அதிபர் கோர்பச்சேவுக்கு உள் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

★ சோவியத் யூனியனின் குடியரசுகளின் ஒன்றான ரஷ்ய சம்மேளனத்தின் தலைவராக பொரிசி யெல்ட்சின் (Borisy Yeltsin) தெரிவுசெய்யப்பட்டது.

★ கோர்பச்சேவின் புதிய பொருளாதாரக் கொள்கை விலை உயர்வுகளை ஏற்படுத்தலாம் என்ற பீதி.

★ ஆர்மேனியாவில் புதிதாக ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள்.

★ பால்டிக் குடியரசு நாடுகளின் சுதந்திரபிரகடனப் பிரச்சினை தீர்வு இன்றி இழுபடுவது;

இவையே அதிபர் கோர்பச்சேவ் உள் நாட்டில் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை ஆகும்.

சோவியத் யூனியனின் அதிசக்தி வாய்ந்த குடியரசும் பெரிய குடியரசுமான ரஷ்ய சம்மேளனத்தின் தலைவராக யெல்ட்சின் தெரிவானது அதிபர் கோர்பச்சேவின் தலைமைக்கு ஒரு சவாலாகக் கருதப்படுகிறது. கோர்பச்சேவைக் கவிழ்ப்பதற்காக சதி ஒன்று உருவாகுவதாகவும் யெல்ட்சின் தெரிவுடன் வதந்திகள் பரப்பப்பட்டிருந்தன;

இந்த தசாப்தத்தின் சர்வதேச அரசியல் வாதியாக சகல தரப்பினராலும் போற்றப்படுவர் சோவியத் அதிபர் கோர்பச்சேவ்.

அவருக்கு வீழ்ச்சி ஏற்படுமானால் இந்த நூற்றாண்டின் பாரிய இழப்பாக அது கருதப்படும். ★

உலக உலா
ஏம்.பி. சீலன்

## ஜனாதிபதியைத் துரத்திய பொலீஸ் படை!

● அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ஹரிட்ரூமன் ஒரு சமயம் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவருக்குப் பின்னால் பொலிஸ் பாராவும் சென்று கொண்டிருந்தது.

அப்போது மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு தனியார் கார். ட்ரூமனின் கார் அருகே வந்துநின்றது. காரிலிருந்து எட்டிப் பார்த்து 'என்ன விஷயம்?' என ட்ரூமன் அந்தக் கார் ஓட்டி வந்தவனிடம் கேட்டார்.

அந்த மனிதனோ உடனே 'என்ன விஷயமா? 'உன் பின்னால் பொலிஸ் படை துரத்துக்கொண்டு வருகிறது ஜாக்கிரதை' என்று ட்ரூமனை எச்சரித்துவிட்டுச் சென்றான். ★

## சொற்சிலம்பம் இல: 115

பரிசு பெற்றவர் விவரம் வருமாறு;

**முதலாவது பரிசு:**
அ. தணிகாசலம், ஐயனார் கோவில் விளக்கடி, கந்தரோடை வீதி, சுன்னாகம்.

**இயண்டாவது பரிசு:**
ப. தெய்வேந்திரன், 7, பேக்கரி லேன், யாழ்ப்பாணம்.

**மூன்றாவது பரிசு:**
திருமதி. பா. விஜயலட்சுமி, தபாலகம் முன்பாக, கோப்பாய்.

**சொற்சிலம்பம் இல: 115 சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்:**
1. ஆறுமுகன் 6. கடலலை 7. யாகம் 8. ண்அ 9. யானை 11. திரள் 12. மான் 13. ம்பலசு 15. ஆலை 16. ல்க 17. கரு 20. வட 21. குருதி 22. சம்பல்.

**மேலிருந்து கீழ்:**
1. அகண்டம் 2. றுலசு 3. முட 4. கலையரசு 5. கம்சன் 7. யானை 10. முள் 11. இலகவதி 12. மாலை 14. பல் 15. ஆருடம் 18. அணில் 19. தொகு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org